|| ஸ்ரீ: ||

ஸ்ரீ துர்வாஸ மஹர்ஷியால் அருளிச் செய்யப்பட்ட

|| श्रीशक्तिमहिम्नःस्तोत्रम् ||

ஸ்ரீசக்திமஹிம்ந ஸ்தோத்திரம்.

(மூலமும்)

சென்னை ஸ்ரீ குஹாநந்தமண்டலி கிரந்த பிரசுராலய
சொந்தக்காரரும், நூலாசிரியருமாகிய

பிரஹ்மஸ்ரீ, ந. சுப்பிரமண்ய அய்யரால்

இயற்றப்பட்ட

ஸ்ரீ ரஹஸ்யார்த்த விமர்சினி

என்னும் தமிழ் விருத்தியுரையும்.

(முதற்பதிப்பு)

N. RAJAM & CO.,


VEPERY, MADRAS.

காபிரைட்] 1943 [அணா 12

SRI

SAKTI MAHIMNA STOTRAM

(With Tamil Commentary)



N. SUBRAMANIA IYER

PRINTED AT
THE SRI BALAMANORAMA PRESS,
MYLAPORE, MADRAS.

முன்னுரை

ஸ்ரீ த்ரிபுராமஹிம்நம் அல்லது சக்திமஹிம்ந ஸ்தோத்திரம் என்னும் இந்நூல் ஸ்ரீ துர்வாஸ மஹர்ஷியால் இயற்றப்பட்டதொன்றாகும். இவர் பரமேஸ்வரனாகும் ஸ்ரீ கைலாஸபதியின் அம்சமாய், அத்திரி மஹர்ஷிக்கும் அநஸூயாதேவிக்கும் பிறந்தவர். இவர் பரமேஸ்வரதுல்லியராதலின் ஸர்வக்ஞகல்பர். இவருக்குக் குரோதபட்டாரகரென்று ஒரு பட்டப் பெயருண்டு. பட்டாரக பட்டம் தரித்தவர்கள் மூவரே யாவர். அவர்கள் பரமசிவபட்டாரகர், குரோதபட்டாரகர், சிருங்காரபட்டாரகரென்பவராவர். இவர்கள் முறையே பரமேஸ்வரன், ஸ்ரீ துர்வாஸர், காளிதாஸர் என்பவராவர்.

துர்வாஸர் பரதேவதா ஸ்தோத்திராசாரியர்களுக்குள் மிகச்சிறந்தவரும் முதன்மையானவருமாவர். பரதேவதா ஸ்தோத்திராசாரியர்கள் ஒவ்வொரு யுகத்திற்கு ஒவ்வொருவராக நான்கு யுகங்களுக்கும் நால்வராவர். அவர்கள் கிருதயுகத்திற்கு ஸ்ரீ துர்வாஸமஹரிஷியும், திரேதாயுகத்திற்கு ஸ்ரீ பரசுராமரும், துவாபர யுகத்திற்கு ஸ்ரீ தௌம்மியரும், கலியுகத்திற்கு ஸ்ரீ மூகாசாரியருமாவர்.

இவர் இரண்டாயிரம் ஸ்லோகங்கள் இயற்றியுள்ளதாகத் தக்க பிரமாணங்களால் ஏற்படினும், தற்போது சில நூற்றுக்கணக்கான, இரண்டு மூன்று ஸ்தோத்திரங்களே காணப்படுகின்றன. அவை ஆர்யாத்விசதி யென்னும் ஸ்ரீ லலிதாஸ்தவரத்தினமும் இதுவுமேயாகும்.

பரசம்புமஹிம்ந ஸ்தோத்திரமென்னும் ஒரு சிறந்த நூல் இவரால் இயற்றப்பட்டதாக எழுதியிருக்கின்றது. இதில் சிலருக்கு அபிப்பிராய பேத முண்டெனத் தெரிகின்றது. காஶ்மீர சைவத்திற்குச் சம்பந்தப்பட்ட ஒரு துர்வாஸருண்டு. பரசம்புமஹிம்ந ஸ்தோத்திரம் அத்துர்வாஸரால் இயற்றப்பட்டிருக்கவேண்டு மென்பது பலரது அபிப்பிராயமாகும்.

அன்றியும், அநஸூயா கர்ப்பஸம்பூதரும் குரோத பட்டாரகருமாகிய ஸ்ரீ துர்வாஸர் ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்தின் அதிஷ்டாத்ரியாகும் ஸ்ரீ காமாக்ஷி யாலயத்திற்குச் சம்பந்தப்பட்டவராக ஏற்படுகின்றது. அது வருமாறு:—

ஸ்ரீ காமாக்ஷீ விலாசம் 12ம் அத்தியாயம்.

ततः शम्भुर्महादेवो नत्वा स्तुत्वा परात्पराम् ।
प्रीतिमाश्रित्य भक्तेभ्यो ददौ वरमनुत्तमम् ॥
पराविर्भावदिवसे काञ्च्यामान्तरमागतः ।
योऽर्चयेदत्र कामाक्षीं कोटियज्ञफलं लभेत् ॥
इति दत्वा वरं शम्भुः देव्याः पीठे तिरोदधे ।
दुर्वाससः स्वरूपेण स शिवः पुनरालयम् ॥
बाह्यादागत्य शिष्यैश्च सहितः स महामुनिः ।
कौशिकाख्यऋषेः पुत्रं तथा गौतमनन्दनम् ॥
काश्यपस्य सुतं चैव तथात्रेस्तनुसंभवम् ।
भरद्वाजकुमारं च कुण्डिनीपुत्रकं तथा ॥
क्रमादाकाशभूम्यन्तं ब्रह्मकल्पान्तमेव च ।
पूजार्थं तु महादेव्याः प्रतिष्ठाप्य क्रमेण तु ॥

प्रवालमेरुसंयुक्तां हेमरुद्राक्षमालिकाम् ।
सौभाग्यकुंकुमं चैव गोपीमृच्चन्दनेऽपि च ॥
देव्यास्तु शासनादेवं दत्वालंकारकाम्यया ।
गोभूवस्त्रहिरण्यानि दत्वा दीक्षां यथाक्रमात् ॥
कृत्वा चिन्तामणिं तन्त्रं दत्वा देव्यर्चनाविधिम् ।
अहमद्य तु दुर्वासास्त्रेतायां रेणुकासुतः ॥
धौम्योऽहं द्वापरयुगे कलौ मूकाह्वयः क्रमात् ॥
युगे युगे संभवामि कृते साहस्रयुग्मकम् ।
तस्मिन् पादविहीनेन त्रेतायां द्वापरे द्विजः ॥
पुनः पादविहीनेन कलौ पादयुगेन च ।
कृतिं करोमि कामाक्षीस्तवमित्यभिधानतः ॥
ततो ज्ञात्वा च मां यूयं दूर्वासा इति भावतः ।
मां गुरुत्वेन संपूज्य यात मच्छिष्यभावकम् ॥ इति ।

மேற் கூறப்பட்ட பிரமாணங்களால், ஸ்ரீ துர்வாஸர் பரமேஸ்வர ஸ்வரூபரென்பதும், காஞ்சீ க்ஷேத்திரத்தில் ஸ்ரீ காமாக்ஷீதேவியைப் பிரதிஷ்டை செய்தவரென்பதும், "ஸ்ரீ ஸௌபாக்கிய சிந்தாமணி" யென்னும் ஒரு சிறந்த பூஜாகல்ப பத்ததியையியற்றி யருளியவரென்பதும், கிருதாதி நான்கு யுகங்களிலும் ஸ்ரீ காமாக்ஷீ ஸ்தோத்திராசாரியர்களாய் அவதரித்தவ ரென்பதும் நன்கு புலப்படுகின்றன.

இந்த ஸ்தோத்திரத்தின் அமைப்பு.

சக்திமஹிம்ந ஸ்தோத்திரமாகும் இந்நூல் அறுபத்தொரு சுலோகங்கள் கொண்டதாய் விளங்குகின்றது.

யுகாந்தரங்களாய் விளங்கி வருகின்ற கிரந்தமாதலின் இது தேசத்துக்குத் தேசம், இடத்திற்கு இடம் ஏற்றக் குறைச்சலான ஸ்லோக ஸங்கியை யோடும், பற்பல வித மான பாடபேதங்களோடும் கூடி இலங்குகின்றது. இதில் உள்ள அறுபத்தொரு சுலோகங்களிலும், நுண்ணறிவோடு ஆராய்ந்து பார்க்கு மிடத்து இரண்டாவது ஸ்லோகம் முதல் ஐம்பத்திரண்டாவது ஸ்லோகம் வரையுள்ள ஐம்பத் தொரு சுலோகங்கள் தாம் இந்நூலின் பிரதான பாக மாக ஏற்படுகின்றது. முதல் சுலோகம் மங்களாசரணம். 53ல் மானஸ பூஜையும் 54 முதல் 61 வரை எட்டு சுலோ கங்களில், பலசுருதியும், உபாஸகர்களின் மஹிமையும் கூறப்பட்டுள்ளன. ஆதலின், இந்த ஸ்தோத்திரம் மாத்ருகாக்ஷமாலையின் ஸங்கியையாகும் ஐம்பத்தொரு சுலோகங்களால் இயற்றப்பட்டுள்ளதென கருதத்தக்கதா யிருக்கின்றது.

இதில் வேத சிரோ பாகங்களாகிய உபநிஷத் பிரதி பாத்யமான பல பரம ரஹஸ்யங்களும், சாக்ததந்த்ர ஸித்தமான பல சிறந்த உண்மைகளும், மந்த்ர சாஸ்திர நுட்பங்களும், மந்த்ரோத்தாரங்களும் அடங்கியுள்ளன.

பொதுவாய் ஸ்தோத்திரக் கிரந்தங்கள் அறுவகைப் படும். அவை நமஸ்காரம், ஆசீர்வாதம், ஸ்வரூபஸித்தாந்தம், பராக்கிரமவர்ணனம், மஹிமை, பிரார்த்தனை யென்பன வாம். இவற்றுள், இந்த ஸ்தோத்திரமானது மஹிமை, பராக்கிரமம், ஸ்வரூப ஸித்தாந்த்தம், பிரார்த்தனை யென்னும் பலபகுதிகளை யடக்கிக்கொண்டு விளங்குகின்றதெனக் கூற லாம். பிரதானமான பாகத்தில் பதினெட்டு ஸ்லோகங் கள் மந்த்ரோத்தார வடிவமாயும், ஒன்பது ஸ்லோகங்

கள் பரதேவதையின் பாதாதிகேசாந்த வர்ணனையாயும், மற்றவை பரதேவதையின் மஹிமை, உபாஸனையின் மஹிமை, ஆயுதங்களின் பிரபாவம், உபாஸகர்களின் சிறப்பு முதலியவைகளைக் கூறுவனவாயுமிருக்கின்றன.

வடமொழி வியாக்கியானம்.

இதற்கு வடமொழியில் ஒரு சிறந்த வியாக்கியானம் இருக்கின்றது. இந்த மஹிம்ந ஸ்தோத்திரத்தின் மஹிமை இவ்வியாக்கியனத்தால் நன்கு விளங்கும். இதையியற்றியவர் ஸ்ரீநித்தியாநந்தநாத ரென்னும் ஒரொப்பற்ற வித்யோபாஸக துரந்தரராவர். இவர் இன்னகாலத்தில் இன்னதேசத்தில் இருந்தார் என்று கூறுதற்கு யாதொரு பிரமாணமும் கிடைக்கவில்லை. இவ்வியாக்கியானம் காவ்யமாலா கிரந்த பிரசுராவளியில் 11வது பிரசுரத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வருமையான வியாக்கியானமானது மந்த்ர சாஸ்திரத்திலும், ஸ்ரீ வித்யா தந்த்ரங்களிலும் அத்வைத வேதாந்த சாஸ்திரத்திலும் நல்ல பயிற்சியுடையவர்க்கு மாத்திரம் விளங்குவதாய் இருக்கின்றதேயன்றி ஸம்ஸ்க்ருத பாஷாக்ஞானம் நன்குள்ளவர்க்குங் கூட விளங்குவதாயில்லை.

இத்தகைய அருமை பெருமைகள் வாய்ந்த இந்த மஹிம்ந ஸ்தோத்திரத்தை, வியாக்கியானத்தோடு தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென்னும் நல்லுணர்வு சென்னை, புரசவாக்கம் N. ராஜம் அண்ட் கோ சொந்தக்காரரும், ஸ்ரீபரதேவதா பக்தருமாகிய ஒருவருக்கு ஏற்பட்டு, அவரது தூண்டுதலின்மேல் அடியேனால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்நூலில் மூலஸ்லோகம், அதற்கு அவதாரிகை, தாத்பர்யம், விசேஷவுரை இவைகள் அடங்கியுள்ளன. வடமொழி வியாக்கியானத்தைத் தழுவியும், அதிலுள்ள சில ரஹஸ்ய விஷயங்களை இதர பிரமாண சாஸ்திரங்களின் உதவியைக்கொண்டு நன்குவிளக்கியும் இது இயற்றப்பட்டுள்ளது.

இந்நூல் ஸ்ரீ வித்தியோபாஸகர்களுக்கு மிகவும் அவசியமாயிருக்கு மென்பதற்கு விஷய ஸூசிகையைப் பார்த்தலே சான்ருகும்.

இப்பதிப்பு மேற்படி ராஜம் அண்ட் கோ சொந்தக்காரரின் திரவிய ஸஹாயத்தால் வெளியிடப்பட்டுள்ளதால் இம்முதற் பதிப்பு மாத்திரம் அவருக்கு உரிமையாக்கப்பட்டுள்ளது.

இவ்வரிய பெரிய நற்காரியத்தை யியற்றிய மேற்படி கம்பெனியாருக்குப் பரதேவதை பிறழாத பக்தியும், சரீர ஆரோக்கியமும், பொருட் செல்வத்தோடு அருட் செல்வமும் அருள்வாளாக.

இதை யெல்லாச் சிறப்புக்களும் நன்கமைய அச்சிட்டுத் தந்தவரும், அடியேனது ஆத்ம நண்பரும், சென்னை, மயிலை, பாலமனோரமா அச்சியந்திரசாலையின் சொந்தக்காரருமாகிய பிரஹ்மஸ்ரீ C. சங்கரராம சாஸ்திரிகள் M. A., B. L., அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனங்கள் அளிக்கின்றேன்.

இதில், அடியேனது பிரமாதாதி தோஷங்களாலும், ஆராய்ச்சிக் குறைவினுலும் பலபிழைகள் ஏற்பட்டிருக்கலாம்; அவற்றை நுண்ணறிவுடைய பெரியோர் அடியேன்

பால் அருள் புரிந்து தெரிவிப்பாரேயாயின் மறுபதிப்பில் அவற்றைத் திருத்தி வெளியிடச் சித்தமாயிருக்கின்றேன்.

எந்த ஸத்குரு சரணாரவிந்தங்களின் அநுக்கிரஹ வலிமை யொன்றினாலேயே இந்நூல் வெளியாயிற்றோ அவரது பாதுகைகளுக்கே இது அர்ப்பணம் செய்யப் பட்டது.

ஸ்ரீ குஹாநந்த மண்டலி
கிரந்த பிரசுராலயம்,
சென்னை,
30-11-1943.

இங்ஙனம், விதேயன்,
ந. சுப்பிரமணிய அய்யர்.

விஷய ஸூசிகை

—:o:—

ஸ்ரீதுர்வாஸ மஹர்ஷியால் அருளிச் செய்யப்பட்ட

சக்திமஹிம்ந ஸ்தோத்திரம்.

(மூலமும்)

ரஹஸ்யார்த்த விமர்சினியென்னும் விருத்தியுரையும்.

(அவதாரிகை) ஸகல ஆகமங்களின் ஆசார்யர்களுக்குச் சக்கிரவர்த்தியும், ஸ்ரீ அநஸூயையயின் கர்ப்பத்தில் அவதரித்த ஸாக்ஷாத் பரசிவஸ்வரூபரும் குரோதபட்டாரகரென்னும் திருநாமமுடையவருமான ஸ்ரீ துர்வாஸ மஹர்ஷியானவர், தமது ஆத்மாபின்ன ஸ்ரீ லலிதா மஹா த்ரிபுர ஸுந்தரீ ஸ்வரூபத்தை, ஸந்தேஹ விபரீதங்களற அபரோக்ஷமாய் நன்குணர்ந்து, அவ்வநுபவ மஹிமையை முமுக்ஷுக்களினிடத்துள்ள பெருங் கருணையால் ஸ்தோத்திரம் செய்ய நினைத்துப் பெரியோர்களின் ஸம்பிரதாயத்தின்படி, ஆரம்பத்தில் இஷ்டதேவதாஸ்மரணரூப மங்கலம் இயற்றுகின்றனர்.

मातस्ते महिमा वक्तुं शिवेनापि न शक्यते ।
भक्त्याहं स्तोतुमिच्छामि प्रसीद मम सर्वदा ॥ १ ॥

(தாத்பரியம்) ஹே தாயே! உமது மஹிமையானது பரமசிவனாலும் சொல்லத்தக்கதல்ல; அப்படியிருந்தும், அடியேன் அன்பாகிய பக்தியால் உமது ஸ்வரூபமாகும்

மஹிமையை ஸ்தோத்திரம் செய்யவிரும்புகின்றேன். ஆதலின் அடியேனுல் செய்யமுடியாத காரியத்தை நீயே பரிபூர்த்திசெய்து என்னை அநுக்கிரஹிப்பாயாக.

(விசேஷவுரை)

नमस्कारस्तथाशीश्च सिद्धान्तोक्तिः पराक्रमः ।
विभूतिः प्रार्थना चेति षड्विधं स्तोत्रलक्षणम् ॥

என்னும் பிரமாணத்தின்படி ஸ்தோத்திரமென்பது, நமஸ்காரம், ஆசீர்வாதம், ஸ்வரூப ஸித்தாந்தம், பராக்கிரம வர்ணனை, மஹிமையின் வர்ணனை, பிரார்த்தனையென அறுவகைப்படும்.

இங்கே கூறப்பட்ட மங்கலமானது ஸ்வரூப ஸித்தாந்தம், மஹிமாவர்ணனம், பிரார்த்தனை யென்னும் மூன்று பகுதிகளையும் உடையதாகும்.

மனோ வாக்குக்களுக்கெட்டாத பரதேவதையின் மஹிமையை எங்ஙனம் வர்ணிக்கமுடியுமெனின், பக்தியினுல் ஒருகால் முடியலாம். ஏனெனின், ஸ்வஸ்வரூபாநுஸந்தானமே பக்தியெனப்படும். பக்திமாத்திரம் போதாது; அஹம்பத லக்ஷ்யார்த்த ஆத்மாபின்ன பரதேவதையின் கடாக்ஷமும் வேண்டும். இது ஸத்குருவின் அநுக்கிரஹத்தால் மட்டுமே ஸித்திப்பதாகும். (1)

(அ—கை) தமது ஆத்மமந்த்ர அதிஷ்டான தேவதையாகிய ஸ்ரீமஹாத்ரிபுர ஸுந்தரியின் வித்யாஸ்வரூப ஸூக்ஷ்மரூபமானது தமது ஹ்ருதயத்தில் நன்கு ஸ்புரிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றனர்.

श्रीमातस्त्रिपुरे परात्परतरे देवि त्रिलोकीमहा-
सौन्दर्यार्णवमन्थनोद्भवसुधाप्राचुर्यवर्णोज्ज्वलम् ।
उद्यद्भानुसहस्रनूतनजपापुष्पप्रभं ते वपुः
स्वान्ते मे स्फुरतु त्रिकोणनिलयं ज्योतिर्मयं वाङ्मयम् ॥२॥

(தா–ம்) ஓ லோகமாதாவே! ஸ்தூல ஸூக்ஷ்ம காரண மென்னும் மூன்று சரீரங்களிலும் அதிஷ்டானமாய் விளங்குபவளே!! ஸர்வோத்க்ருஷ்டமாய்ப் பிரகாசிப்பவளே!! மூவுலகங்களிலுமுள்ள அளவுகடந்த ஸௌந்தர்யமாகும் ஸமுத்திரத்தைக் கடைய, அதினின்றுண்டான பரம ஸாரமான அம்ருதம் போல் வெண்மை நிறமுள்ளதும், ஏக காலத்திலுதித்த பல்லாயிரம் ஸூர்யர்களைப் போலவும், புதிதாக மலர்ந்த செம்பருத்திமலரைப்போலவும் சிவந்த நிறமுள்ளதும், மூன்று லோகங்களுக்கும் உற்பத்தி ஸ்தானமாயுள்ளதும், ஸூர்ய சந்திர அக்கினிமய தேஜோரூபமாக விளங்குவதும், சப்த ஸ்வரூபமாயிருப்பதுவுமான உமது வித்யா (மந்த்ரா) த்மக ஸூக்ஷ்மரூபமானது எனது ஹ்ருதயத்தில் நன்கு ஸ்புரிக்கட்டும்.

(வி–ரை) இந்த ஶ்லோகத்தினால், மஹர்ஷி துர்வாஸர் ஸ்ரீ வித்தையாகும் மஹா ஷோடசியையும், காமகலா ஸ்வரூபத்தையும் உத்தாரம் செய்கின்றனர். அதன் விமர்ஶமாவது :—

श्री = श्रीं ; मा = ह्रीं ; अतः = பிறகு ; त्रिपुरा = क्लीं ऐं सौः ; ई = ओं ; परात् = ह्रीं ; परतरा = श्रीं ; देवि = தேவியே! त्रिलोकी = क5 ह6 स4 ; महासौन्दर्यं = सौः ; अर्णवमन्थनोद्भव सुधाप्राचुर्यवर्णोज्ज्वलं = ऐं ; उद्यद्भानुसहस्रनूतनजपापुष्पप्रभं = क्लीं ; ते वपुः = ह्रीं ; स्वान्ते = வித்தையின் இறுதியில் मे = मा + ई. मा = श्रीं ; ई = காமகலை.

त्रिकोणनिलयं ज्योतिर्मयं वाङ्मयम् ।

ஸ்வர்க்க மர்த்திய பாதாளமென்னும் மூன்று லோகங்களும் அல்லது ஸ்தூல ஸூக்ஷ்ம காரணமென்னும் மூன்று சரீரங்களும் நிஸ்ஸேஷமாய் லயிக்கும் இடம் துரீய ஸ்வரூப காமகலையேயாகும். அது ज्योतिर्मयं = ஸோம ஸூர்யாக்னி ஸ்வரூபமானது; वाङ्मयं = பஶ்யந்தீ, மத்யமா, வைகரீ என்னும் வாக்குக்களுக்குக் காரணமானது. त्रिकोणनिलयं = த்ரிகோணம் பீஜத்திரய வடிவமானது. அது ஒடுங்கும் ஸ்தானம் மஹாபிந்து; மஹாபிந்துவே காமகலை.

ஆகவே இந்த ஶ்லோகத்தால் மஹா ஷோடசீ வித்தையும், காமகலா வித்தையும் உத்தாரம் செய்யப்பட்டது அறியத்தக்கது. (2)

(அ—கை) இந்த ஶ்லோகத்தில், மூலாதார சக்கிரத்திலுள்ளவளும், ஸகலமான வித்தைகள், மந்த்ரங்கள் சக்கிரங்கள் முதலியவற்றிற்குக் காரணஸ்வரூபமானவளும், ஆதாராதி ஷட் சக்ரங்களைப் பேதித்துக்கொண்டு மேலே போய், ஸஹஸ்ரார கமல கர்ணிகையிலுள்ள திரிகோண ஸிம்ஹாஸனத்தில் பிரகாசிக்கும் சித்ரூபிணியுமான குண்டலினீ சக்தி ஸ்துதிக்கப்படுகின்றனள்.

आदिक्षान्तसमस्तवर्णसुमणिप्रोते वितानप्रभे
ब्रह्मादिप्रतिमाभिकीलितषडाधाराब्जकक्षोन्नते ।
ब्रह्माण्डाब्जमहासने जननि ते मूर्तिं भजे चिन्मयीं
सौषुम्नायतपीतपङ्कजमहामध्यत्रिकोणस्थिताम् ॥ ३ ॥

(தா—ம்) ஹே ஜனனீ! अ முதல் क्ष வரையிலுள்ள ஐம்பத்தோரக்ஷரங்களாகிற நல்ல முத்துக்களாலலங்கரிக்

கப்பட்ட மேல்தட்டோடு கூடி விளங்குவதும், மூலாதாராதி ஷட் சக்கிரங்களின் நடுவில் பிரஹ்மா விஷ்ணு முதலிய தேவர்கள் அமர்ந்து விளங்க அவற்றிற்கெல்லாம் உயர விளங்குவதும் ஆகிய பிரஹ்மரந்திர ஸ்தானத்திலுள்ள ஸஹஸ்ரதள கமல கர்ணிகையில், மஹாத் திரிகோணகாரமாயுள்ள பெரிய ஆஸனத்தில், ஸுஷும்நா நாடிக்குச் சம்பந்தப்பட்டதும், மஞ்சள் நிறமுள்ளதுமான பெரிய தாமரைப் புஷ்பத்தின் கர்ணிகையிலுள்ள த்ரிகோணத்தில் (பிந்துரூபமான ஸ்வயம்பு லிங்கத்தைச் சுற்றிக்கொண்டு) இருக்கிறதும், சித்ஸ்வரூபமானதுமான குண்டலினீயென்னும் உமது ஸ்வரூபத்தைத் தியானம் செய்கின்றேன்.

(வி—ரை) ஸுஷும்நா நாடியானது பிரஹ்மரந்த்ரத்திலுள்ள ஸஹஸ்ரதள கமலத்தின் நாளமா (தண்டா)க விளங்குகின்றது. மூலாதாரம் முதல் ஆக்ஞாந்தமான சக்கிரங்களில் அகாராதி க்ஷகாராந்தமான மாத்ருகைகள் விளங்குகின்றன. (இம்மாத்ருகைகளை மணிகளாகவும், ஸுஷும்நா நாடியை நூலாகவும், இரண்டையும் சேர்த்து அக்ஷமாலையாகவும் பாவித்து ஜபம் செய்பவர் ஸகல வித்தியா பாரங்கதராவர்.)

மஹா ஆஸனமென்பது ஸஹஸ்ராரம்.

மஞ்சள் நிறமான ஸஹஸ்ரதள கமலம் மூலாதாரத்திற்குக் கீழுள்ள குளஸஹஸ்ராரமாகும். இதுதான் குண்டலினீஸ்தானம். இதன் நடுவிலுள்ள முக்கோணத்திற்கு அ க தா ஸன மென்றுபெயர். இக் குளஸஹஸ்ராரத்திலிருந்து குண்டலினீ சக்தியை எழுப்பி மூலாதாரம் முதலிய ஷட்சக்கிரங்களின் மூலமாய்ச் செலுத்திப் பிரஹ்மரந்த்ரத்திலுள்ள அகுள ஸஹஸ்ராரத்தில் சித்கலாஸ்வரூபமாய்த்தியானம் செய்தல் மிகச்சிறப்பானது.

இதற்குத்தான் சிவயோக மென்று பெயர். ஜீவப்பிரஹ்மைக்கிய மென்பதுவு மிதுவேயாகும். இத்தகைய குலாகுல ஐக்கியத்தினால் சித்சந்திர மண்டலமாகும் பிரஹ்மாண்டத்திலிருந்து சைதன்யாம்ருதமானது அகண்டமாய்ப் பிரஸரித்து ஒவ்வொரு சக்கிரத்திலுமுள்ள தேவதையை அபிஷேகம் செய்வித்து, அந்த அந்த ஆதாரங்களில் பிந்துக்களாக அமைகின்றது. இந்த சைதன்யாம்ருதபிந்துக்களே அகாராதி க்ஷகாராந்தமான அக்ஷரங்களாகும். இவைகளே நல்ல முத்துக்களெனக் கூறப்பட்டது. இம்முத்துக்கள் ஸுஷும்னையாகும் பிரஹ்மநாடீஸூத்திரத்தில் கோக்கப் பட்டிருக்கின்றன.

இதன் சிகரத்தில் விளங்குவது பிரஹ்மாண்ட கமலம். இக்கமலத்தின் மத்தியில் பிரஹ்ம சக்தியாகும் சித்கலையைத் தியானித்தலே ஸமயமத ரஹஸ்யமாகும். விஶ்வரூபிணியாயுள்ள குண்டலினீ சக்தியை விஶ்வ ஸாக்ஷிணியாயும் விஶ்வாதிஷ்டாத்திரியாயுமுள்ள சிதாநந்தஸ்வரூபமாய்த் தியானிக்கும் நிதித்தியாசனம் இந்த ஶ்லோகத்தில் ஸூசிக்கப் பட்டுள்ளது உணரத்தக்கது.

அன்றியும், அந்தர்மாத்ருகா யோகினீ நியாசங்களும் இதனால் குறிப்பிடப் படுகின்றன. (3)

ஷடாதார விளக்கம்.

1. மூலாதாரம்.	நான்கு தளம்.	व முதல் स வரை	4	மஹாகணபதி.
2. ஸ்வாதிஷ்டானம்.	ஆறு தளம்.	ब முதல் ल வரை	6	பிரஹ்மா.
3. மணிபூரகம்.	பத்து தளம்.	ड முதல் फ வரை	10	விஷ்ணு.
4. அநாஹதம்.	துவாதச தளம்.	क முதல் ठ வரை	12	ருத்ரன்.

5. விசுத்தி. ஷோடச தளம். அ முதல் அ: வரை 16 மஹேஶ்வரன்.

6. ஆக்ஞை. இரண்டு தளம் ஹ முதல் க்ஷ வரை 2 ஸதாசிவன்.

குறிப்பு:—மாத்ருகைகள் அ முதல் க்ஷ வரையில் ஐம்பத்தொன்றாகும். மூலாதாரம் முதல் ஆக்ஞைவரை ஆறு ஆதாரங்களிலும் ஐம்பது மாத்ருகைகளே விளங்குகின்றன. ள காரம் ல காரத்தில் அந்தர்ப்பூதமாய் இருக்கின்றதென்பது உணரத்தக்கது.

(அ—கை) ஆசிரியர் இந்த ஸ்லோகத்தினால் குண்டலினீ சக்தியை ஸஹஸ்ரதள கமலத்தில் தியானம் செய்யும் விதத்தைக் கூறுகின்றனர்.

या बालेन्दुदिवाकराक्षिमधुरा या रक्तपद्मासना
रत्नाकल्पविराजिताङ्गलतिका पूर्णेन्दुवक्त्रोज्ज्वला ।
अक्षस्रक्सृणिपाशपुस्तककरा या बालभानुप्रभा
तां देवीं त्रिपुरां शिवां हृदि भजेऽभीष्टार्थसिद्ध्यै सदा ॥४॥

(தா—ம்) எந்த தேவியானவள் பாலசந்திரனையும் பாலஸூர்யனையும் நேத்திரங்களாக வுடைத்தாய் விளங்குகின்றனளோ, எந்த தேவியானவள் செந்தாமரை மலரில் அமர்ந்து, தனது அங்கங்களில் நவரத்தினகசிதமான ஆபரணங்களை அணிந்துள்ளவளோ, எந்த தேவியானவள் பூர்ண சந்திரனை யொத்த முகமண்டலத்தோடு பிரகாசிக்கின்றனளோ, எவள் தனது கரங்களில் அக்ஷமாலை, அங்குசம், பாசம், புஸ்தகம் என்னும் இவைகளைத் தரித்துள்ளவளோ, எவள் பாலசூரியனை யொத்த அருண நிறத்தோடு

கூடியவளோ, எவள் ஸர்வமங்களங்களையும் அருள்பவளோ அத்தகைய திரிபுரசுந்தரியை எனது அபீஷ்ட ஸித்தி யின் பொருட்டு ஸதா எனது ஹ்ருதயத்தில் பஜிக்கின் றேன்.

(வி—ரை) இந்த ஶ்லோகம் சில பிரதிகளில் கிடை யாது. ரக்தபத்மாஸனே: மூலாதாரத்திற்குக் கீழுள்ள **अधस्सहस्रारं** ரக்தவர்ணம். இது குளபத்மம். இதில் வஸிப்பவள் குண்டலினீ சக்தியாகும். முன் ஶ்லோகத் தில் குளபத்மத்தை மஞ்சள் நிறமாகக் கூறப்பட்டுள்ளதே; அது ஸரியா? இதுஸரியா என்னும் சங்கை யாருக்கு முண்டாதல் ஸஹஜம். குண்டலினீ சக்தி தூங்கும்போது குலஸஹஸ்ராரம் மஞ்சள் நிறமாகவும், விழிக்கும்போது ரஜோ குணத்தினால் அதுவே சிவப்பாகவும் மாறுகின்றது.

இடை, பிங்களை யென்னும் சந்திரசூர்ய நாடிகளே கண்களாம்.

ஷடாதாரங்களே அங்கங்களாகும்.

ஆதாரங்களிலுள்ள அக்ஷரங்களே இரத்தினங்களா லான ஆபரணங்களாம்.

அந்தக்கரணமே ஆயுதங்களாகும்.

அக்ஷமாலை = சித்தம்.

அங்குசம் = அஹங்காரம்.

பாசம் = மனம்.

புஸ்தகம் = புத்தி.

இளஞ்சூரியனை யொத்த சிவப்பு நிறம் ஞானம் அல் லது விமர்சமாம். (4)

(அ—கை) பகவான் துர்வாஸ மஹர்ஷியானவர், ஸகல சப்த ஜாலங்களையும் பிரகாசிக்கச் செய்யும் ஞான பாநுவை யொத்ததும், ஸங்கேதஸார மென்னும் மஹா

வித்தையின் முதலாவது பீஜமானதுமான வாக்பவ பீஜத்தை இந்த ஶ்லோகத்தில் ஸ்தோத்திரம் செய்கின்றனர்.

वन्दे वाग्भवमैन्दवात्मसदृशं वेदादिविद्यागिरो
भाषा देशसमुद्भवाः पशुगताश्छन्दांसि सप्त स्वरान् ।
तालान्पञ्च महाध्वनीन्प्रकटयत्यात्मप्रकाशेन य-
त्तद्बीजं पदवाक्यमानजनकं श्रीमातृके ते परम् ॥ ५ ॥

(தா-ம்) ஹே மாத்ருகா ஸ்வரூபிணியே! எந்த பீஜாக்ஷரமானது, ஸகல வேத, சாஸ்திர, ஸ்ம்ருதி, புராணாதிகளையும், ஸகல சப்தங்களையும், ஸம்ஸ்க்ருதம், பிராக்ருதம் முதலிய ஸகல பாஷைகளையும், பசு பக்ஷியாதிகளின் விவகாரங்களுக்கு யோக்கியமான சப்தங்களையும், ஸகலமான சந்தஸ்ஸுகளையும், நிஷாதம் முதலிய ஸர்வ ஸ்வரங்களையும், த்ருவம் முதலிய ஸகல தாளங்களையும், பேரி முதலிய பஞ்சவாத்தியங்களின் துவனிகளையும் (தனது) ஸ்வப்பிரகாசத்தால் விளக்கமுறச் செய்கின்றதோ, எது சந்திர மண்டலத்தின் அம்ருதத்திற்கு ஒப்பாயிருக்கின்றதோ, எது ஸகலமான பதங்கள், பதங்களாலாகிய வாக்கியங்கள், பிரத்தியக்ஷாதி பிரமாணங்கள் இவைகளுக்குங்காரணமாயிருக்கின்றதோ அத்தகைய மேலான வாக்பவ பீஜமாகும் உமது ஸ்வரூபத்தை நமஸ்கரிக்கின்றேன்.

(வி-ரை) வாக்பவ பீஜம் அம்ருதஸ்வரூபமானதென்பது ஸம்பிரதாய ரஹஸ்யமாகும்.

வேதங்களுக்குப் பிறப்பிடமாயுள்ளது வாக்பவமெனப்படும். ஆகவே சதுர்வேதங்களுக்கும் இது விதை போன்றது. இந்த பீஜத்தில் இரண்டு அகாரங்களும்,

ஒரு இகாரமும், ஒரு அநுஸ்வாரமும் அடங்கியிருக்கின்றன.

ஒரு அகாரம் ருக்வேதத்தையும், இகாரம் யஜுர் வேதத்தையும், மற்றொரு அகாரம் ஸாமவேதத்தையும், அநுஸ்வாரம் அதர்வண வேதத்தையும் குறிப்பிடுகின்றன. ஆதலின் இந்த பீஜம் சதுர்வேத ஸங்கேத ஸாரமெனப்படும்.

ஸங்கேதம் என்பது குறியாகும். லிங்கமென்பது மிதுவேயாம். உபநிஷத் பிரதிபாத்தியமாயுள்ள பிரஹ்ம வித்தை (ஸ்ரீ வித்யா பஞ்சதசாக்ஷரி) யானது மூன்று கூடங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று கூடங்களுக்கும் ஸங்கேதமாய் ஏற்பட்டவை த்யக்ஷரி யென்னும் மூன்று பீஜங்கள். இவை வாக்பவ, காமராஜ, சக்தி பீஜங்களெனப்படும். இவற்றிலுள்ள மெய்யெழுத்துக்களை நீக்கிய போது மிஞ்சும் சுத்தமான ஸ்வரங் (உயிரெழுத்துக்) களுக்கு ஸங்கேதஸார வித்தையென்று பெயர். அது ऎं ईं औः என்பதாம். இவற்றுள் முதலாவது வாக்பவ பீஜமென்பது இதில் வர்ணிக்கப்பட்டுள்ளது. (5)

(அ—கை) முன் ஶ்லோகத்தில் ஸங்கேதஸாரவித்தையின் முதலாவது பீஜமான வாக்பவத்தைத் தியானித்து அதே ஸ்வரூபமான பாலா பரமேஶ்வரி வித்தையின் ஆத்ய பீஜத்தை இதில் ஸ்துதிக்கின்றார்.

त्रैलोक्यस्फुटमन्त्रतन्त्रमहिमा स्वात्मोक्तिरूपं विना
यद्बीजं व्यवहारजालमखिलं नास्त्येव मातस्तव ।
तज्ज्ञाप्यस्मरणप्रसक्तसुमतिः सर्वज्ञतां प्राप्य कः
शब्दब्रह्मनिवासभूतवदनो नेन्द्रादिभिः स्पर्धते ॥ ६ ॥

(தா-ம்) ஓ மாதாவே! உம்முடைய ஸ்வரூபமான வித்தையின் முதலாவதாகிய வாக்பவமென்னும் பீஜமன்றி ஒருவனுவது முவ்வுலகங்களிலுள்ள தேவாஸுர மனுஷ்யர்களை ஸந்தோஷப்படுத்தக்கூடியதும், பிரமிக்கச் செய்யக்கூடியதுமான மந்த்ர தந்த்ர ஸாமர்த்தியங்களையடைய முடியாது. உமது வாக்பவ பீஜ ஸாதனமன்றி ஒருவிதமான காரியத்தையும் செய்யமுடியாது. இத்தகைய பெருமை வாய்ந்த பீஜாக்ஷரத்தை ஸர்வகால ஸர்வ அவஸ்தைகளிலும் ஸ்மரிப்பதால், ஸாதகர்கள், ஸர்வ சாஸ்திரங்களிலும் பற்றுதலையும் பரிசயத்தையும் பெற்று ஸர்வக்ஞராய் விளங்குவார்கள். அவர்களின் முகங்கள் சித் சக்தியின் நிவாஸஸ்தலமாக விளங்கும். இத்தகைய உபாஸகர்களைப் பார்த்து இந்திராதி தேவதைகளும் ஈர்ஷை (பொறாமை) யுடையவராவார்கள்.

(வி-ரை) வாக்பவ பீஜோபாஸனையால் ஸர்வசாஸ்திர பாண்டித்தியமும், மஹா காவ்யங்களையியற்றும் ஸாமர்த்தியமும் ஏற்படுவது சாஸ்திர ஸித்தாந்தமும் அநுபவமுமாகும். மந்த்ர ஸாமர்த்தியம் = சாபாநுக்கிரஹம் முதலியன; தந்த்ரஸாமர்த்தியம் = வியாக்கியானம் செய்தல். சாஸ்திரங்களில் விதித்துள்ளபடி தக்க காலத்தில் ரிஷி, சந்தஸ் முதலிய அங்கங்களோடு செய்யும் மந்த்ராவர்த்திக்கு ஜபமென்று பெயர்; நடக்கும்போதும், படுத்துள்ள போதும், உட்கார்ந்திருக்கும் போதும் செய்யும் மந்த்ராவர்த்திக்கு ஸ்மரணமென்று பெயர். இது மானஸிகமாகவே இருத்தல் வேண்டும். வாசிகம், உபாம்சு, மானஸிகம் என ஜபம் மூன்று வகைப்படும். இவற்றுள் மானஸிகமே மிகச் சிறந்தது. ஸ்மரணரூபமான இந்த மானஸிக ஜபத்தால் உபாஸகனது சித்தத்தில் தேவியின் ஸாந்நித்தியம்

ஏற்படுகின்றது. வாகீஸ்வரியின் ஸாந்நித்தியத்தால் ஸகல வித்தைகளும் அவனுக்கு எளிதில் ஸ்புரிக்கின்றன. (6)

(அ—கை) முன் ஶ்லோகத்தில் வாக்பவ பீஜத்தின் அதிதேவதையாகும் வாகீஸ்வரியைத் துதித்து, இதில் வாக்பவ பீஜத்தின் மூலகாரணமாகும் மூல குலகுண்ட த்ரிகோணாதிஷ்டாத்ரியாகும் ஸமஷ்டி குண்டலினீசக்தியைத் துதிக்கின்றனர்.

मात्रा यात्र विराजतेऽतिविशदा तामष्टधा मातृकां
शक्तिं कुण्डलिनीं चतुर्विधतनुं यस्तत्वविन्मन्यते ।
सोऽविद्याखिलजन्मकर्मदुरितारण्यं प्रबोधाग्निना
भस्मीकृत्य विकल्पजालरहितो मातः पदं तद्व्रजेत् ॥७॥

(தா—ம்) வாக்பவ பீஜத்தில் ஸகல பிரபஞ்சத்திற்கும் மாத்ருபூதமான ஸாமவேதாதியான "அ" என்னும் மாத்ருகையானது, மிகவும் ஸ்பஷ்டமான ஐம்பத்தோ ரக்ஷரமாகவும், வசினீ முதலிய வாக்தேவதைகளின் வர்க்காஷ்டகமாகவும், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்யும் ஸாமர்த்தியமுடைய சக்தியாகவும், நான்குவகையான சரீரங்களோடுள்ள ஸர்வப் பிராணிகளின் மூலாதாரத்தில் வஸிப்பதாயுமுள்ள குண்டலினீசக்தியை எவன் குருபதேசத்தின் மூலமாய் நன்குணருகின்றானோ அவன் அவித்தையையும், அதனாலேற்பட்ட பலகோடி ஜன்மங்களையும், சகல கர்மங்களையும், ஸமஸ்தமான பாபங்களையும், அக்னியால் பெருங்காட்டை யெரிப்பதுபோல், ஞானாக்னியால் பஸ்மம் செய்து ஸர்வவிகல்ப ரஹிதனாய் நித்தியானந்தப் பெருவாழ்வை யடைகின்றான்.

(வி—ரை) வாக்பவ பீஜத்தின் அக்ரபாகம் அகாரம். இது சுத்த குண்டலினீஸ்வரூபமெனப்படும். குண்டலினீ சக்திக்கு நான்கு சரீரங்கள் உண்டு. அவை அக்கினி குண்டலினீ, ஸூர்யகுண்டலினீ, ஸோமகுண்டலினீ, ஸமஷ்டி குண்டலினீ யென்பனவாம். இவை முறையே, மூலாதாரம், ஹ்ருதயம், ப்ரூமத்தியம், மூலாதாரத்திற்குக்கீழுள்ள த்ரிகோணாகார குலகுண்டம் இவைகளில் விளங்குவனவாகும்.

அஷ்டவர்க்கம்:—अ. क. च. ट. त. प. य. श என்பனவாம். இவற்றிற்கு முறையே வஶிநீ, காமேஶ்வரீ, மோதினீ, விமலா, அருணா, ஜயினீ, ஸர்வேஶ்வரீ, கௌளினீ என்னும் எண்மரும் தேவதைகளாவர். இவர்கள் வாக்தேவதைகளெனப்படுவர்.

यः तत्ववित् = ஸம்ப்ரதாயக் கிரமத்தில் வந்து குருமுகமாய் ஸகல பாரமார்த்திக தத்துவத்தை யறிந்தவன் எவனோ அவன். तत् = அநிர்வசனீயமான. (7)

(அ—கை) இதில் ஸங்கேத ஸாரவித்தையின் இரண்டாவது அக்ஷரத்தைக் காமராஜ பீஜமாய் ஸ்துதிக்கின்றார்.

तत्ते मध्यमबीजमम्ब कलयाम्यादित्यवर्णं क्रिया-
ज्ञानेच्छादिमनन्तशक्तिविभवव्यक्तिं व्यनक्ति स्फुटम् ।
उत्पत्तिस्थितिकल्पकल्पिततनु स्वात्मप्रभावेन य-
त्काम्यं ब्रह्महरीश्वरादिविबुधैः कामं क्रियायोजितैः ॥ ८ ॥

(தா—ம்) ஹே அம்ப! உமது வித்தையின் மத்திய பீஜத்தைத் தியானிக்கின்றேன். அது எத்தகையதெனின், ஆதித்தியவர்ணமானதாயும், இச்சாக்ஞானக் கிரியா சக்திகளுக்குக் காரணமானதாயும், பலகோடி சக்தி

களை நன்ருய் அறியும் ஆற்றலைத் தருவதாயும் இருக்கின்றது ; அன்றியும், அக் காமராஜபீஜமானது தனது ஸ்தூலாதி மூன்று சரீரங்களிலிருந்தும் வாமாதிசக்திகளை யுண்டாக்கி, சதுர்முகப்பிரஹ்மாதி த்ரிமூர்த்திகளால் சிருஷ்டியாதிகளை யியற்றுகின்றது. ஆதலின் பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன் முதலிய தேவர்களால் உபாஸிக்கப்பட்டுள்ளதாயிருக்கின்றது. திரிமூர்த்திகள் காமராஜ பீஜத்தை யுபாஸித்துத்தான் சிருஷ்டியாதி தொழில்களில் சமர்த்தராயினரென்பது கருத்து.

(வி--ரை) ஸங்கேதஸாரவித்தையின் இரண்டாவது பீஜம் நான்காவது ஸ்வரமாகும் ஈங்காரமாம். இதற்குக் காமகலா பீஜமென்றுபெயர். இது மூன்று பிந்துக்களின் ஸமஷ்டி வடிவமானது. இதன் பிரஸரணத்தினலேயே ஸர்வப் பிரபஞ்சமும் ஏற்பட்டது.* இச்சா ஞானக்கிரியைகள், வாமா ஜ்யேஷ்டா ரௌத்ரீ, பிரஹ்ம விஷ்ணு ருத்திரர், ஸூர்யஸோமாக்கினிகள், அகார உகார மகாரங்கள், ஸ்வர்க்க மர்த்திய பாதாளங்கள், காமகிரி பூர்ணகிரி ஜாலந்தர பீடங்கள், ஸ்வயம்புவாதி லிங்கத்ரயங்கள், பூத பவிஷ்யத் வர்த்தமானமென்னும் காலத்திரயங்கள், வேதத்திரயங்கள், அக்கினித்திரயங்கள் முதலிய யாவும் காமகலையின் ஆத்மபிரஸரணத்தினுல் தோன்றியனவேயாகும். ஸர்வகாமனைகளையும் தருதலால் இதற்குக் காமராஜமென்னும் பெயர் ஏற்பட்டது. இதனுல் இது யாவராலும் உபாஸிக்கப்படுவதாயிற்று.

---

* இதைப்பற்றி விளக்கமாய் அறிய விரும்புவோர் சென்னை ஸ்ரீ குஹாநந்தமண்டலியின் பிரசுரமாகிய காமகலாவிலாஸம் என்னும் நூலைப் பார்க்கவும்.

கஃயாமி = "ககாரலகாரங்களைக் காமகலாக்ஷரத்தோடு பொருத்துகின்றேன்" என்னும் அர்த்தமும் ஏற்படும். இதனால் ஸ்பஷ்டமான காமராஜபீஜம் ஏற்படுகின்றது. (8)

(அ-கை) இதில் காமராஜபீஜத்தின் ஸாமர்த்தியம் வர்ணிக்கப்படும் மூலமாய் ஸ்துதிக்கப்படுகின்றது.

कामान्कारणतां गतानगणितान्कार्यैरनन्तैर्मही-
मुख्यैः सर्वमनोगतैरधिगतान्मानैरनेकैः स्फुटम् ।
कामक्रोधसलोभमोहमदमात्सर्यादिषट्कं च यत्
बीजं भ्राजयति प्रणौमि तदहं ते साधु कामेश्वरि ॥९॥

(தா-ம்) ஹே காமேச்வரி! ஜகத்காரணத் தன்மையையடைந்த சதுர்முகப்பிரஹ்மாதிகளின் காமனைகளையும், பிரிதிவி முதலிய பூதகாரியங்களாலேற்படும் எண்ணிறந்த காமனைகளையும், ஸர்வமனோரதங்களையும், ஶ்ருதி, ஸ்ம்ருதி, புராணாதி அநேகபிரமாணங்களால் அறியப்பட்ட காமனைகளையும், காமாதி அரிஷட்வர்க்கங்களையும் எந்த பீஜமானது நன்கு பிரகாசப்படுத்துகின்றதோ அந்த, உம்முடைய பெருமை தங்கிய, பீஜத்தை நான் நமஸ்கரிக்கின்றேன்.

(வி-ரை) ஸர்வ காமனைகளையும் பரிபூர்த்தி செய்யும் ஸாமர்த்தியம் ஸங்கேத ஸாரவித்தையின் மத்திய பீஜத்திற்குள்ளதால் அதற்குக் காமராஜபீஜமெனப் பெயர் வந்ததென்று முன்னர் கூறப்பட்டது. காமனைகள் மூவ்வகைப்படும். அவை ஐஹிகம், ஆமுஷ்மிகம், பாரமார்த்திகம் என்பனவாம். வைஷயிக ஸுகேச்சை ஐஹிகமென்றும்,

ஸ்வர்க்காதி லோகாந்தரேச்சை ஆமுஷ்மிகமென்றும், மோக்ஷேச்சை பாரமார்த்திகமென்றும் கூறப்படும். இவை யாவும் தார்மிகமாம். ஆதலின் விதியுக்தமானவை. அதர்ம மான காமனைக்குக் காமமென்று பெயர். இதனால் ஏற்படும் காரியங்கள் குரோதம், லோபம் முதலியன. இவை தர்ம மார்க்கத்திலுள்ள முமுக்ஷுக்களுக்கு ஆந்தர சத்துருக்க ளாம். இவற்றையும் பிரகாசப்படுத்தும் சக்தி காமராஜ பீஜத்திற்குள்ளதென்று கூறியதால் பக்தர்களுக்கு அவற் றாலுண்டாகுந் தீமையை யுணர்த்தி அவர்களிடத்தில் அவையணுகாவாறு செய்யும் ஸாமர்த்தியம் அதற்குள தென அறிதல் வேண்டும்.

சகாரத்தினால் தர்மாதர்ம காமனைகள் ஸூசிப்பிக்கப் பட்டன. (9)

(அ-கை) முன் ஸ்லோகத்தில் காமபீஜத்திற்கு ஸகல காமனைகளையும் பரிபூர்த்தி செய்யும் ஸாமர்த்தியம் வர்ணிக் கப்பட்டது. அந்த ஸாமர்த்தியம் அந்த பீஜத்திற்குள்ள காரணத்தால், அதற்குச் சிறந்த தத்துவ ஞானத்தைப் பிரகாசப்படுத்துந் தன்மையும், பிரணவஸ்வரூபமான தன் மையும் உள்ளதென்று இதில்பிரதிபாதிக்கப்படுகின்றது.

यद्भक्ताखिलकामपूरणचणस्वात्मप्रभावं महा-
जाड्यध्वान्तविदारणैकतरणिज्योतिः प्रबोधप्रदम् ।
यद्वेदेषु च गीयते श्रुतिमुखं मात्रात्रयेणोमिति
श्रीविद्ये तव सर्वराजवशकृत्तत्कामराजं भजे ॥ १० ॥

(தா-ம்) ஸங்கேதஸார ஸ்ரீ வித்தியாஸ்வரூபிணியே! தனது ஸ்வபாவமான மஹிமையால் ஸாதாரணமாய்

ஸர்வ ஜீவராசிகளையும், விசேஷமாய் ஸர்வராஜாக்களையும், பக்தர்களின் வசப்படுத்தி, அவர்களின் ஸகலமனோரதங்களையும், பரிபூர்த்திசெய்யும் ஸாமர்த்தியம் எந்த பீஜத்திற்குள்ளதோ அந்த உன்னுடைய காமராஜ பீஜமானது வேதத்தின் ஆரம்பத்தில் மூன்று மாத்திரைகளோடு கூடிய "ஓம்" என்னும் பிரணவஸ்வரூபமாய்க் கானம் பண்ணப் படுகின்றது; அன்றியும், அது ஜடஸ்வரூப மூலாக்ஞான மாகும் மஹா அந்தகாரத்தை யொழிக்கவல்ல ஞானஸூர்யப்பிரகாச ஸ்வரூப தத்வக்ஞானத்தையும் தரக்கூடியதாயுமிருக்கின்றது. அத்தகைய காமகலா பீஜத்தைப் பஜிக்கின்றேன்.

(வி-ரை) பிரணவமும் காமகலையும் ஒரே ஸ்வரூபமானவை. பிரணவத்திற்கு மூன்றுமாத்திரைகளுண்டு; அங்ஙனமே காமகலையும் த்ரிபிந்துஸ்வரூபமானது.

तुरीयस्वरः साक्षात् तुरीयमेव । य ईं शृणोत्यलकँ शृणोति । नहि प्रवेद सुकृतस्य पन्थाम् ॥ इति श्रुतेः ।

க்லீ. இதில் "ககார லகாரங்களின்றி பிந்துவோடுகூடிய துரீயஸ்வரவடிவ ஈ காமகலா சிரவணத்தினால் ஸத்கர்மாக்களால் கிடைக்கும் உத்தமலோகங்கள் அடையப்படுவதில்லை; மற்றோ இங்கேயே நிர்க்குண ஞானம் ஏற்பட்டு பிரஹ்மஸ்வரூப மோக்ஷம் ஸித்திக்கின்றது" என்னும் பிரமாணத்தால் காமகலைக்குப் பிரணவஸ்வரூபமும், நிர்க்குணக்ஞானப் பிரகாசத்துவமும் உண்டென்று ஏற்படுகின்றது.

காமராஜ பீஜத்தினால் திரிவர்க்கங்களும், காமகலையால் அபவர்க்கவடிவ மோக்ஷமும் ஸித்திக்குமென்பது பரம ஸித்தாந்தமாம். க்லீ என்னும் காமராஜ பீஜத்திலுள்ள

க காரமானது தர்மபுருஷார்த்தத்தையும், ல காரமானது அர்த்தமென்னும் புருஷார்த்தத்தையும், ई என்னும் உயிரெழுத்தானது காமபுருஷார்த்தத்தையும், பிந்து நித்திய திருப்தியையும் உண்டாக்குகின்றனவென்பது பரம ரஹஸ்யமாம். தர்மார்த்தகாமங்களென்று கூறப்படும் திரிவர்க்கங்களுள் அடங்கிய காமபுருஷார்த்தமே உபாதிராஹித்தியத்தினால் மோக்ஷமாக ஆய்விடுகின்றது.

यतस्तृतीयं विदुषां तुरीयं त्रैपुरं महः ।

என்னும் பிரமாணம் இதை வலிவுறுத்துகின்றது. (10)

(அ-கை) ஸ்ரீ துர்வாஸ பகவான் இந்த ஶ்லோகத்தில் ஸங்கேத ஸாரவித்தையின் மூன்றாவது பீஜத்தைக் காமகலைக்கு ஸமானமாயும், சித்ரூபமாயும், பிரஹ்மஸ்வரூபமாயும் பிரதிபாதிக்கின்றனர்.

यत्ते देवि तृतीयबीजमनलज्वालावलीसंनिभं
सर्वाधारतुरीयबीजमपरब्रह्माभिधाशब्दितम् ।
मूर्धन्यान्तविसर्गभूषितमहौकारात्मकं तत्परं
संविद्रूपमनन्यतुल्यमहिम स्वान्ते मम द्योतताम् ॥ ११ ॥

(தா-ம்) ஸ்வயம் பிரகாசமாய் விளங்கும் பரதேவதையே! முன்னால் ஸகாரத்தினாலும் பின்னால் விஸர்க்கத்தினாலும் அலங்கரிக்கப்பட்ட औ காரத்தின் ஸ்வரூபம் सौः என்பதாகும். இந்த பீஜத்திற்கு ஆஸ்பதமாயும், விஸர்க்கத்தைப் பரமாயுடைத்தானதாயுமுள்ளது ஸர்வாதார பீஜமாகும் பதினோராவது ஸ்வரமான ஏகாரத்திற்கு நான்காவதான औ என்பதாகும்; என்றால் औः என்று ஏற்படுகின்றது. இது உன்னுடைய ஸங்கேதஸார வித்தையின்

மூன்ருவது பீஜமாகும். இது அக்கினி ஜ்வாலைகளின் கூட்டத்தைப் போன்ற பிரகாசமுடையதும், உவமையற்ற ஸம்வித்ரூபமாகவும், அபரப்பிரஹ்ம மென்னும் நாமத்தினுல் உரைக்கப்படுவதாயும் இருக்கின்றது. இத்தகையது எந்த பீஜமோ அது எனது ஹ்ருதயத்தில் நன்கு விளங்கட்டும்.

(வி--ரை) ஸங்கேத ஸாரவித்தையின் மூன்ருவது பீஜம் இதில் ஸ்துதிக்கப்படுகின்றது. இதற்குச் சக்திபீஜமென்று பெயர். இது **औः** என்னும் ஸ்வரூபமாய் விளங்குவதாகும். இதன் உத்தாரம் **सर्वाधारतुरीयबीजं** என்பதனுலும் **मूर्धन्यान्तविसर्गभूषितमहौकारात्मकं** என்பதனுலும் ஏற்படுகின்றது.

यदेकादशमाधारं बीजं कोणत्रयोद्भवं என்னும் பிரமாணத்தால் ஆதார பீஜமானது பதினோராவது ஸ்வரமான ஏகாரமாகும். இதற்கு நான்காவதான ஸ்வரம் **औ** காரமாம்.

मूर्धन्यान्तविसर्गभूषित. मूर्धन्य பதம் **ष** காரம்; அதன் அந்தம் **स** காரம். அதனுலும் விஸர்க்கத்தினுலும் அலங்கரிக்கப்பட்ட **औ**காரம் **सौः**; அதற்கு ஆஸ்பதமாயிருப்பது **औः**. ஆனுல் **मूर्धन्यान्तविसर्गभूषित. मूर्धन्य** பதம் பிந்து வாசகம்; அதன் பின் விஸர்க்கம் என்னும் இரண்டு பிந்துக்கள்; பிந்து விஸர்க்கங்களோடு சேர்ந்த **औ** காரம்—**औः** என்றேற்படுகின்றதென்று வடமொழி வியாக்கியாதா ஸ்ரீ நித்தியானந்தநாதர் வியாக்கியானம் செய்துள்ளார். ஆனுல், ஸங்கேத ஸார வித்தையின் மூன்ருவது பீஜம் **औः** என்பது மாத்திரமேயாகும். **औः** என்பது பிராஸாதபராவின் ஸங்கேதமென்று பெரியோர் கூறுவர். ஆதலின் **मूर्धन्यान्त** மென்பதற்கு **स** காரம் என்று பொருள் செய்யவேண்டியிருக்கிறது. அதன் விமர்சமாவது :—

षकारः श्वेत आख्यातो मूर्धन्यो वृषसंज्ञकः என்னும் மாத்ருகா நிகண்டுவின் பிரமாணத்தின்படி, मूर्धन्य பீஜம் ष காரம். இதற்கு அந்தத்தில் அதாவது இறுதியில் விளங்குவது स காரமாகும்; இதனோடு விஸர்க்கம் சேர்ந்தால் सः என்று ஏற்படுகிறது. இதனோடு सर्वाधारतुरीयबीज மாகிற औ கார மும் சேரவே सौः என்று ஏற்படுகிறது.

ஸ்ரீ நித்தியாநந்தநாதர் औः என்று வியாக்கியானம் செய்ய நினைத்து அவதாரிகையில் இந்த மூன்றாவது பீஜத் திற்குக் காமகலா ஸாம்யம் கூறினார். பிந்து வில்லாமலே औः என்பதற்கே காமகலா ஸாம்யம் ஏற்படுகின்றது. விஸர் க்கம் என்னும் இரண்டு பிந்துக்கள் கலாஸ்வரூபமாகும். औ என்பது ஸாமரஸ்ய பீஜமென்பது சாஸ்திரப்பிரஸித்தம். இரண்டு வஸ்துக்களுக்கு ஸாமரஸ்யம் கூறுதலே தகுதி. ஆதலின் औ என்னும் ஸாமரஸ்ய பீஜவலிமையால், உப லக்ஷணமாய்க் காமஸ்வரூபமும் இருப்பதாகப் பாவித் தல் தகுதியாம். ஆதலின் औः என்பதும் காமகலாஸ்வரூப மாய் இருக்கின்றது. கலாஸ்வரூபமாகும் விஸர்க்கம் எங் கே யுண்டோ அங்கு விளக்கமாகவோ அல்லது மறைவாக வோ காமஸ்வரூபமாகும் பிரகாசபிந்து இருப்பதாக அறி வது சாஸ்திர ஸித்தாந்தமாம். சக்தி பீஜமாகிற सौः என் பதிலுள்ள உபாதியாகும் ஸகாரம் நீங்கியுள்ள காரணத் தால் औः என்பது (நிருபாதிக) ஸம்வித் ரூபமென்று கூறப் பட்டுள்ளது அறியத்தக்கது. तत्परं—இதில் तत् என்பது விஸர்க்கத்தைக் கிரஹிக்கிறது. (11)

(அ-கை) இதில் பாலா மந்த்ரத்தின் மூன்றாவது பீஜ மாகிய பராபீஜம் ஸ்துதிக்கப்படுகின்றது.

सर्वं सर्वत एव सर्गसमये कार्येन्द्रियाण्यन्तरा
तत्तद्दिव्यहृषीककर्मभिरियं संव्यश्नुवाना परा ।
वागर्थव्यवहारकारणतनुः शक्तिर्जगद्रूपिणी
यद्बीजात्मकतां गता तव शिवे तन्नौमि बीजं परम् ॥१२॥

(தா-ம்) ஹே சிவையே! உத்க்ருஷ்டமான உமது சக்தியானது, சிருஷ்டியின் ஆரம்ப காலத்தில், ஸகலத்திலிருந்தும் ஸகல வஸ்துக்களையும் சிருஷ்டி செய்து, இடையில் கர்மேந்திரியங்களையும், ஞானேந்திரியங்களையும், அந்த அந்த இந்திரியங்களுக்கு விஷயங்களான சப்தாதிகளையும், காரியமான வசனுதிகளையும் கற்பித்து, ஸகலமான சப்தங்களினுடையவும் அர்த்தங்களினுடையவும் ஆன விவஹாரங்களுக்குக் காரணமாயிருந்துகொண்டு, உலகத்தில் எங்கும் வியாபித்து, உலக வடிவமாகவே இருக்கின்றது. இத்தகைய பராசக்தி எந்த பீஜாக்ஷரமாக ஆவிர்ப்பவித்திருக்கின்றனளோ, அதை அதாவது அந்த சக்தி பீஜத்தை வணங்குகின்றேன்.

(வி-ரை) பாலாவித்தையின் த்ருதீய பீஜத்திற்குச் சக்தி பீஜமென்றே பெயர். ஜகத்தைச் சிருஷ்டிக்கும் சக்தியும், அதை ஸம்ஹரிக்கும் சக்தியும் இதற்குண்டு. ஆதலின் பராசக்தி யெனப்படும். இந்தப்பராசக்தியானது சிருஷ்டி காலத்தில், காமகலையாக ஆவிர்ப்பவித்து ஸகல ஸ்தாவர ஜங்கமாத்மகப்பிரபஞ்சத்தை எப்படி எப்படியிருக்கவேண்டுமோ அப்படி அப்படியே சிருஷ்டித்துப் பிறகு அதற்குரிய அதிஷ்டான தேவதைகளோடு ஞானகர்மேந்திரியங்களை யேற்படுத்தி, காரிய, காரண, கர்த்ருவடிவமாயும், ஞேய, ஞான, ஞாத்ருவடிவமாயும், வாச்சிய, வசன, வக்த்ரு

வடிவமாயுமுள்ள ஸகல வியவஹாரங்களுக்குக்காரணமான பிரபஞ்ச வடிவ சரீரமாய் விளங்கிப் பின்னர் பராபீஜவடிவமாகவே நிற்கின்றனள்.

ஆகவே, பராசக்தி பிரபஞ்ச சிருஷ்டி காலத்தில் காமகலையாகவும், லயகாலத்தில் பராபீஜமாகவும் விளங்குவது உணரத்தக்கது. (12)

(அ-கை) பராபீஜஸ்மரணத்தினல் பரதேவதையின் ஸாக்ஷாத்காரமுண்டாகு மென்பதை இதில் கூறுகின்றனர்.

अग्नीन्दुद्युमणिप्रभञ्जनधरानीरान्तरस्थायिनी
शक्तिर्ब्रह्महरीशवासवमुखामर्त्यासुरात्मास्थिता ।
सृष्टस्थावरजङ्गमस्थितमहाचैतन्यरूपा च या
यद्बीजस्मरणेन सैव भवती प्रादुर्भवत्यम्बिके ॥ १३ ॥

(தா-ம்) ஹே அம்பிகே! முன் ஸ்லோகத்தில் பிரதிபாதனம் செய்யப்பட்ட பராபீஜஸ்வரூபிணியாயுள்ளவள் எவளோ, எவள் ஸூர்யன், சந்திரன், அக்கினி, பூமி, ஜலம், வாயு, ஆகாசம் என்னும் இவற்றில் விளங்கும் ஸத் ஸ்வரூபமாகவும், பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், இந்திரன் முதலிய தேவர்கள், அஸுரர்கள் இவர்களிடத்துள்ள ஸாமர்த்திய வடிவமாகவும், சிருஷ்டிக்கப்பட்ட ஸ்தாவர ஜங்கமங்களாகவும், ஸர்வ வஸ்துக்களிலும் விளங்கும் சைதன்ய வடிவமாகவும் விளங்குபவளோ அவளே நீ. ஆதலின் பராபீஜ ஸ்மரணத்தினல் நீ எனக்குப் பிரத்தியக்ஷமாகின்றாய்.

(வி—ரை) இந்த ஸ்லோகத்தில் பரதேவதையின் ஸாக்ஷாத்காரம் கூறப்படுகின்றது. அம்பாள் அந்தர்யாமி ஸ்வரூபமாகவும், ஸாமர்த்திய வடிவமாகவும், ஞானாகார மாகவும் அபரோக்ஷமாகுந்தன்மை இதில் கூறப்பட்டுள் ளது கூர்ந்து அறியத்தக்கது. ஸத் ஸ்வரூபம் அந்தர்யாமி யாகவும், ஆநந்தம் சக்தியாகவும், சித்ரூபம் ஞானமாகவும் விளங்குகின்றன. ஸச்சிதாநந்த அநுபவமே அபரோக்ஷ மாமென்பது சிதையாத சித்தாந்தமாம். (13)

(அ—கை) ஸகலவித்தியாப்பிரதமாயும், ஸ்ரீப்பிரதமா யும், மோக்ஷப்பிரதமாயுமுள்ள பராபீஜத்தினைத் தியானம் செய்கின்றனர்.

स्वात्मश्रीविजिताजविष्णुमघवश्रीपूरणैकव्रतं
सद्विद्याकविताविलासलहरीकल्लोलिनीदीपकम् ।
बीजं यत्त्रिगुणप्रवृत्तिजनकं ब्रह्मेति यद्योगिनः
शान्ताः सत्यमुपासते तदिह ते चित्ते दधे श्रीपरे ॥१४॥

(தா—ம்) ஸ்ரீ வித்யாஸ்வரூபிணியான ஹே பரதேவ தே! எந்தப்பீஜமானது, தனது ஆத்மப்பிரபாவத்தால் ஜயிக்கப்பட்ட பிரஹ்ம விஷ்ணு இந்திரர்களின் ஐஶ்வரியங் களைப்பூரணம் செய்வதிலேயே தத்பரமானதோ, எது உத் தமமான ஸகல வித்தைகளின் ஞானத்தையும், உத்தம காவ்வியங்களின் ரசனை (இயற்றும்) ஸாமர்த்தியத்தையும் பிரகாசப்படுத்துவதோ, எது ஸத்வம், ரஜஸ், தமஸ் என் னும் திரிகுணாத்மகப் பிரவ்ருத்தியை யுண்டுபண்ணுவதோ, எது, மஹாயோகிகளாலும், பரமசாந்தர்களான ஞானிக ளாலும் ஸத்ய ஸ்வரூபமாகவும், பிரஹ்ம ஸ்வரூப

மோக்ஷப்பிரதமாகவும் கருதப்பட்டு உபாஸிக்கப்படுகின்றதோ, அத்தகைய உமது பராபீஜத்தை இந்த ஜன்மத்திலேயே எனது சித்தத்தில் பாவிக்கின்றேன்.

(வி-ரை) பராசக்திக்குப் பகவதி யென்றொரு பெயருண்டு. பகத்தை யுடையவள் பகவதி. ஐஸ்வரியம், தர்மம், கீர்த்தி, ஸ்ரீ, ஞானம், வைராக்கியமென்னும் இவை ஆறும் பகஸ்வரூபங்களாகும். இவை யாவும் பராபீஜோபாஸனையால் ஏற்படுவனவாம். (14)

(அ-கை) **वन्दे वाग्भवं** என்னும் ஸ்லோகம் முதல், **स्वात्मश्री** என்னும் ஸ்லோகம் வரையிலுள்ள பத்து ஸ்லோகங்களாலும் ஸங்கேதஸார, பாலாவித்தைகளின் ஸ்வரூபமும் மஹிமையும் நிரூபிக்கப்பட்டன. இதில் அவற்றுள் ஏதாவதொரு பீஜத்தை யுபாஸிப்பதனால் உண்டாகும் அபீஷ்ட பலப்பிராப்தி அதாவது விரும்பியவற்றின் அடைவு இந்த சுலோகத்தில் பிரதிபாதிக்கப்படுகின்றது.

एकैकं तव मातृके परतरं संयोगि वाऽयोगि वा
विद्यादिप्रकटप्रभावजनकं जाड्यान्धकारापहम् ।
यन्निष्ठाश्च महोत्पलासनमहाविष्णुप्रहर्त्रादयो
देवाः स्वेषु विधिष्वनन्तमहिमस्फूर्तिं दधत्येव तत् ॥१५॥

(தா-ம்) ஹே மாத்ருகாஸ்வரூபிணியே! வியஞ்ஜன ஸஹிதமான பாலாத்ரியக்ஷரியிலும், வியஞ்ஜன ரஹிதமான ஸங்கேத ஸாரத்ரிபீஜங்களிலும் ஏதாவதொன்றே வித்தை முதலிய ஸ்வேஷ்ட பிரவ்ருத்தியில் அலௌகிக ஸாமர்த்தியத்தை யருளுவதாயும், ஜடஸ்வபாவ அஞ்ஞானத்தை யொழிப்பதாயும், ஹரிஹரப்ரஹ்மாதிகளுக்கும்

இதர தேவதைகளுக்கும், தத்பரரான உபாஸகர்களுக்கும் அவரவர்க்குக் கர்த்தவ்வியமான காரியங்களை முடித்துக் கொள்ளும் பேராற்றலை யருளுவதாயும் இருக்கின்றது.

(வி—ரை) பாலாவித்தையானது வாக்பவம், காமராஜம், சக்தி யென்னும் மூன்று பீஜங்களையுடையது. இது ஸம்யோக (வியஞ்ஜன ஸஹித) வித்தையாகும். ஸங்கேத ஸார வித்தையானது ஸ்ரீ வித்தியா கூடத்திரயங்களின் பீஜரூபமான பாலாமந்த்ரத்தின் பரம ஸாரமாய் ஏற்பட்டுள்ளது. இது அயோக (வியஞ்ஜன ரஹித) வித்தையெனப்படும். மேற்கூறிய இரண்டு வித்தைகளில் உள்ள ஆறுபீஜங்களில் ஏதாவதொன்றை யுபாஸிப்பதனாலேயே பதினான்கு வித்தைகளையும், மூலாக்ஞானத்தை யொழிக்கவல்ல ஜீவப் பிரஹ்மைக்கிய ஞானத்தையும், ஸகலவிதமான விபூதிகளையும் ஸாமர்த்தியத்தையும் உபாஸகர்கள் அடைகிறார்கள். (15)

(அ—கை) இதுகாறும் விமர்சிக்கப்பட்ட இருவிதமான வித்தைகளின் பீஜத்திரயங்களையும், மஹாவித்தையாகும் ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரியின் த்ரிகூடங்களையும் நன்கறிந்த மஹா புருஷனுடைய ஸாமர்த்தியம் இத்தகையதென்று இதில் பிரதிபாதிக்கின்றனர்.

इत्थं त्रीण्यपि मूलवाग्भवमहाश्रीकामराजस्फुर-
च्छक्त्याख्यानि चतुःश्रुतिप्रकटितान्युत्कृष्टकूटानि ते ।
भूततुश्रुतिसंख्यवर्णविदितान्यारक्तकान्ते शिवे
यो जानाति स एव सर्वजगतां सृष्टिस्थितिध्वंसकृत् ॥१६॥

(தா-ம்) ஹே சிவே! அருணவடிவ விமர்ஸ ஸ்வரூபிணியே!! இதுகாறும் பிரதிபாதித்து விமர்சம் செய்யப்பட்ட இரண்டுவகையான வித்தைகளிலுமுள்ள மூன்று பீஜங்களே, நான்கு வேதங்களாலும் பிரகடனம் செய்யப்பட்டனவாயும், மிகச்சிறந்தனவாயும் விளங்கும் வாக்பவம், ஸ்ரீ காமராஜம், சக்தியென்னும் மூன்று கூடங்களையுடைய மஹாவித்தையாக விளங்குகின்றன. ஐந்தக்ஷரங்களோடு கூடியது வாக்பவ கூடம்; ஆறக்ஷரங்களோடு கூடியது காமராஜகூடம்; நான்கக்ஷரங்களோடு கூடியது சக்திகூடம். ஆகவே பதினைந்து அக்ஷரங்களோடு கூடியது மூலவித்தையாகும். இதையும், முற்கூறிய த்ரிபீஜாத்மக இரண்டு விதமான வித்தைகளையும் எந்தவொரு மஹா புருஷன் அபேதமாக அறிகின்றானோ அவனே ஸர்வப் பிரபஞ்சங்களின் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்யும் பரமேஸ்வரனுக்குச் சமானமாவன். என்றால் ஈஸ்வர துல்யமான ஸாமர்த்தியத்தைப் பெறுவனென்பது கருத்து.

(வி-ரை)

வாக்பவ கூடம் ஸகல வித்தியாப்பிரதம்.
காமராஜ கூடம் ஸ்ரீ ஸௌந்தர்யப்பிரதம்.
சக்தி கூடம் சமத்கார ஸாமர்த்தியப்பிரதம்.

श्रुतिप्रकटितं வேதப்பிரதிபாத்தியம்.
कामो योनिः என்று அதர்வ வேதத்திலும்,
इन्द्रो मायाभिः என்று ருக்வேதத்திலும்,
चत्वार ईं बिभ्रति क्षेमयन्तः என்று யஜுர் வேதத்திலும்,
य ईं चकार न सो अस्य वेद—स ईं पाहि यजजी तरुत्रः என்று ஸாமவேதத்திலும் ஸ்ரீ வித்தையைப் புகழ்ந்துள்ளது அறியத்தக்கது.

यो जानाति—எவன் ஸத் ஸம்பிரதாயத்தில் வந்த ஸத்குருவை ஆஶ்ரயித்து, அவரது அநுக்கிரஹத்தினால் கிரமமாய் தீக்ஷையைப்பெற்று, உபாஸக தர்மத்தினின்றும் சிறிதும் வழுவாது நடக்கின்றானோ அவனாலே தான் ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ, பாலா, ஸங்கேதஸார வித்தைகளின் ஏகத்துவத்தை அறிய முடியும். அவனே பரமேஶ்வரனாவன். (16)

(அ-கை) ஸ்ரீ வித்தியா பஞ்சதசாக்ஷரீ இந்த ஶ்லோகத்தில் உத்தாரம் செய்யப்படுகின்றது :—

ब्रह्मायोनिरमासुरेश्वरसुहृल्लेखाभिरुक्तैस्तथा
मार्ताण्डेन्दुमनोजहंसवसुधामायाभिरुत्तंसितैः ।
सोमाम्बुक्षितिशक्तिभिः प्रकटितैर्बाणाङ्गवेदैः क्रमा-
द्वर्णैः श्रीशिवदेशिकेन विदितां विद्यां तवाम्बाश्रये ॥१७॥

(தா-ம்) இந்த ஶ்லோகம் பிரக்ஷிப்தம்.

ब्रह्मा = கவர்க்கத்தின் முதலெழுத்து.

योनिः = உத்பத்தி ஸ்தானமாகும் திரிகோணவடிவமான பதினோராவது ஸ்வரம்.

रमा = லக்ஷ்மீ ; நான்காவது ஸ்வரம்.

सुरेश्वर = இந்திரன் ; யவர்க்கத்தில் மூன்றாவது எழுத்து.

सुहृल्लेखा = ஹகாரம், ரேபம், ஈகாரம், பிந்து இவைகளின் ஸமுதாயம்.

இவ்வைந்து பீஜங்களும் சேர்ந்தது வாக்பவ கூடமாகும்.

मार्ताण्ड = ஸூர்யன் ; பவர்க்கத்தில் நான்காவது வர்ணம்.

इन्दु = சந்திரன் ; பவர்க்கத்தில் மூன்றாவது எழுத்து.

मनोज = மன்மதன் ; கவர்க்கத்தில் முதல் எழுத்து.
हंस = ஶவர்க்கத்தில் நான்காவது எழுத்து.
वसुधा = பூமி ; யவர்க்கத்தில் மூன்ருவது வர்ணம்.
माया = ह्लेखा.

இந்த ஆறுபீஜங்களுங்கூடியது காமராஜ கூடமாகும்.

सोम = சந்திரன் ; ஶவர்க்கத்தில் மூன்ருவது வர்ணம்.
अम्बु = ஜலம் ; கவர்க்கத்தில் முதலாவதெழுத்து.
क्षिति = பூமி ; யவர்க்கத்தில் மூன்ருவதெழுத்து.
शक्ति = ह्लेखा.

இந்த நான்கு பீஜங்களும் கூடியது சக்திகூடமெனப் படும்.

ஓ தாயே! மேற்கூறிய உன்னுடைய மஹாவித்தை ஸாக்ஷாத் பரமேஶ்வரனுகிய ஆதி நாதனுல் வெளியிடப் பட்டது. அத்தகைய மஹிமை பொருந்திய வித்தையை நான் ஆஶ்ரயிக்கிறேன். (17)

(அ-கை) கூடத்திரய ஞான மாத்திரத்தினுலேயே கூறிய மஹாஸித்தியடையப்படுமாயின், "நித்தியோபாஸனை செய்தல் அவசியம்" என்று பரமேஶ்வரன் வேதத்தில் கூறியது வியர்த்தமேயாகுமன்ருே? என்று ஆசங்கித்து இதில் ஸாங்கோபாங்கமான பரதேவதோபாஸனை அவசிய கர்த்தவ்வியமெனப் பிரதிபாதனம் செய்கின்றனர்.

नित्यं यस्तव मातृकाक्षरसखीं सौभाग्यविद्यां जपे-
त्संपूज्याखिलचक्रराजनिलयां सायंतनाग्निप्रभाम् ।
कामाख्यं शिवनामतत्त्वमुभयं व्याप्यात्मना सर्वतो
दीव्यन्तीमिह तस्य सिद्धिरचिरात्स्याच्चवत्स्वरूपैकता ॥ १८ ॥

(தா--ம்) ஹே ஸௌபாக்கிய வித்யேஸ்வரி! எந்த உபாஸகன், பிரதி தினம், அகில பூமண்டல ஸ்வரூப ஸ்ரீ சக்கிரராஜத்தில் நிலைபெற்று விளங்குபவளும், ஸந்தியா காலத்தில் ஜ்வலிக்கும் அக்கினியைப்போல் அருண நிறமாய் விளங்குபவளும், பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேஸ்வரன், ஸதாசிவனென்னும் இவர்களாலாகும் மஹா மஞ்சத்தையும், பிரிதிவி முதல் சிவனீருகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களையும், ஸ்ரீமகாகாமேஶ்வரனையும் தனது நிஜஸ்வரூபத்தால் வியாபித்து எங்கும் அகண்டமாய் விளங்குபவளாயுமுள்ள சித்சக்தியைப் பரிவார தேவதைகளுடன் ஸாங்க ஆவரண பூஜையைச் செய்து உனது ஸௌபாக்கிய வித்தையை மாத்ருகா அக்ஷமாலையோடு ஜபம் செய்கின்றானோ அவனுக்குச் சீக்கிரத்திலேயே அபீஷ்டஸித்தி ஏற்படுவதுடன் உன் ஸாயுஜ்யமும் ஏற்படுகின்றது.

(வி-ரை) ஸ்ரீ சக்கிரத்தின் ஸ்வரூபம் **श्रीचक्रं श्रुतिमूलकोश** மென்னும் ஶ்லோகத்தில் நன்கு விமர்ச்சிக்கப்படும்.

संपूज्य என்பதனல் ஸாங்க ஆவரணார்ச்சனம் குறிப்பிடப்பட்டது. பூதசுத்தி, நியாஸங்கள், பாத்ராஸாதனம், அந்தர்யாகம், பஹிர்யாகம், ஸுவாஸினீபூஜை முதலியன அங்கங்களாகும். தத்துவ ஶோபனத்தோடுகூடி விளங்கும் பஞ்சபிரஹ்ம மஹாமஞ்சத்தின்மேல் மஹா காமேஶ்வரனது இடது தொடையின்மேல் அமர்ந்துள்ள காரணத்தால் அவை பரதேவதாஸ்வரூபத்தால் வியாபிக்கப்பட்டதெனக் கூறப்பட்டது.

ஸௌபாக்கிய வித்தை:—ஸகல ஸௌபாக்கியங்களும் ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரியின் ஜபத்தால் ஏற்படுவதால் அதற்கு ஸௌபாக்கியவித்தை யென்னும் பெயர் ஏற்பட்

டது. பாலா பீஜங்கள் மூன்றையும் தனித்தனி ஸ்ரீ பஞ்ச தசாக்ஷரியின் ஒவ்வொரு கூடத்தின் முன் சேர்க்கப் பதினெட்டு பீஜங்களாகும். இது ஸௌபாக்கிய வித்தை யென்பது ஸம்பிரதாயமாகும்.

மாத்ருகா அக்ஷமாலை :—மாத்ருகைகள் ஐம்பத் தொன்று; अ முதல் क வரையில் நேராகச்சொல்லி क्ष காரத் தைவிட்டு மறுபடியும் क முதல் अ வரையில் தலைகீழாகச் சொன்னால் அது ஒரு அக்ஷமாலையாம். இந்த மாலைக்கு क्ष காரம் மேருவாம். இதைச்சேர்க்கக் கூடாதென்பது விதி. இங்ஙனம் கணக்கிடின் ஒரு அக்ஷமாலை நூறு எண்ணிக்கையாகின்றது. இத்தகைய அக்ஷமாலையோடு சேர்த்து ஜபம் செய்வது க்ஷிப்பிர பலதாயகமா மென்பது சாஸ்திர சித்தாந்தமாகும். (18)

(அ—கை) ஸ்ரீ பரதேவதையை நன்கு ஆராதிக்காமல் ஒருவன் எவ்வளவு காலம் எத்தனை சாஸ்திரங்களைக் கற் றினும் அவை பயன்படுவதில்லை யென்பது இந்த ஸ்லோகத் தில் வற்புறுத்தப்படுகின்றது.

काव्यैर्वा पठितैः किमल्पविदुषां जोघुष्यमाणैः पुनः
किं तैर्व्याकरणैर्विबोबुधिषया किं वाभिधानश्रिया ।
एतैरम्ब न बोभवीति सुकविस्तावत्तव श्रीमतो-
र्यावन्नानुसरीसरीति सरणिं पादाब्जयोः पावनीम् ॥ १९ ॥

(தா—ம்) ஹே அம்ப! உத்தமமான வித்யாஸம்பத்து முதலிய சிறப்புக்களைத்தரும் உனது சரண கமலங்க ளினுடைய பரிசுத்தமான மார்க்கத்தை எவ்வளவு காலம்

ஒருவன் நன்ருக அநுசரிக்கவில்லையோ, அவ்வளவு காலம் வரை, அற்பமதியையுடைய அவன், மஹா கவிகளியற்றிய மஹா காவ்வியங்களைப் படித்ததனுல் என்ன பயனுண்டாகும்? நன்ருக அப்பியாஸம் செய்யப்பட்டு வாதத்தில் வியவஹாரம் செய்யப்படுகின்ற வியாகரணம் தர்க்கம் முதலியவற்ருல் தான் என்ன பிரயோஜனம்? கற்றதைப் பிறர் வியக்கும்படி சமத்காரமாய்ப் பேசுவதால்தான் என்ன பயன்? விசேஷமான அறிவைப் பெறவேண்டுமென்னும் விருப்ப முடைமையால் தான் என்ன பயன்? இவற்ருல் அவன், ஞானிகளாகிற வித்வான்களைச் சந்தோஷப்படுத்தக்கூடிய கவிதா சக்தியுள்ளவனுக ஆவதேயில்லை; அது உனது உபாஸனையால் தான் ஏற்படும். (19)

(அ—கை) ஸ்ரீ வித்யோபாஸகர்களுக்குப் பிறரால் அநிஷ்டமாய்ப் பாவிக்கப்படும் வஸ்துக்கள் கூட இஷ்டமானவையாய்ப் பவிக்குமென்பது இதில் நிர்த்தேசம் செய்யப்படுகின்றது.

गेहं नाकति गर्वितः प्रवणति स्त्रीसंगमो मोक्षति
द्वेषी मित्रति पातकं सुकृतति क्ष्मावल्लभो दासति ।
मृत्युर्वैद्यति दूषणं सुगुणति त्वत्पादसंसेवनात्
त्वां वन्दे भवभीतिभञ्जनकरीं गौरीं गिरीशप्रियाम् ॥ २० ॥

(தா--ம்) பிறப்பாகும் மஹாபயத்தை யொழித்தருளும் அபயஸ்வரூபியே! உனது சரணங்களைச் சேவிப்பதனுல், கிருஹமானது துன்பத்தைத் தருவதாயினும் அது இன்பத்தைத்தரும் ஸ்வர்க்கத்துக்கு ஸமானமாகின்றது;

அஹங்காரத்தினுல் கர்வங்கொண்டவன் வணங்குகின்ருன்; சிற்றின்பம் பேரின்பமாகின்றது; சத்துரு மித்திரனுகின்றனன்; பாபகிருத்தியங்களெல்லாம் தர்மமாக மாறுகின்றன; அரசனும் அடிமையாகின்ருன்; பிராணனை யபகரிக்க வரும் மிருத்யுவும் பிராணனைக் காப்பாற்ற வழிதேடும் வைத்தியனுகின்ருன்; பிறர் செய்யும் தூஷணையாவும் அவனுக்குப் பூஷணமாகின்றன. ஆதலின் பரமசிவத்தின் மஹிஷியாயும், கௌரியாயுமுள்ள உனது ஸ்வரூபத்தை நமஸ்கரிக்கின்றேன். (20)

(அ--கை) ஸாதகனுக்குக் கிருதகிருத்யத்துவஸித்தியின் பொருட்டு, காமகலாஸ்வரூப பிந்துத்திரயங்களின் விலாஸமான பாஹ்யாந்தர மும்மைகளின் விமர்ஶன பூர்வகமாய்த் திரிபுராசப்தத்தின் அர்த்தத்தைப் பிரதிபாதனம் செய்கின்றனர்.

आद्यैरग्निरवीन्दुबिम्बनिलयैरम्ब त्रिलिङ्गात्मभि-
र्मिश्रारक्तसितप्रभैरनुपमैर्युष्मत्पदैस्तैस्त्रिभिः ।
स्वात्मोत्पादितकाललोकनिगमावस्थामरादित्रयै-
रुद्भूतं त्रिपुरेति नाम कलयेद्यस्ते स धन्यो बुधः ॥२१॥

(தா--ம்) ஹே மாதா! உமக்குத் திரிபுரா வென்னும் திருநாமமானது, உமது பராஸ்வரூபமாயும், த்ரிபிந்து ஸ்வரூபமாயுமுள்ள காமகலையா லேற்பட்ட மும்மைகளினுல் வந்ததென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவைகள் எவையெனின், अ. क. थ. ह. क. क्ष என்னும் மாத்ருகாத்ரிகோணமணிபீடம்; அக்கினி, ஸூர்ய ஸோம மண்டலத்திரயம்; மூலாதாரம், ஹ்ருதயம், புருவமத்திகளில் விளங்

கும் ஸ்வயம்பு, பாண, இதரங்களென்னும் லிங்கத்திரயங்கள்; சுக்கிலம், ரக்தம், மிஶ்ரமென்னும் சரணத்திரயங்கள்; காலை, உச்சிப்போது, மாலையென்னும் காலத்திரயங்கள், ஸ்வர்க்கம், மர்த்தியம், பாதாளமென்னும் லோகத்திரயங்கள்; ருக், யஜுஸ், ஸாமமென்னும் நிகமத்திரயங்கள்; ஜாக்கிரம், ஸ்வப்நம், ஸுஷுப்தி யென்னும் அவஸ்தாத்திரயங்கள்; பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரரென்னும் தேவதா (மூர்த்தி) த்திரயங்கள்; இங்ஙனம் மும்மூன்றாய் ஏற்பட்டுள்ள பொருள்களுக்கெல்லாம் நீயே அதிஷ்டானமாய் விளங்குகின்றனை யென்னும் உண்மையை எவன் நிச்சயமாய் அறிகின்றானோ அவனே தன்னியன், ஞானி; கிருதகிருத்தியனும் அவனே யாவன்.

(வி—ரை) ஆதி சப்தத்தினால் காமகிரி, பூர்ணகிரி, ஜாலந்தர மென்னும் பீடத்திரயங்கள், கார்ஹபத்தியம், ஆஹவநீயம், தக்ஷிணாக்கினி என்னும் வஹ்நித்திரயங்கள் இச்சா, ஞானம், கிரியைகளென்னும் சக்தித்திரயங்கள், முதலியனவும் கொள்ளத்தக்கன. இங்ஙனம் மும்மூன்றாய் உள்ளனவற்றிற்கெல்லாம் அதிஷ்டானமாய் பரதேவதை விளங்குவதால் அவளுக்குத் திரிபுரை யென்னும் பெயரேற்பட்ட தென்னும் தத்துவத்தைச் சற்குருபால் விதிப்படி யறிந்த உபாஸகன் ஸ்வஸ்வரூப ஆத்ம ஞானத்தைப்பெற்றுத் தன்னியனாகின்றனன். (21)

(அ—கை) மும்மைகளுக்குக் காரணமாயும், காமகலா ஸ்வரூபிணியாயுமுள்ள பரதேவதையின் பஞ்சதசாக்ஷரீ வித்தையின் கூடத்திரயங்கள் வாச்சிய, வாசக, வக்தாஸ்வரூப அக்ஷரத்திரயவடிவ பிரணவஸ்வரூபமா யிருக்கின்றதென்பது கூறப்படுகின்றது.

आद्यो जाप्यतमार्थवाचकतया रूढः स्वरः पञ्चमः
सर्वोत्कृष्टतमार्थवाचकतया वर्णः पवर्गान्तकः ।
चक्तृत्वेन महाविभूतिसरणिस्त्वाधारगो हृद्गतो
भ्रूमध्ये स्थित इत्यतः प्रणवता ते गीयतेऽम्बागमैः ॥२२॥

(தா—ம்) ஹே அம்பிகே! பிரணவமானது மூன்று அக்ஷரங்களோடுகூடி விளங்குகின்றது. அவற்றுள் முதலாவதான அகாரமானது, ஜபிக்கக்கூடிய மந்த்ரங்களுக்கெல்லாம் உத்க்ருஷ்டமான ஸ்ரீ வித்தையின் அர்த்த பூதமான உம்மையே பிரதிபாதிக்கின்றது; அதன் இரண்டாவது வர்ணமாகிய உகாரமானது சிறந்த வஸ்துக்களிலெல்லாம் சிறந்த உம்மையே தெரிவிக்கின்றது; அதன் மூன்றாவது வர்ணமாகும் மகாரம் மஹா விபூதியாகும் பரமைச்வர்யத்தை யளிக்கின்றதென்னுங் காரணத்தால் மஹா ஸௌபாக்கிய வடிவ உம்மையே குறிக்கின்றது. மேற்கூறிய அகார, உகார, மகாரங்கள் முறையே மூலாதாரம், ஹ்ருதயம், புருவமத்திகளில் விளங்குகின்றன வென்றும், வாசகம், வாச்சியம், வக்தாஸ்வரூபமாய் இருக்கின்றன வென்றும், ஆதலின் உமக்குப்பிரணவஸ்வரூப முண்டென்றும் வேதாகமங்கள் கோஷிக்கின்றன.

(வி—ரை) आद्यः=மாத்ருகா வர்ணமாலையில் முதலாவது அகாரம்; ஐந்தாவது ஸ்வரம் உகாரம்; பவர்க்கத்தில் கடைசி யெழுத்து மகாரம். अकारः सर्ववर्णाग्र्यः प्रकाशः परमः शिवः என்னும் ஸங்கேத பத்ததியின் பிரமாணத்தின்படி அகாரம் பரப்பிரஹ்ம வாசகம். உகாரம் விஷ்ணு வாசகம். कदाचिदाद्या ललिता पुंरूपा कृष्णविग्रहा என்னும் தந்த்ரராஜ வசனத்தின்படி சித்சக்தியின் புருஷ வடிவமே விஷ்ணு

வாதலின் விஷ்ணு சக்திகளுக்குப்பேதமின்மையின் உகாரம் சக்திவாசகமு மாகும்.

மகாரம் ஜீவ வாசகம்; வக்தா. அகாரம் வாசகம் சப்தரூபம்; உகாரம் வாச்சியம் சித்சக்தி ரூபம். ஆதலின் வாசக, வாச்சிய, வக்த்ருவடிவ திரிபுடி ஸ்வரூபமே அகார, உகார, மகாரங்களாகும். ஆதலின் திரிபிந்து ஸ்வரூப காம கலா வடிவமாகும்.

அகாரம் அக்கினிமண்டலம், மூலாதாரம்.
உகாரம் ஸூர்யமண்டலம், ஹ்ருதயம்.
மகாரம் ஸோம மண்டலம், புருவமத்தி.
இவற்றின் ஸமஷ்டி ஓம் என்னும் பிரணவம்.
ஓம் என்பதன் நாதமே அர்த்தமாத்திரை யாகும்.

उमेति परमा शक्तिः पूर्वभावमुपेयुषी ।
अध्युष्टवलयाकारा प्रणवत्वमुपागता ॥

அத்யுஷ்ட வலயம் = மூன்றரைச்சுற்று வளைவு. அகார, உகார, மகாரங்கள் மூன்று சுற்றுகள். அர்த்த மாத்திரை = பாதி வளையம்: ஆக மூன்றரைச் சுற்றுகள். ஆதலின் பிரணவ ஸ்வரூபமே அத்யுஷ்ட வலய மென்பதன் ரஹஸ்யார்த்தமாம். ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ வித்தையின் வாக்பவகூடம் அகாரம், காமராஜ கூடம் உகாரம், சக்தி கூடம் மகாரம்: அந்திய கூடத்தின் நாதமே அர்த்த மாத்திரை. ஆதலின் பஞ்சதசாக்ஷரீ வித்தை பிரணவ வடிவமே யாகும். (22)

(அ-கை) ஸ்ரீ பரதேவதைத் துரீய பாதத்தோடும் சிரஸோடுங்கூடிய காயத்ரீஸவரூபமாகவும், ஸர்வ தர்ஶனங்களுக்கும் அதிதேவதையாகவும், ஸர்வமதங்களுக்கும் அதிஷ்டான ஸ்வரூபமாகவும் வர்ணிக்கப்படுகின்றனள்.

गायत्री सशिरास्तुरीयसहिता सन्ध्यामयीत्यागमै-
राख्याता त्रिपुरे त्वमेव महतां शर्मप्रदा कर्मणाम् ।
तत्तद्दर्शनमुख्यशक्तिरपि च त्वं ब्रह्मकर्मेश्वरी
कर्तार्हन्पुरुषो हरिश्च सविता बुद्धः शिवस्त्वं गुरुः ॥ २३ ॥

(தா—ம்) ஹே த்ரிபுரசுந்தரியே! உம்மை வேதங்களும் ஆகம சாஸ்திர புராணுதிகளும், துரீய பாதத்தோடும் சிரோ மந்த்ரத்தோடுங்கூடிய காயத்ரீ மஹாமந்த்ரத்தின் அதிஷ்டான ஸ்வரூபமாகக்கூறுகின்றன. அன்றியும் நீயே ஸ்ரௌத, ஸ்மார்த்த, நித்திய, நைமித்திக, காம்யாதி கர்மங்களின் பயனுன ஸுகத்தை யருள்பவளாயும், வேதாந்திகளுக்குப் பிரஹ்மஸ்வரூபமாகவும், பூர்வமீமாம்ஸகர்களுக்குக் கர்மமாகவும், சாக்தர்களுக்குப் பராசக்தியாகவும், தார்க்கிகர்களுக்குக் கர்த்தாவாகவும், சார்வாகர்களுக்கு அதாவது தேஹாத்மவாதிகளுக்கு அர்ஹனுகவும், ஸாங்கியர்களுக்குப் புருஷனுகவும், வைஷ்ணவர்களுக்கு விஷ்ணுவாகவும், ஸௌரர்களுக்கு ஸூர்யனுகவும், பௌத்தர்களுக்கு புத்தராகவும், சைவர்களுக்குச்சிவனுகவும் விளங்குகின்றனே. எல்லா மதங்களிலும் தர்சனங்களிலும் முதல் முதலில் வழிபடத்தக்க குருரூபிணியாகவும் நீயே பிரகாசிக்கின்றனே.

(வி—ரை) இந்த ஸ்லோகத்தில், பரதேவதைக்கு ஸர்வமதங்களின் அதிஷ்டானத்துவம் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ வித்தையின் ஒவ்வொரு கூடத்திற்கும் துரீய பாதத்தோடு கூடிய காயத்திரீஸ்வரூபம் திரிபுராதாபினீ உபநிஷத்தில் பிரதிபாதிக்கப்பட்டிருப்பது அறியத்தக்கது.

सशिराः तुरीयसहिता என்று கூறப்பட்டுள்ளதால் ஸ்ரீமஹா ஷோடசீஸ்வரூபமும் ஸூசிப்பிக்கப்படுகின்றது. பிரணவ வியாஹ்ருதிகள் ஒரு கூடம், திரிபதா காயத்ரீ மூன்று கூடங்கள், துரீயபாதம் ஒரு கூடம், சிரோமந்த்ரம் ஒரு கூடம். ஆக ஆறு கூடங்கள். இந்த ஆறு கூடங்களும் ஸ்ரீ மஹாஷோடசியின் ஆறுகூடங்களோடு துல்யமானவை யென்றுணரத்தக்கது.

संध्यामयी = ஸந்தியாகாலஸ்வரூபிணி. ஸந்திகள் நான் கென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பிராதஸ் ஸந்தி, மாத்யாந்ஹிக ஸந்தி, ஸாயம் ஸந்தி, துரீய ஸந்தி யென்பன வாம். இந்த நான்கு ஸந்திகளிலும் காயத்ரீஸ்வரூப மாகப் பரதேவதையே உபாஸிக்கப்படுகின்றனள். வாக் பவகூட காயத்ரீ, காமராஜகூட காயத்ரீ, சக்திகூட காயத்ரீ, துரீயகூட காயத்ரீ என நான்கு காயத்ரீகள் ஸ்ரீ வித்யோ பாஸ்தியில் மிகப்பிரசித்தமானவை. (23)

(அ-கை) இந்த ஶ்லோகத்தில் பஞ்சகோசங்களுக் கும் அதீதமானதும், விலக்ஷணமானதுமான ஆத்மஸ்வ ரூபமே பரதேவதை யென்றும், விஶ்வாதிஷ்டான பரப் பிரஹ்மத்திற்கும் பரதேவதைக்கும் கிஞ்சித்தும் பேத மில்லை யென்றும், ஆதலின் பரதேவதையை யுள்ளபடி அறிந்தவனே பிரஹ்மவித் என்றுங் கூறப்படுகின்றது.

अन्नप्राणमनःप्रबोधपरमानन्दैः शिरःपक्षयु-
क्पुच्छात्मप्रकटैर्महोपनिषदां वाग्भिः प्रसिद्धीकृतैः ।
कोशैः पञ्चभिरेभिरम्ब भवतीमेतत्प्रलीनामिति
ज्योतिःप्रज्वलदुज्ज्वलात्मचपलां यो वेद स ब्रह्मवित् ॥२४॥

(தா-ம்) ஹே அம்பிகையே! அந்நமயம், பிராண மயம், மனோமயம், விக்ஞானமயம், ஆநந்தமயம் என்னும் பஞ்சகோசங்களும் முறையே சிரஸ், இரண்டு இரக்கைகள், புச்சம் (வால்), ஆத்மாவாக நான்மறைகளின் சிரோபாகங்களான வேதாந்தங்கள் முறையிடுகின்றன. இங்ஙனம் அந்நமயாதி பஞ்சகோசவடிவ விச்வ சரீரத்திற்குள் அநுப்பிரவேசித்து, அதிஷ்டானமாயும், ஸ்வயம்பிரகாசவடிவமாயும், ஜ்யோதிர்மயமான மின்னலைப்போல் பிரகாசிப்பவளாயுமுள்ள உமது ஸ்வரூபத்தை எந்த உபாஸகன் குருபதேசத்தின் மூலமாய்த் தெரிந்துகொண்டிருக்கின்றானோ அவனே பிரஹ்மவித் எனப்படுவன்.

(வி-ரை) பஞ்சகோசவிலக்ஷணமாயும் அவஸ்தாத்திரய ஸாக்ஷியாயுமுள்ளது அஹம்பத லக்ஷ்யார்த்த பிரத்தியகாத்மாவாகும். இந்த அஹம்பதலக்ஷ்ய ஆத்மஸ்வரூபமே பரதேவதை. पञ्चकूटात्मिका विद्या त्रिपुरा ललिताम्बिका என்னும் பிரமாணம் பஞ்சகோசங்களுக்கு அதீதமாயும், ஜாக்கிரஸ்வப்ன ஸுஷுப்திகளில் ஸாக்ஷிரூபமாய் விளங்குபவளாயுமுள்ள ஸ்ரீ பரதேவதையின் ஸ்வரூபத்தை நிர்ணயிப்பது அறியத்தக்கது.

वेदनं — அறிதல்; இதனால் அறிபவன், அறியப்படுவது, அறிவு என்னும் திரிபுடி ஸித்திக்கின்றது. வியாபக பூமாஸ்வரூப, அஹம்பதலக்ஷிய, ஆத்மவடிவ, பரதேவதையை அகண்டாகார வ்ருத்தியினால் தான் அறியமுடியும். இந்த அகண்ட வ்ருத்தியில் அறிதல் என்னும் அதிஸூக்ஷ்ம சுத்த கர்மமும், அறிபவனும் ஒடுங்க, பிரஹ்மாபின்ன ஆத்மஸ்வரூபமே யாகின்றனன். ஆதலின் ब्रह्मवित् ब्रह्मैव भवति - பிரஹ்மத்தை யறிந்தவன் பிரஹ்மமே யாகின்றனன் என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன.

ஆத்மாவின் உபாதியாகும் பஞ்சகோசங்களும் விஸ்வ சரீரமாகக் கூறப்பட்டுள்ளன. ஈக்ஷணாதி பிரவேசாந்த மான ஶ்ருதிகள் ஆத்மஸ்வரூபத்திற்கு ஜீவபாவம் கற்பித்து ஒரு பக்ஷியின் ஆகாரமாக வர்ணிக்கின்றன. அதற்கு அந்ந மயகோசம் தலை. பிராணமயம், மனோமயம் என்னும் இரண்டு கோசங்களும் இரண்டு பக்ஷங்கள் (இரக்கைகள்). விஞ்ஞானமயகோசம் வால் (புச்சம்). ஆநந்தமயகோசம் ஆத்மா. இங்கே ஆத்மா வென்னும்பதத்திற்கு ஜீவாத்மா வென்பது பொருளாகும். கூடஸ்தஸாக்ஷியே சுத்த ஆத் மஸ்வரூபமாகும். (24)

(அ--கை) இதுகாறும் श्रीमातः என்னும் ஶ்லோகம் முதல் अन्नप्राणमनः என்னும் ஶ்லோகம் வரையில் கூறப்பட்ட அதிரஹஸ்யமான விஷயங்கள் யாவும் ஸத்குருவினிடத்தில் விதிப்படி தீக்ஷையைப்பெற்ற ஸச்சிஷ்யனுக்கே விளங் கும். குருபரம்பராக்கிரமத்தில் வராத அதீக்ஷிதனுக்கு விளங்கவே விளங்காது. ஆதலின் தீக்ஷையைப் பெறுதல் அத்தியாவசிய மென்றும், தீக்ஷையினால் அடையும் மஹா பலன் இது வென்றும் இதில் கூறப்படுகின்றது.

सच्चित्त्वमसीति वाक्यविदितैरध्यात्मविद्याशिव-
ब्रह्माख्यैरखिलप्रभावमहितैस्तत्त्वैस्त्रिभिः सद्गुरोः ।
त्वद्रूपस्य मुखारविन्दविवरात्संप्राप्य दीक्षामतो
यस्त्वां विन्दति तत्त्वतस्तदहमित्यार्ये स मुक्तो भवेत् ॥२५॥

(தா-ம்) ஹே ஆர்யே! உம்முடைய ஸ்வரூபமான, ஸத்குருவின் முகாரவிந்தத்தினின்று, "ஸத்," "சித்," "தத்துவமஸி" என்னும் உபதேச மஹா வாக்கியங்களால் முறையே அறியப்படுவனவாகும் ஆத்ம தத்துவம், வித்யா

தத்துவம், சிவ தத்துவம் என்னும் மூன்று தத்துவங்களின் சோதனையால் பிரகாசிக்கும் பிரஹ்ம அல்லது துரீய தத்துவஸ்வரூப பூர்ண தீக்ஷையைப்பெற்று எந்த ஸாதக முமுக்ஷுவானவன் உம்மை ஸந்தேஹ விபரீதங்களற "ஸோஹம்" என்று அறிகின்றானோ அவன் ஜீவன் முக்தனாகின்றான்.

(வி-ரை) तत्र सर्वथा मतिमान् दीक्षेत என்பது பரசுராம கல்ப ஸூத்திரம். "பிரஹ்மம் விளங்கவில்லை" யென்னும் அபாநாபாதக ஆவரண பூமிகையில், விவேகியாகும் தீவிரதர முமுக்ஷுவானவன் எங்ஙனமாவது தீக்ஷையைப் பெறுதல் அத்தியாவசியம்.

தத்துவ சோதனத்தோடு கூடிய மஹாவாக்கிய உபதேசமே தீக்ஷையாகும். இதன் ரஹஸ்யமாவது:—

ஸத்துவமஸி = ஆத்மதத்துவ ஸ்தூலதேஹசோதனம்.

சித்துவமஸி = வித்யாதத்துவ ஸூக்ஷ்மதேஹ சோதனம்.

தத்துவமஸி = சிவதத்துவ காரணதேஹ சோதனம்.

ஸத்சித் தத்துவமஸி = துரீயமாகும் பிரஹ்ம தத்துவ ஸ்வரூபம்.

இந்த துரீயஸ்வரூபம் உவமையற்ற பிரபாவத்தோடு கூடியது. இந்த அகண்டார்த்த போதக ஸர்வதத்துவ சோதனஸ்வரூப மஹாவாக்கியோபதேசத்திற்கே தீக்ஷை யென்று பெயர்.

ஸ்ரீ வித்யா தீக்ஷைக்கு முந்தியே மஹா வாக்கியோபதேசம் பெற்றுள்ளவனே ஸ்ரீ வித்தைக்கு முக்கியாதிகாரியாவன். மஹாவாக்கியோபதேசம் பெற்றும் பிரதிபந்தகங்களின் வலிமையால் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரம் ஏற்படவில்லை. தத்துவசோதனபுரஸ்ஸரமாய் ஏற்படும் மஹா

வாக்கியோபதேசத்தால் பிரதிபந்தகங்கள் கிரமமாய் நசித்து அபரோக்ஷஞான மேற்படுகின்றது. "ஸோஹம், அஹம் பிரஹ்மாஸ்மி" யென்னும் ஸ்வாநுபவமே அபரோக்ஷ ஸாக்ஷாத்காரமாகும். அபரோக்ஷ ஞானுநுபவியே ஜீவன் முக்தன்.

பரதேவதைக்கும் ஸத்குருநாதருக்கும் கிஞ்சித்தும் பேதமில்லை. இவ்விஷயம் குருமண்டலரூபிணீ, குருமூர்த்தி, குருரூபதரா, குருப்ரியா என்னும் நாமங்களால் ஸித்தாந்தப்படுகின்றது. (25)

(அ--கை) "அல்பாயாஸ ஸாத்தியமாயும், நியாஸம், பூஜை முதலிய கலாபங்கள் அற்றவையாயும், முக்தி ஸாதனங்களாயுமுள்ள சைவ, வைஷ்ணவ, ஸௌராதி பல மார்க்கங்களிருக்கையில் வெகு சிரமப்பட்டு ஸாதிக்கக்கூடியதாயும், நியாஸம் பூஜை முதலிய கர்ம கலாபங்கள் நிறைந்ததாயும் அபாரமாயுமுள்ள வித்யோபாஸ்தியாகும் இந்த மார்க்கத்தில் ஆதரவு கொள்ளும்படி ஏன் கூறுகிறீர்" என்று பார்வதி பரமேஶ்வரனைக் கேழ்க்கப் பரமேஶ்வரன் ஸமாதானங் கூறுகிறார். அவ்விஷயம் இதில் பிரதிபாதிக்கப்படுகின்றது.

सिद्धान्तैर्बहुभिः प्रमाणगदितैरन्यैरविद्यातमो
नक्षत्रैरिव सर्वमन्धतमसं तावन्न निर्भिद्यते ।
यावत्ते सवितेव संमतमिदं नोदेति विश्वान्तरे
जन्तोर्जन्मविमोचनैकभिदुरं श्रीशाम्भवं श्रीशिवे ॥ २६ ॥

(தா-ம்) ஆத்மாநந்த ஸ்வரூபிணியாய் விளங்கும் ஓ சிவையே! ஜனன மரண வடிவ ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கித் தவிக்கும் ஜீவனுக்குப் பிறப்பிறப்பற்ற முக்தியை

யளிக்க வல்லதும், ஸர்வமத ஸம்மதமும், ஸித்தாந்த மானதும் ஸர்வோத்க்ருஷ்டமானதுமான "ஸ்ரீ சாம்பவம்" என்னும் ஸ்ரீ வித்தியா மார்க்கமே மிகச்சிறந்ததாம். இந்த ஸத்ஸம்பிரதாய ஸித்தமான சிவ சக்தி ஸாமரஸ்ய அகண்டஞான ஸூர்யன் எதுவரை யிவ்வுலகில் உதிக்கவில்லையோ அதுவரையில், பிரத்தியக்ஷாதி பிரமாணங்களால் ஸித்தித்தனவாயும், நானுவாய் விளங்குவனவாயுமுள்ள ஸாங்கிய, தார்க்கிகாதியரின் ஸித்தாந்தமான நக்ஷத்திரங்களால் அஞ்ஞான இருள் நீங்காது. காடாந்தகாரம் அற்பப் பிரகாசமுள்ள நக்ஷத்திரங்களால் நீங்குமோ ?

(வி-ரை) अविद्यातमः = மயக்கத்தை யுண்டுபண்ணுவதால் அவித்தையே இருள் எனக்கூறப்பட்டது. எங்ஙனம் பேரிருளானது சிறிய நக்ஷத்திரப்பிரகாசத்தால் நீங்காதோ அங்ஙனமே துவைத மதங்களாலேற்பட்ட அஞ்ஞானமாகிற பேரிருள் அத்வைத ஸித்தாந்தமாகும் ஸ்ரீ சாம்பவ அதாவது ஜீவப்பிரஹ்மைக்கிய அகண்டஞான சூரியனுலன்றி மற்றென்றுல் நீங்காது. ஆதலின் ஜீவர்களின் ஸம்ஸார பந்தத்தை நீக்கவல்ல ஒப்பற்ற மார்க்கம் சாம்பவமாகும் சித்வித்யா மார்க்கமேயாகும். சாம்பவம் என்றதனுல் ஷடன்வய சாம்பவ ஞானம் ஸூசிக்கப்படுகின்றது. ஷண் மதங்கள், ஷட் தர்சனங்கள், ஷட் சாஸ்திரங்கள், ஷடங்கங்கள், ஷடாதாரங்கள், ஷடாம்நாயங்கள், முதலியவற்றின் ஸமன்வயமாகும் அத்விதீய சித்சக்தியபின்ன பரப்பிரஹ்மமே ஷடன்வய சாம்பவ ஞானமாகும். இந்த ஞானம்தான் சித்வித்யோபாஸ்தியின் அவதி. ஆதலின் சாம்பவ தத்துவமாகிய சித் வித்தையே நன்கு உலகில் பிரசாரம் அடைதல் வேண்டும். (26)

(அ-கை) ஆத்மாநுஸந்தானமே அவித்தையை யொழிக்கும் என்பது பரம ஸித்தாந்தமாம். आत्मा रे श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः साक्षात्कर्तव्यः என்னும் பிரமாணத்தின்படி நெடுநாள் இடைவிடாது சிரத்தையுடன் ஆத்மாநுஸந்தானமே செய்யத்தக்கதாலும் தேறப்படுகின்றது. துர்க்கடமாயும், சிரமம் தரத்தக்கதாயுமுள்ள ஸ்ரீவித்யோபாஸ்தியானது ஏன் ஆதரிக்கப்படல் வேண்டும்? என்னும் ஆக்ஷேபணைக்குச் சமாதானம் கூறப்படுகின்றது.

आत्मासौ सकलेन्द्रियाश्रयमनोबुद्ध्यादिभिः शोचितः
कर्माबद्धतनुर्जनिं च मरणं प्रैतीति यत्कारणम् ।
तत्ते देवि महाविलासलहरीदिव्यायुधानां जय-
स्तस्मात्सद्गुरुमभ्युपेत्य कलयेत्त्वामेव चेन्मुच्यते ॥ २७ ॥

(தா-ம்) ஹே தேவி! ஸம்ஸாரியான இந்த ஜீவன் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களுக்கு ஆதாரமான அந்தக்கரணத்தால் துக்கத்தை யநுபவித்துக்கொண்டு சுபாசுப கர்மங்களுக்குட்பட்டு அவற்றின் வாஸனையால், லிங்க சரீரத்தை விருத்திசெய்துகொண்டு ஜனனமரணப் பிரவாஹத்தில் சிக்கிச் சுழன்றுகொண்டிருக்கின்றான்.

இதற்குக்காரணம் மஹாவிலாஸமாகும் சிருங்கார ஸௌந்தரியக் கடலாகும் உமது ஸ்வரூபத்தின் அலைகள் போன்ற திருக்கரங்களில் விளங்கும் திவ்வியமான ஆயுதங்களின் பிரதாபமே யாகும். எப்பொழுது ஒரு ஜீவன் உமது தாதாத்மிய பாவத்தையடைந்த ஸத்குருவை யாச்ரயித்து, அவர் மூலமாய் ஸதுபதேசத்தைப்பெற்று, உமது பாரமார்த்திக ஸ்வரூபத்தைத் தனக்கபின்னமாய் அறிகின்

ரூனே அப்பொழுது உமது ஆயுதங்களின் பிரதாபம் அவனிடத்திற் செல்லுவதில்லே. ஆகவே அவன் முக்த ஞகின்ருன்.

(வி—ரை) பரதேவதையின் ஆயுதங்கள் பாசம், அங்குசம், கோதண்டம், புஷ்ப பாணங்களாம். இவற்றின் பிரதாபமே ஜீவத்துவமும் ஜனனமரண ரூப ஸம்ஸாரமுமாகும்.

ஞானேந்திரியங்கள் :—துவக், சக்ஷுஸ், ஶ்ரோத்திரம், ஜிஹ்வை, கிராண மென்பனவாம்.

கர்மேந்திரியங்கள் :—வாக், பாணி, பாத, பாயு, உபஸ்த மென்பனவாம்.

அந்தக்கரணம் :—மனே, புத்தி, சித்த அஹங்காரங்களாகும்.

மனேவாக்காயங்களாகும் திருக்கரணங்களில் இச்சாக் ஞானக்கிரியைகள் தோன்றி ராகத் துவேஷாதிகளே யுண்டு பண்ணுகின்றன. இவற்ருல் பிரவ்ருத்தி நிவ்ருத்திகளும், ஸுகதுக்கங்களும் ஏற்படுகின்றன. இது தான் ஸம்ஸார பந்தமாகும். இது பரதேவதையின் ஆயுதங்களின் பிரதாபமே யாகுமென்று கூறப்பட்டது.

இச்சாக் ஞானக்கிரியைகளே பரதேவதையின் ஆயுதங்களின் தத்துவமாம்.

इच्छाशक्तिमयं पाशमङ्कुशं ज्ञानरूपिणम् ।
क्रियाशक्तिमये बाणधनुषी दधदुज्ज्वलम् ॥

என்று யோகினீ ஹ்ருதயம் கூறுகின்றது.

பாசம் இச்சாசக்தி; அங்குசம் ஞான சக்தி; தநுர்ப்பாணங்கள் கிரியாசக்தி. தநுஸ்ஸும் பஞ்சபாணங்களும்

முறையே அந்தக்கரணமும் ஞானேந்திரியங்களுமாகும். அந்தக்கரணத்தின் வ்ருத்திகளே ராகத்துவேஷங்களாகும். அஞ்ஞானிகளுக்குப் பந்தத்தையும், ப்ரஹ்ம வித்தியா ஸாதகர்களுக்கு மோக்ஷத்தையும் அருளுவது பரதேவதையின் ஆயுதங்களின் பராக்கிரமமாகும். இவ்விஷயம் भवचक्रप्रवर्तिनी पाशहस्ता என்றும், बन्धमोचनी पशुपाशविमोचनी पाशहन्त्री என்றும் ஸஹஸ்ரநாமம் கூறுவதால் தெளிவாகின்றது.

பரதேவதையின் தியானமே நிதித்தியாஸனமாகும். அஹம்பத லக்ஷ்ய பிரத்தியகாத்மாவே ஸ்ரீ லலிதை யென்பது ஸ்ரீ வித்தையின் பரம ஸித்தாந்தமாகும். அஹம்பத வாச்சியனுன தீவிரதர முமுக்ஷுவானவன், ஜஹதஜஹல் லக்ஷணையால் அவித்தையாகும் உபாதியை நீக்கி ஆத்மஸ்வரூபமாகித் தத்பதலக்ஷ்யார்த்த பிரஹ்மத்தோடு ஐக்கியமாகின்றனன். இதுதான் ஸாக்ஷாத்கார மெனப்படுவது. இதுதான் ஸகல வேதாந்த ஶ்ருதிகளின் பரம தாத்பரியமானது. ஆதலின் ஸ்ரீ வித்தையே பிரஹ்மவித்தை. (27)

(அ—கை) பகவான் துர்வாஸர், இதில் ஸம்ஸாரமாகின்ற ஜனன மரணப் பிரவாஹத்தில் மூழ்கித்தவிக்கும் ஜீவர்களின் க்ஷேமத்தைக் கருதிப் பரதேவதையைப் பிரார்த்திக்கின்றனர்.

नानायोनिसहस्रसंभववशाज्जाता जनन्यः कति
प्रख्याता जनकाः कियन्त इति मे सेत्स्यन्ति चाग्रे कति ।
एतेषां गणनैव नास्ति महतः संसारसिन्धोर्विधे-
र्भीतं मां नितरामनन्यशरणं रक्षानुकम्पानिधे ॥ २८ ॥

(தா-ம்) கருணைக்கடலான பரதேவதையே! எண்ணிறந்த பற்பலயோனிகளிற் பிறந்துள்ள காரணத்தால் எனக்கு எத்தனையோ தாய்தந்தையர் ஏற்பட்டுள்ளார். இனி எனக்கு ஏற்படப்போகும் ஜன்மங்களிலும் எத்தனையோ தாய்தந்தையர் ஏற்படப் போகின்றனர். ஜன்மங்களுக்கும் மாதாபிதாக்களுக்குங் கணக்கே யில்லை. இங்ஙனம் கரைகாணாத அபார ஸம்ஸார ஸாகரத்தைக் கண்டு மஹாபயத்தை யடைந்தவனும் வேறுகதி யற்றவனுமாகிய அடியேனைத் தாங்கள் தான் காப்பாற்றவேண்டும்.

(வி-ரை) अनुकम्पानिधे = தயாஸமுத்திரமே! என்னும் ஸம்போதனம் ஸாபிப்பிராய விசேஷணம். பிரார்த்தனைக்கு உடனே இணங்கி யருள்புரிவது பரதேவதையின் ஸ்வபாவ மாகும்.

துவைததர்சனமாகும் ஸம்ஸாரபயத்திலிருந்து ரக்ஷிப்பது அபேத தர்சனமாகும் அகண்ட ஞானமேயாகும். இந்த அகண்ட (அபேத) ஞானம் மஹாவாக்கியோபதேசத்தினுல் ஏற்படுவதாகும். இதற்கு ஸத்குருவின் கருணை வேண்டும். ஸ்த்குருஸ்வரூபிணியே பரதேவதை. ஆதலின் பரதேவதை குருவாகவும், மாதாபிதாக்களாகவும் விளங்குவது சாஸ்திர ஸித்தாந்தமாகும்.

தந்தைதா யாவானும் சார்கதியிங் காவானும்
அந்தமிலா வின்பநமக் காவானும்—எந்தனுயிர்
தானாகு வானும் சரணாகுவானு மருட்
கோனாகு வானுங் குரு.

ஆதலின் குருஸ்வரூபிணியாயுள்ள பரதேவதையைத் தவிற வேறு அடைக்கலம் ஜீவர்களுக்கு இல்லை யென்பது திரண்ட பொருளாகும். (28)

(அ—கை) காயிக, வாசிக, மானஸிக கர்மாக்களால் நித்தியானந்த மோக்ஷம் ஸித்திக்காது என்னும் விஷயம் இதில் பிரதிபாதிக்கப்படுகின்றது.

देहक्षोभकरैर्व्रतैर्बहुविधैर्दानैश्च होमैर्जपैः
संतानैर्हयमेधमुख्यसुमखैर्नानाविधैः कर्मभिः ।
यत्संकल्पविकल्पजालमलिनं प्राप्यं पदं तस्य ते
दूरादेव निवर्तते परतरं मातः पदं निर्मलम् ॥ २९ ॥

(தா—ம்) ஓ தாயே! சரீரத்திற்குச் சிரமம் தரக்கூடிய பலவகையான விரதங்களாலும், தானங்களாலும், ஜப ஹோமங்களாலும், ஸந்தானத்தாலும், அஸ்வமேதாதி மஹாயாகங்களாலும், இன்னும் இத்தகைய பற்பல கர்மாக் களாலும் அடையக்கூடியதும், ஸங்கல்ப விகல்பங்களால் மாலின்யமானதுமான ஆமுஷ்மிக ஸ்வர்க்க பதவியானது நஶ்வரமானது. உம்முடைய ஸ்தானமோவெனின் அதற்கு அதாவது ஸ்வர்க்கபதவிக்கு வெகு தூரமானது; என்றால், விலக்ஷணமான தென்பது பொருள். ஆதலின் நித்திய மும், உத்கிருஷ்டமும் பரிசுத்தமுமாகும்.

(வி—ரை)

न कर्मणा न प्रजया धनेन त्यागेनैकेऽमृतत्वमानशुः ।

என்னும் பிரமாணத்தின்படி அம்ருதத்துவ ஸ்வரூப மோக்ஷமானது கர்மாக்களாலும், ஸந்தானத்தினுலும், செல்வத்தினுலும் அடையப்படமாட்டாது. ஆனுல் அது அக்ஞானத்தின் நீக்கத்தினுல் மட்டுமே அடையத்தக்க தாகு மென்றேற்படுகின்றது.

கர்மாக்களெல்லாம் அஞ்ஞான காரியங்களாகும். ஆதலின் கர்மாக்கள் அஞ்ஞானத்தை யொழிக்கா.

"இந்தக் காரியத்தைச் செய்கிறேன்" என்பது ஸங்கல்பமும், "செய்யவில்லை" யென்பது விகல்பமுமாகும். அக்ஞானமே மாலின்யம் (அழுக்கு) எனப்படும்.

புண்ணியகர்மாக்களால் ஸ்வர்க்காதிலோகாந்தரங்களும், பாப கர்மாக்களால் நரகாதிகளும் ஜீவனுல் அடையப்படுகின்றன. இவை யாவும் அநித்தியங்களே. புண்ணிய பாபங்களின் அநுபவகாலம் முடிந்தபின் மறுபடியும் இம்மண்ணுலகில் பிறத்தல் நியமம். பரமபதமாகும் பரதேவதையின் ஸ்தானமோ அழிவில்லாதது; அக்ருதமானது. அக்ஞானத்திற்கு அதீதமானது. (29)

(அ-கை) சப்தப்பிரபஞ்சமான ஸகல மாத்ருகைகளுக்கும் மூல பூதமான அகார ஹகார வடிவ பராசக்தி ஸ்வரூப காமகலை இதில் ஸ்துதிக்கப்படுகின்றனள்.

पञ्चाशन्निजदेहजाक्षरमयैर्नानाविधैर्धातुभि-
र्बह्वर्थैः पदवाक्यमानजनकैरर्थाविनाभावितैः ।
साभिप्रायवदर्थकर्मफलदैः ख्यातैरनन्तैरिदं
विश्वं व्याप्य चिदात्मनाहमहमित्युज्जृम्भसे मातृके ॥३०॥

(தா-ம்) ஓ மாத்ருகா ஸ்வரூபிணியான பரதேவதே! உமது ஸூக்ஷ்மதமசரீரமாகும் பராவாக்கிலிருந்து ஆவிர்ப்பவித்த ஐம்பது வர்ணகங்களினின் றுண்டானதும், நானுவிதமான அர்த்தஸ்வரூபமானதும், பதமாகும் வியாகரணம், வாக்கியமாகும் பூர்வமீமாம்ஸை, பிரமாணமாகும் உத்தரமீமாம்ஸை இவற்றுல் ஏற்படும் தாத்பரியத்திற்குக் காரணமானதும், கர்மபலத்தைத்தெரிவிப்பதும் பிரஸித்தி பெற்றதும், எண்ணற்றதுமாகிய தாதுக்க (பகுதிக) ளால்

இந்த வுலகம் முழுமையும் வியாபிக்கப்பட்டுள்ளது. இந்த தாதுக்கள் யாவும் சைதன்னிய ஸ்வரூபமான உமது வடிவினவே யாகும். "அஹம், அஹம்," என்று ஸ்புரித்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கிக்கொண்டிருக்கின்றீர்.

(வி-ரை) इदं विश्वं=பிரத்தியக்ஷமாய்க் காணப்படும் இந்த பாஞ்ச பௌதிகப் பிரபஞ்சமும், சாஸ்திரங்களின் மூலமாய்க் கேழ்க்கப்படும் ஸ்வர்க்க நரகங்களும் மற்றுமுள்ள லோகாந்தரங்களும். இவை யாவும் சப்தமயமாகவும், அர்த்தமயமாகவும் விளங்குகின்றன. அர்த்தங்களாகும் ஸகலவஸ்துக்களும் சப்தத்தினின்றுண்டானவையே யாகும். வேத சாஸ்திர புராண இதிஹாஸ ஆகமாதிகள் யாவும் சப்தமயமே. இவை யாவும் பத, வாக்கிய, பிரமாண வடிவினவாகும். பதங்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களாலானவை. எழுத்துக்கள் ஐம்பது; அ காரம் முதல் க்ஷ காரம் வரை ள காரம் நீங்கலாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இந்த ஐம்பது அக்ஷரங்களும் பரதேவதையின் உண்மைநிலையான பரா ஸ்வரூபத்திலிருந்து உண்டானவையே யாகும்.

वन्दे तामहमक्षय्यां क्षकाराक्षररूपिणीम् ।
देवीं कुलकलोल्लासप्रोल्लसन्तीं परां शिवाम् ॥

என்னும் பிரமாணத்தின்படி பரதேவதையின் பரா ஸ்வரூபம் க்ஷ கார ஸ்வரூபமென்றேற்படுகின்றது. இந்த பராஸ்வரூபத்தினின்றுதான் "அஹம், அஹம்" என்னும் சைதன்ய ஸ்புரணமுண்டாகின்றது. இந்த பராஹந்தாஸ்புரணத்திலிருந்து அகாரம் முதல் ஹகாரம் வரையுள்ள நாற்பத்தொன்பது அக்ஷரங்களுமுண்டாயின. இவற்றினின்று பல அர்த்தங்களை யுடைய தாதுக்க (பகுதிக)

ளும்; பதங்களும் வாக்கியங்களும், பிரமாணங்களும் உண்டாயின.

இங்கே பிரமாணமென்பது ஒரு குறிப்பிட்ட தாத்பரியத்தை ஸித்தாந்தம் செய்யும் ஒரு பிரகரணமாகும். இது உபக்கிரமம் உபஸம்ஹாரம் முதலிய அறுவித லிங்கங்களோடு கூடியதாகும். இத்தகைய பிரகரணங்கள் பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தில் மிகப்பிரஸித்தமானவை.

வாக்கிய மென்பது ஐந்து அவயவங்களோடு கூடியது. பிரதிக்ஞை, ஹேது, உதாரணம், உபநயம், நிகமனம் இவை அவயவங்களாகும். இவை யாவும் சேர்ந்தது ஒரு வாக்கியமாகும். இது தர்க்கசாஸ்திரத்தில் மிகப்பிரஸித்தமானது.

பதம் என்பது பற்பல விதமான அர்த்தங்களைத்தரும் பல தாதுக்க (பகுதிக) ளால் ஏற்படுவதாகும். இவற்றைப் பற்றிய ஸகல விஷயங்களும் இலக்கணமாகும் வியாகரண சாஸ்திரத்தில் நன்கு விமர்சிக்கப்பட்டுள்ளது. சப்தமும் அர்த்தமும் பரஸ்பரம் தம்முள் வேற்றுமை யுடையன வல்ல. **अर्थाविनाभावितैः** என்னும் விசேஷணம் இந்த அர்த்தத்தைத் தெரிவிக்கின்றது.

साभिप्रायवदर्थकर्मफलदैः = சொல்லுவோனுடைய அபிப்பிராயத்திற்குத் தக்கவண்ணம் அர்த்தத்தையும், செய்கையையும், அதற்குறிய பலத்தை(பயனை)யும் அளிப்பது. "ஸைந்தவம் கோண்டுவா" என்னும் வாக்கியத்தில் சாப்பிடும்போது உப்பிலும், பிரயாணமாய்ச் செல்லும்போது குதிரையிலும் வக்தாவின் அபிப்பிராயம் இருத்தலால், பயனுகும் செயல் அபிப்பிராயத்திற்கு மாறுபடாமல் இருப்பது தகுதி. ஆதலின், உலக வியவஹாரங்கள் யாவும் சொல்லுவோனது தாத்பரியத்திற்கிணங்க அர்த்தம் செய்யப்

படும் சப்தப் பிரமாணஸ்வரூபமாய் விளங்குகின்றதென் பது நுட்பமாய் அறியத்தக்க விஷயமாகும். ஸகல, அதாவது, பத வாக்கிய பிரமாணஸ்வரூப சப்தப்பிரமாணங்களும், "அஹம், அஹம்" என்னும் சைதன்யரூப **अन्तः** (உள்) ஸ்புரணத்தையே காரணமாக வுடையனவாகும். இந்த பராஹந்தா ஸ்புரணமே விமர்ச சக்தியாகும் சித்சக்தியின் காமகலாஸ்வரூபமாம். இதைப்பற்றி அதிகமாய் அறிய விரும்புவோர், இவ்வாசிரியராலியற்றப்பட்ட காமகலா விலாஸம், ஆநந்தோல்லாஸ விரிவுரையில் கண்டு தெளிக. (30)

(அ-கை) ஸ்ரீ சக்கிரத்தின் ஸ்வரூபமும், அதிஷ்டான சக்திகளின் ஸ்வரூபமும் இந்த ஶ்லோகத்தில் வர்ணிக்கப் படுகின்றன.

श्रीचक्रं श्रुतिमूलकोश इति ते संसारचक्रात्मकं
विख्यातं तदधिष्ठिताक्षरशिवज्योतिर्मयं सर्वतः ।
एतन्मन्त्रमयात्मिकाभिररुणं श्रीसुन्दरीभिर्वृतं
मध्ये बैन्दवसिंहपीठललिते त्वं ब्रह्मविद्या शिवे ॥३१॥

(தா-ம்) பிரஹ்ம வித்யாஸ்வரூபிணியும் ஸ்ரீ லலிதாம்பிகை யென்னும் திருநாமமுடையவளுமான ஓ சிவையே! உம்முடைய ஸ்தானமும், சரீரமும், பூஜாசக்கிரமு மாகும் ஸ்ரீ சக்கிரமானது ஸகல வேதங்களின் மூலகாரணமான பிரணவஸ்வரூபத்திற்கு இருப்பிடமானதும், மிகப்பிரஸித்தமானதுமாகும்; மேலும் உன்னுடைய ஸ்ரீ சக்கிரமே ஸம்ஸார சக்கிரமாய் விளங்குகின்றது. உன்னுடைய சக்கிரம் உன்னுடைய மந்த்ரமாகும் ஸ்ரீமத்பஞ்சதசாக்ஷரியினின்று

முண்டானதென்பது சாஸ்திரப்பிரஸித்தமானது. ஸ்ரீ சக்கிரத்தின் மத்தியில் உள்ள மஹாபிந்துவாகும் ஸிம்ஹாஸனத்தில் நீ அதிஷ்டிதையாய் இருக்கின்றனே. திரிகோணம் முதல் நாற்சதுர பூபுரம் வரையில் உள்ள எல்லாச் சக்கிரங்களிலும் பீஜாக்ஷரமயமாய் விளங்கும் செந்நிறமான ஆவரண தேவதைகள் விளங்குகின்றனர்.

(வி—ரை) **श्रुतिमूलकोश:** = ஸ்ருதிகளின் மூல காரணமான பிரணவத்திற்கு இருப்பிடம். ஸ்ரீ சக்கிரத்தின் மத்தியத்திரிகோணம் பிரணவாத்மக மானது. திரிகோணத்தின் மூன்று கோணங்கள் அகார, உகார, மகாரங்களாம்; அர்த்தமாத்திரை பிந்து வடிவினதாகும்.

संसारचक्रात्मकं பிரபஞ்சமே ஸம்ஸார சக்கிரமாகும். சரீரமும் ஸம்ஸார சக்கிரமாம்; மனமே ஸம்ஸார சக்கிரமாமேன்பது மிகவும் ரஹஸ்யமானது. காலசக்கிர, தேச சக்கிரங்களின் வடிவமாய் ஸ்ரீ சக்கிரத்தைத் தந்த்ர ராஜம் கூறுகின்றது அறியத்தக்கது. ஸம்ஸார சக்கிரமாகும் பிரபஞ்சமோ, சரீரமோ அல்லது மனமோ பரதேவதையின் வித்தையாகிற ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரியின் ஒவ்வொரு வர்ணாத்மகமான பஞ்சதன்மாத்ராஸ்வரூபமாயுள்ளது சாஸ்திரப் பிரஸித்தமாகும். ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ வித்தையின் பதினைந்து வர்ணகங்களும் (5 சப்தம், 4 ஸ்பர்சம், 3 ரூபம், 2 ரஸம், 1 கந்தம் ஆக) பதினைந்து தன்மாத்ரா வடிவினவாகும். இத்தகைய ஸ்வரூபமுடைய பஞ்சதசீ வித்தையின் பீஜங்களிலிருந்துதான் ஸ்ரீ சக்கிரம் தோன்றி யிருக்கின்றது. அது வருமாறு:—

ல காரத்திலிருந்து பூபுரமும், ஸ காரத்திலிருந்து ஷோடச தள கமலமும், ஹ காரத்திலிருந்து அஷ்டதள கமலமும், ஈ காரத்திலிருந்து பதினான்குகோண சக்கிரமும்,

ஏ காரத்திலிருந்து பஹிர்த்தசாரமும், ரேப (ரகார) த்தி லிருந்து அந்தர்த்தசாரமும், க காரத்திலிருந்து அஷ்ட கோணமும், நாதத்திலிருந்து முக்கோணமும் தோன்றின. பிந்துவே மஹாபிந்துஸ்வரூபமாகும். ஆகவே பஞ்சதசீவித் தைக்கும் ஸ்ரீ சக்கிரத்திற்கும் அபேதமாம். இவ்விஷயம் வரிவஸ்யாரஹஸ்யம் இரண்டாவது அம்சம் 46, 47 ஶ்லோ கங்களில் கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது. ஆதலின் ஸ்ரீ சக்கிரமும் பாஞ்சபௌதிகமே யாகும். ஆகவே, அதுவும் காலதேச வஸ்து பரிச்சேதமுடையதாந் தன்மையால் ஸம் ஸார சக்கிரமென்று கூறப்பட்டது.

तदधिष्ठिताक्षरशिवज्योतिर्मयं = ஸ்ரீ சக்கிரத்தை யதிஷ்டித்து விளங்கும் மஹாப்பிரகாச ஸ்வரூப சிவத்தின் விமர்ஶ வடிவ ஜ்யோதியின் கிரணவடிவ, அகாராதி க்ஷகாராந்த மாத்ருகாஸ்வரூபராய் விளங்கும் ஆவரண தேவதைகளின் மயமாய் விளங்குவது.

सर्वतः एतन्मन्त्रमयात्मिकाभिररुणं = ஸ்ரீ சக்கிரம் முழுமையும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள மந்த்ராத்மக ஸூக்ஷ்ம சரீரத்தோடும், ஆத்மஸ்வரூப விமர்ஶத்தின் லிங்கமாகும் செந்நிறத்தோடுங் கூடியுள்ள,

श्रीसुन्दरीभिर्वृतं = சிவக்ஞான ஸாதனங்களை நன்கருளும் ஆவரண தேவதைகளால் சூழப்பட்டுள்ளது ஸ்ரீ சக்கிரம்.

मध्ये बैन्दवसिंहपीठे = ஸ்ரீ சக்கிரத்தின் மத்தியிலுள்ள பிந்து மயமான ஸிம்ஹாஸத்தின்கண்; பிந்து சக்கிரமே ஸிம்ஹாஸனம். இதற்குப் பஞ்சபிரேத மஹா ஸிம்ஹா ஸனமென்றும் வேறு பெயருண்டு. இதில் பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேஶ்வரன் என்னும் நால்வர் கால் களாகவும், ஸதாசிவம் பலகையாகவும் விளங்குகின்றனர்.

இதன்மேல் பிரஹ்மவித்யா ஸ்வரூபிணியாயும், ஸமஸ்த மான கல்யாணங்களையும் அருள்பவளாயும், துவம்பத லக்ஷ்யார்த்த கூடஸ்தஸ்வரூபிணியாயுமுள்ள ஸ்ரீ லலிதா மஹா த்ரிபுரஸுந்தரீ தேவியானவள் நிர்விசேஷப் பிரஹ்ம வடிவ, ஸ்ரீ காமேச்வரரின் வாமாங்கத்தின்மேல் வீற்றிருக்கின்றனள்.

ஆவரண தேவதைகளின் விமர்சமாவது :—

ஆவரணம்.	ஆகாரம்.	தேவதைகள்.
முதலாவது	பூபுரம்.	அணிமாதிகள், பிராஹ்மியாதிகள், முத்ராதேவதைகள்.
இரண்டாவது	ஷோடசதள கமலம்.	காமாகர்ஷிண்யாதிகள்.
மூன்றாவது	அஷ்டதள கமலம்.	அநங்க குஸுமாதிகள்.
நான்காவது	மன்வச்ரம்	ஸர்வஸங்க்ஷோபிண்யாதிகள்.
ஐந்தாவது	பஹிர்த்த சாரம்	ஸர்வ ஸித்திப் பிரதாதிகள்.
ஆறாவது	அந்தர்த்த சாரம்	ஸர்வக்ஞாதிகள்.
ஏழாவது	அஷ்டகோணம்	வசின்யாதிகள்.
எட்டாவது	திரிகோணம்	மஹாகாமேஸ்வர்யாதிகள்.
ஒன்பதாவது	பிந்து	மஹாத்ரிபுரஸுந்தரீ.

இவர்களுக்கெல்லாம் பீஜாக்ஷரங்களும் மந்த்ரங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இங்ஙனம், ஸ்ரீ சக்கிரத்தின் ஸ்வரூபமும் அதன் அதிஷ்டானமான ஸ்ரீ லலிதையின் ஸிம்ஹாஸனத்தின் விமர்சமும், ஆவரணதேவதைகளின் விளக்கமும் இதில் பிரதி பாதிக்கப்பட்டுள்ளது அறியத்தக்கது. (31)

(அ-கை) இங்ஙனம் ஸ்ரீ சக்கிரவித்தையை நன்குணர்ந்து ஸ்ரீ சக்ராராதனம் செய்துவந்த பின்னர், பூர்ணாபிஷேகத்தைப்பெற்ற உத்தமாதிகாரியாகும் ஸாதகன் பராபூஜையைச் செய்தல் அத்தியாவசியமாதலின் அதன்பொருட்டு இந்த ஶ்லோகத்தில் மஹாப்பிராஸாத மந்த்ரம் உத்தாரம் செய்யப்படுகின்றது.

बिन्दुप्राणविसर्गजीवसहितं बिन्दुत्रिबीजात्मकं
षट्कूटानि विपर्ययेण निगदेत्तारात्रिबालाक्षरैः ।
एभिः संपुटितं प्रजप्य विहरेत्प्रासादमन्त्रं परं
गुह्याद्गुह्यतमं सयोगजनितं सद्भोगमोक्षप्रदम् ॥ ३२ ॥

(தா-ம்) அநுஸ்வாரம், ஹகாரம், விஸர்க்கம், ஸகாரம் இவற்றின் சேர்க்கையால் ஏற்பட்டது हंसः என்பதாகும். இதை हंसः; सोहं; अं हंसः अः सोहं என்றபடி மூன்றுகப் பிரித்துக்கொண்டு அந்த மூன்றையும் நேராகவும் தலை கீழாகவும் சொல்ல ஆறு கூடங்களாகின்றன. இந்த ஆறு கூடங்களுக்கும் முதலில் த்ரிதாரியையும், பாலா பீஜங்களையும் சேர்க்கவேண்டும். இவற்ருேடு பிராஸாத பரை, பராப்பிராஸாதத்தையும் சேர்க்க மஹா பராப்பிராஸாத வித்தையாகின்றது. இதை அர்த்தாநுஸந்தானத்தோடு ஜபிக்கின், ஸாதகர்கள் போக மோக்ஷங்களை யடைந்து ஜீவன்முக்தர்களாய் விளங்குவார்கள்.

(வி-ரை) இதில் உத்தாரம் செய்யப்பட்டுள்ள மஹா பராப்பிராஸாதமாகும் மஹாவித்தை ரஹஸ்யங்களுக்கெல்லாம் பரமரஹஸ்யமானது. இதனால் ஐஹிகத்தில் புஷ்பம், சந்தனம், ஸ்திரீ ஸுகம், யானை, குதிரை, பல்லக்கு முதலிய சிரேஷ்ட வாஹனங்களின் அடைவு, சக்கிரவர்த்திகளாலும் பூஜிக்கப்படும் தன்மை முதலிய ஸகலத்தையும் அடைந்து மோக்ஷத்தையும் பெறலாமென்பது சாஸ்திரப் பிரஸித்தமானது.

இதன் உத்தாரமாவது:—

I. ओं, ऐं ह्रीं श्रीं, ऐं क्लीं सौः,—

हंसः सोहं, अं हंसः अः सोहं ह्सौः स्हौः —
(1) हंसः (2) सोहं (3) अं हंसः अः सोहं

सोहं अः हंसः अं, सोहं हंसः—
(3) सोहं अः हंसः अं (2) सोहं (1) हंसः

सौः क्लीं ऐं, श्रीं ह्रीं ऐं, ओं.

என்பனவாம். அல்லது,

II. ७ अं हंसः ह्सौः स्हौः.

III. ७ हंसः सोहं ह्रौं ह्सौः स्हौः.

இங்ஙனம் மூன்று விதமான உத்தாரங்கள் சாஸ்திரங்களில் காணப்படுகின்றன. (32)

(அ-கை) இனி இந்த சுலோகத்தில் பிந்துசக்கிரமாகும் ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்திருப்பவளும், ஸர்வாபரண பூஷிதையும், மஹாராஜோபசாரங்களால் ஆராதிக்கத்தக்கவளுமான ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரியை ஸ்ரீ துர்வாஸ மஹர்ஷி தியானம் செய்கின்றனர்.

आताम्रार्कसहस्रदीप्तिपरमा सौन्दर्यसारैरलं
लोकातीतमहोदयैरुपयुता सर्वोपमागोचरैः ।
नानानर्घ्यविभूषणैरगणितैर्जाज्वल्यमानाभित-
स्त्वं मातस्त्रिपुरारिसुन्दरि कुरु स्वान्ते निवासं मम ॥ ३३ ॥

(தா--ம்) ஜகன்மாதாவாகும் ஓ மஹாத்ரிபுரஸுந்தரீ தேவியே! லோகோத்தரமாயுள்ள ஸௌந்தரியத்தின் ஸாரமானவையும், லோகாதீத மஹிமையுடையவையும், ஸர்வ உபமானங்களாலும் கூறமுடியாதவையும், விலைமதிக்கக் கூடாதவையுமான பலவித திவ்விய பூஷணங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டவளும், பல்லாயிரம் பாலஸூர்யர்களின் சிவந்தகாந்தியைவிட அதிகப்பிரகாசமுடைய தன்மையால் தன்னைச்சுற்றிலும் பிரகாசித்துக்கொண்டு விளங்குபவளான உம்மை என் ஹ்ருதயத்தில் தியானம் செய்கின்றேன்; நீ என் ஹ்ருதயத்தில் வாஸம் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

(வி-ரை) இந்த ஶ்லோகத்தில் பரதேவதையைத் தியானம் செய்யும் வகை கூறப்பட்டுள்ளது. தியானம் செய்யும் வகைக்குத் தக்கபடி பலத்தின் பேதம் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது மிகப்பிரஸித்தமாம். இங்கே பரதேவதையை அருண நிறத்தோடு கூடிய சரீர காந்தியையும் பூஷணலங்காரங்களையும் உடையவளாய் வர்ணிக்கப்பட்டுள்ளது.

कुङ्कुमरागशोणे ; सकुङ्कुमविलेपनां ; अरुणमाल्यभूषाम्बरां ; जपाकुसुमभासुरां ; अरुणां करुणातरङ्गिताक्षीं ; सिन्दूरारुण-विग्रहां ; उद्यत्कोटिरविप्रख्यां ; सर्वारुणा ; जपापुष्पनिभाकृतिः ॥

என்பனவாதி பிரமாணங்களால், பரதேவதையைச் செந்நிறமாகவும், செந்நிற வஸ்திரமால்ய பூஷணங்களைப் பூண்டுள்ளவளாகவும் தியானித்தல் அவசியமென்றேற்படுகின்றது. தியானிக்கும் நிறத்தின் வேறுபாட்டிற்குத்தக்கபடி தியானத்தின் பயனும் வேறுபடுமென்பது சாஸ்திர ஸித்தாந்தமாகும்.

लौहित्यमेतस्य सर्वस्य विमर्शः என்னும் பாவனோபநிஷத்தின் வாக்கியப்படி, லௌஹித்ய மென்னும் செம்மை நிறத்தின் தத்துவம் சிவாபின்ன ஆத்மகோசர அகண்டாகார வ்ருத்தியே யாமென்றேற்படுகின்றது.

ஹ்ருதயமே அநாஹதமென்னும் ஸம்வித்சக்கிரமாகும்.

मम स्वान्ते निवासं कुरु "என்னுடைய ஹ்ருதயத்தில் நீக்கமின்றி நீ வஸிப்பாயாக" என்பது பிரார்த்தனை: இதனால் நிரந்தரம் இடைவிடாது விளங்கும் ஆத்மாகார அகண்ட வ்ருத்தி வடிவ நிதித்தியாஸம் ஏற்படவேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகின்றது அறியத்தக்கது.

त्रिपुरारिसुन्दरि திரிபுரங்களைச்சுட்ட பரமேஶ்வரனது ஆத்மஸ்வரூப விமர்சவடிவமாகும். புரம்=சரீரம். ஸ்தூல ஸூக்ஷ்மகாரண சரீரங்களே முப்புரங்களாகும். உபாதியாகும் சரீரங்கள் மாயா கார்யங்களாதலின் அவற்றையொழிக்க தத்துவ ஞானமே வேண்டும். தத்துவ ஞானஸ்வரூபிணியே பரதேவதையாகும் மஹா த்ரிபுரஸுந்தரியாம். (33)

(அ-கை) மஹாயோகீஶ்வரராகும் ஸ்ரீ தூர்வாஸ மஹர்ஷியானவர் முன் ஶ்லோகத்தில் அம்பாளை ஸமஷ்டியாய்த்தியானித்து, இது முதல், மேலானதாயுள்ள ஸௌபாக்கிய மென்னும் மோக்ஷத்தை யருளக்கூடியவளும்,

நானுவித வஸ்த்ர, பூஷண, புஷ்பாலங்காரங்களோடு விளங்குபவளுமான பரதேவதையின் திவ்விய அங்கங்களேயும், பூஷணங்களேயும, ஆயுதங்களேயும் தனித்தனியாய் வர்ணித்துத் துதிக்கத்தொடங்கி, இதில், அம்பாளின் சரணங்களைத் துதிக்கின்றனர்.

शिञ्जन्नूपुरपादकङ्कणमहामुद्रासुलाक्षारसा-
लंकाराङ्कितपादपङ्कजयुगं श्रीपादुकालंकृतम् ।
उद्भास्वन्नखचन्द्रखण्डरुचिरं राजज्जपासंनिभं
ब्रह्मादित्रिदशासुरार्चितमहं मूर्ध्नि स्मराम्यम्बिके ॥३४॥

(தா-ம்) ஹே அம்பிகையே! சலங்கைகள் சப்தித்துக் கொண்டுள்ள பாதஸரங்களாலும், காப்புகளாலும், செம்பஞ்சுக்குழம்பாலும், உபாஸகர்களால் இயற்றப்பட்ட மஹாமுத்திரையாலும் அலங்கரிக்கப்பட்டனவாயும், மணிமயமான பாதுகைகளின் மேல் விளங்குவனவாயும், சந்திர ரேகைகள் போல் பிரகாசிக்கும் நகங்களோடு பிரகாசிப்பனவாயும், அப்பொழுது தான் மலர்ந்த ஜபா (செம்பருத்திப்) புஷ்பத்தைப்போன்ற செந்நிறமுடையனவாயும், பிரஹ்மாதி மூர்த்திகளாலும், இந்திராதி தேவர்களாலும், அஸுரர்களாலும் ஆராதிக்கப் படுவனவாயுமுள்ள இரண்டு பாதாரவிந்தங்களை அடியேனது சிரஸில் தியானம் செய்கின்றேன்.

(வி-ரை) महामुद्राः—உபாஸகர்கள் தங்கள் சிரஸில் (பிரஹ்மரந்திரமாகும் ஸஹஸ்ராரத்தில்) பாதுகாமந்திரத்தை ம்ருகீமுத்திரை இயற்றித் தியானிப்பது ஸம்பிரதாயமாம். இந்த ம்ருகீமுத்திரையே இங்கே மஹா முத்

திரை யென்பதாகும். இதன்மேல் பரதேவதையின் சரணங்கள் விளங்குகின்றன. அம்பாளின் சரணங்களைத் தாங்குவன பாதுகைகளாகும். இவை சிந்தாமணி யென்னும் இரத்தினங்களால் இழைக்கப்பட்டு விளங்குகின்றன.

शाम्भवीचरणविन्यासा: பரதேவதையின் பாதாரவிந்தங்களைச் சிரஸில் பொருத்தித் தியானித்தல் சாம்பவீ யென்னும் சிவயோகமாகும். ஆதலின் சிவயோகம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது அறியத்தக்கது.

शिञ्जन्नूपुरपादकङ्कण பாதபங்கஜங்களில் விளங்கும் நூபுரத்தின் மணிச்சிலங்கைகள், காப்புகள் இவைகளின் சப்தம்.

चिरादन्तःशल्यं दहनकृतमुन्मूलितवता
तुलाकोटिक्काणैः किलिकिलितमीशानरिपुणा ॥

" முது பழம்பகை கருதிவேள்
இறையை வென்றனன் விழியை வென்றனன்
எனமு ழங்கிய குரலெனுது
அறை சிலம் பெழும் அரவ மென்ப "

(இ-ள்) " அம்பாளின் பாத நூபுரச்சிலங்கைகளின் சப்தமானது, மன்மதன் தன்னைப் பரமசிவன் நீறுக்கியதால் ஏற்பட்ட வெகு காலத்திய பகைமையை யொழித்து அவ்விறையை வென்று ஜய கோஷம் செய்வது போலிருக்கின்றதெ"ன்று ஸ்ரீ சங்கரபகவத்பாதாள் ஸ்ரீ சௌந்தர்யலஹரியில் 86-வது ஸ்லோகத்தில் திருவாய் மலர்ந்தருளியுள்ளது ஈண்டறிதற்பாலது.

उद्भास्वन्नखचन्द्रखण्डरुचिरं :—நகங்கள் சந்திரனைப்போல் விளங்குகின்றன வென்பதைப் பரமாசார்யாள் ஸௌந்தர்ய லஹரியில்—

नखैर्नाकस्त्रीणां करकमलसंकोचशशिभिः
तरूणां दिव्यानां हसत इव ते चण्डि चरणौ ॥

" முற்றுபொற்பர மாதர் கைத்தல
முண்டகங்குவி வெண்ணிலா
நற்றிறத் தொடுநாடி நாடிந
கைக்க வாளுகி றென்பரே."

(இ-ள்) இந்த்ராணி முதலிய தேவலோக ஸ்திரீகள் அம்பாளின் சரணங்களை நமஸ்கரிக்கும்போது அவர்களுடைய கைகளாகிற தாமரை மலர்களைக் குவியச்செய்வதில் ஸாமர்த்தியமுள்ள சந்திரனைப்போன்ற வெண்மையான நகங்களால் பரிகாஸம் செய்வது போன்றிருக்கின்றதென்று கூறுகின்றனர். (34)

(அ-கை) இதில் நன்கு அலங்கரிக்கப்பட்டதும், பூஜிக்கப்பட்டதுமான பரதேவதையின் நிதம்பம் வர்ணிக்கப்படுகின்றது.

आरक्तच्छविनातिमार्दवयुजा निश्वासहार्येण य-
त्कौशेयेन विचित्ररत्नघटितैर्मुक्ताफलैरुज्ज्वलैः ।
कूजत्काञ्चनकिङ्किणीभिरभितः संनद्धकाञ्चीगुणै-
रादीप्तं सुनितम्बबिम्बमरुणं ते पूजयाम्यम्बिके ॥३५॥

(தா-ம்) ஓ அம்பிகே! நானுவித ரத்தினங்கள் இழைக்கப்பெற்று நல்ல முத்துக்களால் பிரகாசிக்கப்பட்டதும், சப்திக்கின்ற தங்கச் சலங்கைகளால் சூழப்பட்டதுமான ஒட்டியாணத்தோடும், அரைஞாணேடும் பிரகாசிப்பதும், மிருதுவானதும், அருண நிறத்தோடு கூடியதும், மூச்சுக்

காற்றினுலுங்கூட அலையக்கூடிய அவ்வளவு மெல்லிய பட்டுவஸ்திரத்தினுல் அலங்கரிக்கப்பட்டதும் ஆன உமது அழகிய நிதம்ப மண்டலத்தைத் தியானம் செய்கின்றேன்.

(வி-ரை) நிதம்பம்=இடுப்பின் பின்புறம். பரதேவதை செந்நிறப் பட்டுச்சேலையைத் தரித்திருக்கின்றனள். அது மூச்சுக்காற்றினுலும் அலையக்கூடிய அவ்வளவு மெல்லியதாய் இருக்கின்றது. நிதம்பத்தின் மேற்பாகத்தில் ஒட்டியாணம் விளங்குகின்றது. அதில் தங்கச்சிலங்கைகளும் மதயானைகளின் மத்தகத்தினின்றுதிரும் நல்ல முத்துக்களும் விளங்குகின்றன. அது பற்பல விதமான மணிகளால் இழைக்கப்பட்டிருக்கின்றது. அந்த மேகலையைச் சுற்றி அரைஞாணும் பிரகாசிக்கின்றது. என்பது திரண்ட பொருளாகும். (35)

(அ-கை) இதில் அம்பாளின் குசமண்டலம் ஸ்துதிக்கப்படுகின்றது.

कस्तूरीघनसारकुङ्कुमरजोगन्धोत्कटैश्चन्दनै-
रालिप्तं मणिमालयातिरुचिरं ग्रैवेयहारादिभिः ।
दीप्तं दिव्यविभूषणैर्जननि ते ज्योतिर्विभास्वत्कुच-
व्याजस्वर्णघटद्वयं हरिहरब्रह्मादिपीतं भजे ॥ ३६ ॥

(தா-ம்) ஓ ஜனனீ! கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, இவற்றின் பொடியின் வாஸனையால் மேன்மையுற்றதாய் விளங்கும் சந்தனப்பூச்சை யுடையதும், நவரத்தின மாலைகளால் மிகவும் பிரகாசிப்பதும், கண்டாபரணங்களால் திகழ்வதும், விலைமதிக்கப்படாத திவ்விய பூஷணங்களால் ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிப்பதும், பிரஹ்மா,

விஷ்ணு, ருத்திரர்களால் பானம் செய்யத்தக்க இனிய அம்ருதம் நிறைந்ததுமான உமது ஸ்தனயுகளமென்னும் இரண்டு பொற்கலசங்களை அடியேன் மனத்தில் பாவிக்கின்றேன். (36)

(அ-கை) இந்த ஸ்லோகத்தில் மெல்லிய கொடிகளைப் போன்ற அம்பாளின் நான்கு கைகளும், சங்கை யொத்த கண்டமும் தியானிக்கப்படுகின்றன.

मुक्तारत्नसुवर्णकान्तिकलितैस्ते बाहुवल्लीरहं
केयूरोत्तमबाहुदण्डवलयैर्हस्ताङ्गुलीभूषणैः ।
संपृक्ताः कलयामि हीरमणिमन्मुक्ताफलाकीलित-
ग्रीवापट्टविभूषणेन सुभगे कण्ठं च कम्बुश्रियम् ॥३७॥

(தா-ம்) ஓ தேவியே! முத்து, வைரம் முதலிய இரத்தினக்காந்திகளாலும், ஸ்வர்ணம் முதலியவற்றின் பிரகாசத்தாலும் மனோஹரமாய் விளங்கும் கேயூரம், அங்கதம், கங்கணம் முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட நான்கு கைகளோடும், மோதிரங்களால் சோபிக்கும் விரல்களோடும் கூடிய உமது நான்கு புஜங்களையும், வைரமுத்துக்களும் நல்லமுத்துக்களும் கலந்து கோக்கப்பட்டுள்ள கண்டாபரணத்தோடிலங்கும் சங்கினை யொத்த கண்டத்தையும் நான் மனத்தில் தியானிக்கின்றேன்.

(வி-ரை) கேயூரம் = மணிக்கட்டில் அணியும்படியான ஒருவித ஆபரணம்.

அங்கதம் = தோளுக்குக் கீழும் முழங்கைக்கு மேலும் அணியும் ஆபரணம். (37)

(அ-கை) ஸ்ரீ துர்வாஸ முனிவர் இந்த ஸ்லோகத்தில் அம்பாளின் இரண்டு காதுகளையும், நாஸிகையையும் வர்ணித்துத் துதிக்கின்றனர்.

तप्तस्वर्णकृतोरुकुण्डलयुगं माणिक्यमुक्तोल्लस-
द्वीराबद्धमनन्यतुल्यमपरं हैमं च चक्रद्वयम् ।
शुक्राकारनिकारदक्षमपरं मुक्ताफलं सुन्दरं
बिभ्रत्कर्णयुगं नमामि ललितं नासाग्रभागं शिवे ॥३८॥

(தா-ம்) ஸகலமான மங்களங்களையும் அருளும் ஓ சிவையே! பத்தரை மாற்றுள்ள தங்கத்தாற் செய்யப்பட்ட இரண்டு பெரிய குண்டலங்களையும், மாணிக்கத்தாலும்முத்துக்களாலும் வஜ்ஜிரங்களாலும் இழைக்கப்பட்ட ஸ்வர்ண மயமான சக்கிராகாரமான இரண்டு தாடங்கங்களையும் தரித்துள்ள உமது இரண்டு கர்ணங் (காது) களையும், சுக்கிரனுடைய வெள்ளிய பிரகாசத்தையும் தோர்க்கச்செய்யும் அவ்வளவு பிரகாசமுள்ளதும், மனோஹரமானதுமாகிய உயர்ந்த நல்ல முத்தாலாக்கப்பட்ட நாஸாபரணத்தை (மூக்குத்தியை) யுடைய உமது நாஸிகையின் நுனிப் பாகத்தையும் நான் தியானம் செய்கின்றேன்.

(வி-ரை) கர்ணபூஷணங்கள் இரண்டு. அவை குண்டலங்களும் தாடங்கங்களுமாம். குண்டலம்=தோடு. தாடங்கம்=வட்டமாயும் காதுகளின் மேற்பாகத்திலணியத்தக்கதாயு முள்ள வட்டமான ஆபரணம். (38)

(அ-கை) இதில் அம்பாளுடைய ஸுப்பிரஸன்னமுக மண்டலம் ஸ்துதிக்கப்படுகின்றது.

उद्यत्पूर्णकलानिधिश्रि वदनं भक्तप्रसन्नं सदा
संफुल्लाम्बुजपत्रचित्रसुषुमाधिक्कारदक्षेक्षणम् ।
सानन्दं कृतमन्दहासमसकृत्प्रादुर्भवत्कौतुकं
कुन्दाकारसुदन्तपङ्क्तिशशिभापूर्णं स्मराम्यम्बिके ॥३९॥

(தா-ம்) ஹே அம்பிகே! ஷோடச கலைகளோடும் உதிக்கும் பூர்ண சந்திரனைப்போல் பிரகாசிக்கின்றதும், பக்தர்களிடத்தில் ஸதா பிரஸன்ன வடிவ மலர்ச்சியோடு கூடியதும், நன்கு மலர்ந்த தாமரை இதழின் சோபையை திக்காரம் செய்வதில் ஸாமர்த்தியமுள்ளதும், கருணை நோக்கம் ததும்பும்படியானதுமான நேத்திரங்களோடு விளங்குவதும், அடிக்கடி ஆநந்தத்தைக் குறிப்பிடும் மந்தஹாஸத்தோடு கூடியதும், குந்த புஷ்பங்களைப் போன்ற நல்ல பல் வரிசையோடு கூடியதுமான உமது முகமண்டலத்தைத் தியானம் செய்கின்றேன்.

(வி-ரை) இதில் அம்பாளின் முகமண்டலத்தின் சோபை, பிரஸன்னத்துவம், கருணை நோக்கத்தோடு கூடிய நேத்திரங்கள், அகமுக மலர்ச்சியை (மனக்களிப்பை)ப் பிரகடம் செய்யும் மந்தஹாஸத்தோ (குறுநகையோ)டு கூடிய தந்த பங்க்தி (பல் வரிசை) என்னும் இவைகள் வர்ணிக்கப்பட்டுள்ளன. (39)

(அ-கை) இதில், ஸ்ரீ துர்வாஸ முனிவர் பரதேவதையின் நெற்றியையும், இரண்டு அதரங்(உதடு)களையும், சரீரத்தையும் ஸ்தோத்திரம் செய்கின்றார்.

शृङ्गारादिरसालयं त्रिभुवनीमाल्यैरतुल्यैर्युतं
सर्वाङ्गीणसदङ्गरागसुरभिश्रीमद्वपुर्धूपितम् ।
ताम्बूलारुणपल्लवाधरयुतं रम्यं त्रिपुण्ड्रं दध-
द्भालं नन्दनचन्दनेन जननि ध्यायामि ते मङ्गलम् ॥४०॥

(தா-ம்) ஹே ஜகன்மாதாவே! சிருங்காரம் முதலிய நவரஸங்களுக்கும் வாஸஸ்தானமாயும், மூன்று லோகங்களிலுமுள்ள நிகரற்ற புஷ்பமாலைகளோடு கூடி விளங்குவதும், சந்தனக்கலவைப் பூச்சினால் எல்லா அங்கங்களிலும் வியாபித்துள்ள வாஸனையோடு கூடியதும், தாம்பூலத்தினால் சிவந்த இரண்டு அதர பல்லவங்களையுடையதும், அழகாயும் மனோஹரமாயுமுள்ள திரிபுண்ட்ரம் (விபூதி ரேகைகள்) சந்தன திலகம் இவற்றோடு விளங்கும் நெற்றியோடு கூடியதுமான உமது மங்கள சரீரமாகும் ஸ்தூலரூபத்தைத் தியானம் செய்கின்றேன்.

(வி—ரை) **त्रिभुवनानि** ஸ்வர்க்கம், மர்த்தியம், பாதாளமென்பனவாகும். இம்மூன்று லோகங்களிலும் உண்டாகும் புஷ்பங்களால் மாலைகளைத் தொடுத்துத் தேவ, மனுஷ்ய, அஸுரர்களால் பூஜிக்கப்பட்ட விஷயம் இதனால் தொனிக்கின்றது.

இதனால் பரதேவதையின் ஸ்தூல சரீரமும், **शृङ्गारादिरसालयं** என்பதனாலும் **सर्वाङ्गीण सदङ्गरागसुरभिश्रीमद्वपुः** என்பதனாலும், முறையே, மனோமய பிராணமயகோசங்களின் வடிவ ஸூக்ஷ்ம சரீரமும் குறிப்பிடப்படுவது அறியத்தக்கது.

नवविद्रुमबिम्बश्रीन्यक्कारिदशनच्छदा என்னும் ஸஹஸ்ரநாமப் பிரமாணம் பரதேவதையின் அதரங்களின் அருண நிறத்தை வலிவுறுத்துகின்றது. (40)

(அ-கை) இந்த ஶ்லோகத்தில் ஸ்ரீ துர்வாஸ மஹர்ஷி பரதேவதையின் கூந்தலை வர்ணிக்கின்றனர்.

जातीचम्पककुन्दकेसरमहागन्धोद्गिरत्केतकी-
नीपाशोकशिरीषमुख्यकुसुमैः प्रोत्तंसिता धूपिता ।
आनीलाञ्जनतुल्यमत्तमधुपश्रेणीव वेणी तव
श्रीमातः श्रयतां मदीयहृदयाम्भोजं सरोजालये ॥ ४१ ॥

(தா-ம்) ஸஹஸ்ரதள கமலத்தை யிருப்பிடமாக வுடைய ஓ ஸ்ரீ மாதாவே! ஜாதீ, சம்பகம், முல்லை, வாசனை மிகுந்த மகரந்தப்பொடியோடு கூடிய தாழை, கடம்பு, அசோகம், வாகை முதலிய சிறந்த புஷ்பங்களாலலங்கரிக் கப்பட்டதும், (அகரு, தசாங்கம் முதலியவற்றின்) தூபத் தால் வாஸனை கட்டப்பட்டதும், அதிக கறுப்பான மை போன்ற மதங்கொண்ட வண்டுகளின் வரிசையைப்போல் இலங்கும் உமது பின்னிய கூந்தலானது எனது ஹ்ருதய கமலத்தில் நன்கு விளங்கிக் கொண்டிருக்கட்டும். (41)

(அ-கை) இதில் பரதேவதையின் சிரஸ் ஸ்துதிக்கப் படுகின்றது.

लेखालभ्यविचित्ररत्नघटितं हैमं किरीटोत्तमं
मुक्ताकाञ्चनकिङ्किणीगणमहाहीरप्रबद्धोज्ज्वलम् ।
चञ्चच्चन्द्रकलाकलापमहितं देवद्रुपुष्पार्चितै-
र्माल्यैरम्ब विलम्बितं सशिखरं बिभ्रच्छिरस्ते भजे ॥ ४२ ॥

(தா-ம்) ஹே அம்பிகையே! மிகவும் நெருக்கமாகப் பதிக்கப்பட்ட நவரத்தினங்களோடு கூடியதும், நல்லமுத்

துக்கள், தங்கச் சலங்கைகள், நீரோட்டம் பெற்ற சிறந்த வைரங்கள் இவற்றால் சுற்றிலும் கட்டப்பட்டு விளங்குவதும், பிரகாசிக்கின்ற சந்திரகலே யென்னும் பூஷணத்தால் விளங்குவதும், மந்தாரம், பாரிஜாதம் முதலிய தேவ குஸுமங்களால் தொடுக்கப்பட்ட புஷ்ப மாலைகள் சுற்றிலும் தொங்கவிடப்பட்டதும், சிகரத்தோடுகூடியதுமான ஸ்வர்ண கிரீடத்தையுடைய உமது சிரஸ்ஸைத்தியானம் செய்கிறேன். (42)

(அ-கை) இந்த ச்லோகத்தில் பராதேவதையின் சத்திரம் சாமரம் முதலிய பிருதுகள் வர்ணிக்கப்படுகின்றன.

उत्क्षिप्तोच्चसुवर्णदण्डकलितं पूर्णेन्दुबिम्बाकृति
च्छत्रं मौक्तिकचित्ररत्नखचितं क्षौमांशुकोत्तंसितम् ।
मुक्ताजालविलम्बितं सकलशं नानाप्रसूनार्चितं
चन्द्रोद्दामरचामराणि दधते श्रीदेवि ते स्वस्त्रियः ॥ ४३ ॥

(தா-ம்) ஸ்ரீ தேவியே! உயரத்தூக்கப்பட்டதும், நீளமானதுமான தங்கக் காம்போடு கூடியதும், பூர்ண சந்திர பிம்பத்தைப்போல் ஆக்ருதியையுடையதும், நல்லமுத்துக்களும் நானுவித ரத்தினங்களும் பதிக்கப்பட்டு அவற்றால் பிரகாசிக்கின்றதும், வெண்பட்டால் ஆக்கப்பட்டதும், நல்ல முத்துச்சரங்கள் சுற்றிலும் தொங்கவிடப்பட்டதும், மேல் பாகத்தில் கலசத்துடன் கூடினதும், நாநாவித புஷ்பங்களால் அர்ச்சிக்கப்பட்டதுமான குடையையும், சந்திரிகையைப்போன்று வெண்மையாய் விளங்கும் சாமரங்களையும், ஸ்ரீ நகரத்து உமது தோழிகள் உமக்குப்பிடிக்கின்றனர்.

(அ-கை) இந்த ச்லோகத்தில் பரதேவதை ஆவரண தேவதைகளோடு ஸ்ரீ சக்கிரேச்வரியாய்த் துதிக்கப்படு கின்றனள்.

विद्यामन्त्ररहस्यविन्मुनिगणैः क्लृप्तोपचारार्चनां
वेदादिस्तुतिगीयमानचरितां वेदान्ततत्त्वात्मिकाम् ।
सर्वास्ताः खलु तुर्यतामुपगतास्त्वद्रश्मिदेव्यः परा-
स्त्वां नित्यं समुपासते स्वविभवैः श्रीचक्रनाथे शिवे ॥४४॥

(தா-ம்) ஸ்ரீ சக்கிரத்திற்கு நாயிகையாய் விளங்கும் ஓ சிவையே! ஸ்ரீ வித்தையின் ரஹஸ்யங்களை நன்கறிந்த உபாஸக ஸங்கங்களால் சாஸ்திரோக்தமாய்ச் செய்யப்பட்ட ஆராதனைகளோடும், உபசாரங்களோடும் கூடினவளும், வேதங்கள், புராணங்கள், தந்த்ரங்கள், வேதாந்தம் முதலியவற்ருல் புகழப்பட்ட மஹிமையுடையவளும், வேதாந்தத்தின் பரமதத்துவமாயிருப்பவளும், ஸ்ரீ சக்கிரத்திற்கு அதிஷ்டாத்ரியாயிருப்பவளுமாகிய உம்மை, உமது கிரணங்களாய் விளங்கும் சிறந்த ஆவரண தேவதைகளெல்லாம் துரீயபாவத்தோடு உம்மை ஸ்வகீய விபவங்களோடு ஸதா உபாஸிக்கின்றனர்.

(வி-ரை) ஸ்ரீ சக்கிரமானது பிந்து, திரிகோணம், அஷ்டகோணம், அந்தர்த்தசாரம், பஹிர்த்தசாரம் மந்வச்ரம், (த்ரிவலயங்கள்) அஷ்டதளம், ஷோடசதளம், பூபுரத்திரயம் என்பவற்ருேடு விளங்குவதாகும். இந்த சக்கிரத்தில் பிந்துஸ்தானத்தில் பரப்பிரஹ்மஸ்வரூபிணியாகும் பரதேவதை அதிஷ்டித்து விளங்குகின்றனள். இந்த பரதேவதையின் ஸ்வரூபத்தைத் தெரிவிக்கும் மந்த்ரத்திற்கு ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ வித்தையென்று பெயர்.

இந்த வித்தையை ஸத்குரு மூலமாய்ப் பெற்று அதன் ரஹஸ்யார்த்தத்தைத் தெரிந்து கொண்ட பின்னரே ஸ்ரீ சக்கிரத்தைப் பூஜித்தல் வேண்டும்.

திரிகோணம் முதல் பூபுரம் வரையில், பரதேவதையின் சரணாரவிந்தப் பிரகாசத்தின் கிரணங்களெனச் சாஸ்திரங்கள் கூறும் ஆவரண தேவதைகள் விளங்கிக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு சக்கிரத்திலும், அதாவது பூபுரம், ஷோடசதள அஷ்டதள கமலங்கள், மந்வஸ்ரம் (14 கோணங்கள்), பஹிர்த்தசாரம், அந்தர்த்தசாரம், அஷ்டகோணம், திரிகோணம் என்னும் ஒன்பது சக்கிரங்களிலும் விளங்கும் கிரணவடிவ ஆவரண தேவதைகளைப் பூஜித்து, அக்கிரணங்களுக்கு மூலபூதமான மஹாப்பிரகாச விமர்ஶ ஸாமரஸ்ய துரீய தத்துவமான பரதேவதையை அபேத பாவனையோடு அர்ச்சித்தல் வேண்டுமென்பது பரமரஹஸ்யமாகும். இந்த ரஹஸ்யத்தையறிந்தவர்களே உபாஸக சிரேஷ்டர்கள். இவர்கள் ஸதாகாலமும் இடைவிடாது பக்தி சிரத்தைகளோடு அம்பாளை ஆந்தர (மானஸிக)மாகவோ, பாஹ்யமாகவோ பூஜோபசாரங்களைச் செய்து உபாஸித்து வருவார்கள். அம்பாளுக்குச் செய்யும் உபசாரங்கள் அறுபத்திநான்கெனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவற்றுள் பஞ்சோபசாரங்கள் சிறந்தவையாகும்.

समुपासते स्वविभवैः=ஸ்வஸ்வரூபமாகும் ஆத்ம ப்ரஹ்மைக்கியாநுஸந்தான அகண்டாகாரவ்ருத்தியால் உபாஸிப்பதே மேலான உபாஸனையாகுமென்பது ரஹஸ்யமாகும். (44)

(அ-கை) ஸ்ரீ பரதேவதோபாஸ்தியின் மஹிமை கூறப்படுகின்றது.

एवं यः स्मरति प्रबुद्धसुमतिः श्रीमत्स्वरूपं परं
वृद्धोऽप्याशु युवा भवत्यनुपमः स्त्रीणामनङ्गायते ।
सोऽष्टैश्वर्यतिरस्कृताखिलसुरश्रीजृम्भणैकालयः
पृथ्वीपालकिरीटकोटिवलभीपुष्पार्चिताङ्घ्रिर्भवेत् ॥ ४५ ॥

(தா—ம்) இங்ஙனம் முற்கூறியபடி ஞானமயமான பரதேவதையின் ஸ்வரூபத்தை, உபாஸனா பலத்தால் துரீயாவஸ்தையில் விழிப்படைந்த அகண்ட ஞானத்தோடு கூடிய எந்த சிறந்த உபாஸகன் தியானம் செய்கின்றானோ அவன், வார்த்தக்கிய அவஸ்தையோடு அதாவது முதுமைப் பருவத்தோடு கூடியவனாயிருந்தாலும் சீக்கிரத்தில் யௌவனாவஸ்தையோடு விளங்குபவனாகின்றனன். யௌவனத்தினால் ஏற்படும் ஒப்பற்ற சோபை அவனிடம் விளங்குகின்றது. அதனால் அவன் யௌவனத்தினால் கர்வமடைந்த யுவதிகளுக்கு அதிஸௌந்தரியமுள்ள மன்மதஸ்வரூபமாகக் காணப்படுகின்றனன்; அன்றியும் ஸ்ரீ தேவியின் அநுக்கிரஹத்தால் ஏற்பட்ட அஷ்டைஸ்வரியங்களால் ஸகல தேவர்களையும் வென்று, மகிமை பொருந்திய ஸ்ரீயின் அபிவ்ருத்திக்கு ஒரு வாஸஸ்தானமாகவும் விளங்குவான்; அரசர்களின் கிரீடங்களின் அக்ரபாகத்தில் அலங்கரிக்கப்பட்ட புஷ்பங்களால் பூஜிக்கப்படும் பாதங்களையுடையவனாகவும் ஆகிவிடுகின்றான். என்றால், அரசர்கள் அவனை வணங்குகின்றனர் என்பது பொருள்.

(வி-ரை) பரதேவதையின் உபாஸ்தியால், மண்ணுலகும் விண்ணுலகும் உபாஸகனுக்கு ஸ்வாதீன மாகின்றன. இதனால் தர்மம், அர்த்தம், காமம் என்னும் திரிவர்க்கங்களின் அடைவும், அபவர்க்கமாகும் மோக்ஷத்தின் அடை

வும் ஸித்திக்கின்றனவென்று ஏற்பட்டது. அம்பாளை நன்கு உபாஸிப்பவர்களுக்கு போக மோக்ஷங்கள் இரண்டும் கரஸ்தமாயிருக்கின்றன வென்பது,

यत्रास्ति भोगो न च तत्र मोक्षो यत्रास्ति मोक्षो न च तत्र भोगः ।
श्रीसुन्दरीसाधकपुंगवानां भोगश्च मोक्षश्च करस्थ एव ॥

என்னும் பிரமாணத்தால் ஸித்திப்பது அறியத்தக்கது (45)

(அ-கை) ஸ்ரீமத் பரதேவதையின் ஆயுதங்களில் ஒன்றான கோதண்டத்தின் தியானமானது இந்த ச்லோகத்தில் ஸ்துதிக்கப்படுகின்றது.

अथ तव धनुः पुण्ड्रेक्षुत्वात्प्रसिद्धमतिद्युति
त्रिभुवनवधूमुद्यज्ज्योत्स्नाकलानिधिमण्डलम् ।
सकलजननि स्मारं स्मारं गतः स्मरतां नर-
स्त्रिभुवनवधूमोहाम्भोधेः प्रपूर्णविधुर्भवेत् ॥ ४६ ॥

(தா-ம்) ஸகல புவனங்களுக்கும் தாயே! மூவ்வுலகங்களிலுமுள்ள ஸ்திரீகளின் விரஹத்தின் உத்பாதகமாகும் மிக்க பிரகாசத்தையுடைய காந்தியோடு கூடிய சந்திரமண்டலம் போன்றதும், நாமக்கரும்பினால் அமைக்கப்பட்டதுமான உமது கையில் விளங்கும் கோதண்டத்தை (வில்லை) இடைவிடாமல் தியானம் செய்த காரணத்தால் மன்மதனாகவே விளங்கும் உபாஸகன், மூவ்வுலகத்தின் யுவதிகளின் மோகக் கடலுக்குப் பூர்ண சந்திரனாகவும் விளங்குகின்றனன்; என்றால் சந்திரனைக் கண்ட கடல் அலைகளின் பெருக்கால் கொந்தளிப்பது போல், பரதேவதையின் ஆயுதமான

கரும்பு வில்லைத் தியானம் செய்து பேரழகைப் பெற்று விளங்கும் உபாஸகனைக் கண்டமாத்திரதில் மூவ்வுலகங் களிலுமுள்ள யௌவனஸ்திரீகள் மோஹமடைகின்றனர்.

(வி-ரை) மூவ்வுலகம்—தெய்வ லோகம், மநுஷ்ய லோகம், நாகலோகம்.

मन इक्षुधनुः இக்ஷு கோதண்டமே மனமாம். அதன் தியானமாவது மனத்தின் இயல்பை நன்கு ஆலோசிப்பதாகும். இவ்வித ஆலோசனையாகும் விசாரத்தினால் மனத்தின் உண்மையானஸ்வரூபம் வெளிப்பட்டு அது வசப்படுகின்றது. மனம் வசப்பட்டால் அதனால் கற்பிக்கப்பட்ட ஸகலவுலகங்களும் அவற்றால் ஏற்படும் போகங்களும் துச்சமாய்ப் புலப்படுங் காரணத்தால் அவையாவும் ஸ்வாதீன மனத்தனுக்கு அடங்கி தாஸபாவ மெய்துகின்றன. (46)

(அ-கை) இந்த ஶ்லோகத்தில் புஷ்பபாணங்களின் தியானத்தின் பயன் வர்ணிக்கப்படுகின்றது.

प्रसूनशरपञ्चकप्रकटजृम्भणागुम्भितं
त्रिलोकमवलोकयत्यमलचेतसाऽचञ्चलम् ।
अशेषतरुणीजनस्मरविजृम्भणे यः सदा
पटुर्भवति ते शिवे त्रिजगदङ्गनाक्षोभणे ॥ ४७ ॥

(தா-ம்) ஹே சிவே! எந்த உபாஸகன் சுத்தமான அந்தக்கரணத்தால் மூன்று உலகங்களையும் உமது பஞ்ச புஷ்பாணங்களின் வியக்தமான விகாஸங்களால் நிறைந்தாய்த் திடமாய்ப் பார்க்கின்றானோ, அந்த உபாஸக துரந்தரன் எல்லா யுவதிகளின் காமத்தை விருத்தி செய்வதில்

மாத்திரமேயன்றி முவ்வுலகமாகிய நாயகியின் மனத்தைக் கலக்கிக் கவறுவதில் எப்பொழுதும் ஸாமர்த்திய முடையவனுகின்றனன்.

(வி-ரை) पञ्चतन्मात्रसायका = தன்மாத்திரைகளே பஞ்ச புஷ்பாணங்களாகும். தன்மாத்திரைகளே பஞ்ச பூதங்களின் அதிஸூக்ஷ்மரூபமாம். இவற்றின் விரிவே ஸர்வப் பிரபஞ்சமாகும். இவ்விஷயம்தான்

प्रसूनशरपञ्चकप्रकटजृम्भणागुम्फितं त्रिलोकम् ।

என்பதில் கூறப்பட்டுள்ளதாகும். ஸர்வப்பிரபஞ்சமும் பாஞ்சபௌதிகமேயென்று திடமாய் அறிந்தவனுக்கு ஸர்வலோகங்களும் வஶ்யமாகும். ஈண்டு உலகத்தை ஒரு ஸ்திரீயாக உருவகப்படுத்திருப்பது அறியத்தக்கது.

பஞ்சபுஷ்பங்களாவன:—

कमलं कैरवं रक्तकल्हारेन्दीवरे तथा ।
सहकारमिति प्रोक्तं पुष्पपञ्चकमीश्वरि ॥

என்று தந்த்ர ராஜமும்,

अरविन्दमशोकं च चूतं च नवमल्लिका ।
इन्दीवरं च पञ्चैते पञ्चबाणस्य सायकाः ॥

என்று நிகண்டுவும் கூறுகின்றன. தாமரை, அல்லி, செங்கழுநீர், கருங்குவளை, மா வென்றும் தாமரை, அசோகம், மா, மல்லிகை, கருங்குவளை யென்றும் மேற்கூறிய பிரமாணங்களால் ஏற்படுகின்றன. (47)

(அ-கை) பரதேவதையின் ஆயுதங்களிலொன்றுன பாசத்தைச் சிந்திப்பதனுலேற்படும் பயன் இதில் கூறப்படுகின்றது.

पाशं प्रपूरितमहासुमतिप्रकाशो
यो वा तव त्रिपुरसुन्दरि सुन्दरीणाम् ।
आकर्षणेऽखिलवशीकरणे प्रवीणं
चित्ते दधाति स जगत्त्रयवश्यकृत्स्यात् ॥ ४८ ॥

(தா-ம்) ஓ திரிபுரசுந்தரீ தேவியே! எந்த உபாஸகன் தனது உபாஸனுபலத்தினுல் மிகுந்த புத்தி விகாஸத்தை யடைந்தவனுகி ஸகல ஸுந்தரயுவதிகளை ஆகர்ஷிப்பதிலும், எல்லோரையும் வசமாக்குவதிலும் ஸாமர்த்தியமுள்ள உமது பாசாயுதத்தை மனத்தில் தியானம் செய்கின்றனனே, அந்த உபாஸக துரந்தரன் மூவ்வுலகங்களேயும் தன்வசமாக்கும் திறமையுடையவனுவான்.

(வி-ரை) பரதேவதையின் ஆயுதங்களிலொன்ருன பாசத்தின் தத்துவாநுஸந்தானத்தின் பிரயோஜனம் இந்த ஶ்லோகத்தில் கூறப்பட்டுள்ளது அறியத்தக்கது. ஸர்வலோகவச்யமே பயனுகும். ஸகலத்தையும் தன் ஸ்வரூபத்தில் ஆகர்ஷித்துக் கொள்ளுதலே "வஶ்ய" பதத்தின் பொருளாகுமென்பது சாஸ்திரப் பிரஸித்தமாகும்.

அவித்யாபாசமானது ஆத்மஸ்வரூபத்தில் கற்பிதமாய்க் காணப்படுவனவற்ருல் ஜீவனைப் பாஹ்யமாய் இழுத்து அஞ்ஞான வசமாக்குகின்றது; வித்தியா பாசமோ வெனின், பின்ன பின்னமாய்த் தோன்றுவனவற்றைப் பாஹ்யத்தினின்றும் அந்தர்முகப்படுத்தி ஆத்மஸ்வரூப அவசேஷமாக்குகின்றது. பரதேவதையின் கையில் விளங்குவது வித்தியாபாசமேயாகும். (48)

(அ-கை) இதில் பரதேவதையின் அங்குசத் தியானத்தின் மகிமை வர்ணிக்கப்படுகின்றது.

यः स्वान्ते कलयति कोविदस्त्रिलोकी-
स्तम्भारम्भणचणमत्युदारवीर्यम् ।
मातस्ते विजयनिजाङ्कुशं स योषा
देवान्स्तम्भयति च भूभुजोऽन्यसैन्यम् ॥ ४९ ॥

(தா-ம்) ஓ மாதாவே! எந்த உபாஸகன் மூன்று லோகங்களையும் ஸ்தம்பிக்கச் செய்வதில் மிக்க ஸாமர்த்தியமுடையதும், மிக்க பராக்கிரமமான விஜயத்தைத் தருவதுமான உமது ஆயுதமாகும் அங்குசத்தை மனதில் நன்கு தியானம் செய்கின்றானோ, அந்த பண்டிதன் தேவலோகத்து ஸ்திரீகளையும் தேவர்களையும் ஸ்தம்பிக்கும்படி செய்வதோடு, ராஜாக்களையும் சத்ருஸைன்யங்களையுங்கூட ஸ்தம்பிக்கச் செய்கின்றனன்.

(வி-ரை) அங்குசத் தியானத்தின் பயன் ஸர்வஸ்தம்பனமாமென்பது இதன் திரண்டபொருளாகும். (49)

(அ-கை) இதில் வில், அம்பு, பாசம், அங்குசம் என்னும் பரதேவதையின் நான்கு ஆயுதங்களின் தியானத்தின் விசேஷ பலம் நிரூபிக்கப்படுகின்றது.

चापध्यानवशाद्भवोद्भवमहामोहं महाजृम्भणं
प्रख्यातं प्रसवेषुचिन्तनवशात्तच्छरव्यं सुधीः ।
पाशध्यानवशात्समस्तजगतां मृत्योर्वशत्वं महा-
दुर्गस्तम्भमहाङ्कुशस्य मननान्मायाममेयां तरेत् ॥ ५० ॥

(தா-ம்) ஹே பரதேவதே! சுத்த ஸத்துவப்பிரதான அந்தக்கரணத்தையுடைய உமது உபாஸகன் உமது கோ

தண்டத்தைத் தியானம் செய்வதனால் ஜனன மரணமா கின்ற ஸம்ஸாரத்தை மிகவும் விருத்தி செய்யும் (கற்ப னையால் தோன்றும்) மஹா மோஹத்தையும் பஞ்ச புஷ்ப பாணங்களின் சிந்தனையால் அந்த அந்த பாணத்திற்கு லக்ஷ்யமான (பூத) தன் மாத்திரைகளையும், பாசாயுதத்தைத் தியானம் செய்வதனால் எல்லாப்பிராணிகளுக்கும் ஸாதா ரணமாய் ஏற்படக் கூடிய மிருத்யுவுக்கு வசமாகுந் தன்மை யையும், பெரிய பெரிய இடையூறுகளை யெல்லாம் போக் கும் மஹத்தாகிய அங்குசத்தின் மனனத்தினால் அமேய மான மஹா மாயையையும் தாண்டி விடுகின்றனன்.

(வி-ரை) பரதேவதையின் ஆயுதங்களின் தத்துவ விசாரத்தினால் அநர்த்த நிவர்த்தி கூறப்பட்டுள்ளது கூர்ந்து உணரத்தக்கது. ஜீவர்களுக்கு ஏற்பட்ட அநர்த்த மானது நான்கு வகையாயுள்ளது; அவை மஹா மாயையா கும் மூலாஜ்ஞானம்; அதனால் எற்பட்ட மோஹம்; அதனால் ஏற்பட்ட அநித்திய சப்தாதி விஷயங்களில் நித்தியஸுக அத்தியாஸம், அதனால் ஏற்படும் மரணமும் மறுபடி பிறத் தலும் என்பனவாம். இவையாவும் பரதேவதையின் ஆயு தங்களின் பாரமார்த்திக தத்துவத்தை யுணர்தலால் நாச மாகின்றன; அநர்த்தங்கள் ஒழிந்ததக்ஷணமே நித்தியா நந்த வடிவ மோக்ஷம் ஸ்வயம் பிரகாசமாய் விளங்குமென் பது சாஸ்திர ஸித்தாந்தமாம். (50)

(அ-கை) அநர்த்த நிவர்த்திக்குப் பரமஸாதனமாகும் சரீராத்தியாஸ நிவர்த்தியைச் செய்யும் பரதேவதாதாதாத் மியவடிவ நியாஸங்கள் இந்த ஶ்லோகத்தில் ஸ்துதிக்கப் படுகின்றன.

न्यासं कृत्वा गणेशग्रहभगणमहायोगिनीराशिपीठैः
षड्भिः श्रीमातृकार्णैः सहितबहुकलैरष्टवाग्देवताभिः ।
सश्रीकण्ठादियुग्मैर्विमलनिजतनौ केशवाद्यैश्च तत्त्वैः
षट्त्रिंशद्भिश्च तत्त्वैर्भगवति भवतीं यः स्मरेत्स त्वमेव॥५१॥

(தா-ம்) ஹே பகவதீ! எந்த உபாஸகன் கணேச, கிரஹ, நக்ஷத்திர, யோகினீ, ராசி, பீடங்களென்னும் ஆறு நியாஸங்களையும், பாஹ்யம் ஆந்தர மென்னும் இரண்டு மாத்ருகாநியாஸங்களையும், மாத்ருகைகளோடு கூடிய வாக்தேவதாநியாஸ கலா நியாஸங்களையும், ஸ்ரீகண்டாதி நியாஸம், கேசவாதி நியாஸம், பூமியாதி தத்துவ நியாஸம், முதலியவற்றைச் செய்து கொண்டு உனது ஸ்வரூபத்தைத் தனக்கபேதமாய்த்தியானம் செய்கின்றனனோ அவன் நீயாகவே யாகின்றனன். அதாவது, உனது ஸாயுஜ்ய பதவியாகிய மோக்ஷத்தை யடைகின்றனன்.

(வி-ரை) நியாஸம் என்னும் பதத்திற்கு விடுதல் அல்லது பொருத்துதல் என்று அர்த்தமாகின்றது. மயக்கவுணர்வை விட்டு மெய்யுணர்வைப் பெறுதலே நியாஸமாகும். பரதேவதா பூஜாபத்ததிகளில் பலவித நியாஸங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவையும் சிறந்தவையுமான நியாஸங்கள் இந்த ஶ்லோகத்தில் கூறப்பட்டுள்ளன. கணேசாதி ஆறு நியாஸங்களுக்கு ஷோடாநியாஸ மென்று பெயர். பஹிர்மாத்ருகை அந்தர் மாத்ருகை யென்னும் இரண்டு நியாஸங்கள் மிகப்பிரஸித்தமானவை. அக்கினி மண்டலம், ஸூர்ய மண்டலம், சந்திர மண்டலம் ஆகிய மும்மண்டலங்களின் கலைகள்

முப்பெத்தெட்டு. இம்முப்பத்தெட்டு கலைகளோடு ஐம்பது மாத்ருகைகளைக் சேர்த்துச் செய்யும் நியாஸத்திற்குக் கலாநியாஸ மென்று பெயர்.

இவற்றேடு பிரிதிவியாதி சிவாந்தமான முப்பத்தாறு தத்துவங்களையும், கூறப்பட்டுள்ளஸ்தானங்களில், நியஸிப்பது தத்துவநியாஸ மெனப்படும்.

निजविमलतनौ என்று கூறப்பட்டுள்ள காரணத்தால் பாபமற்ற தன்னுடைய சாம்பவ சரீரத்தில் என்றேற்படுகின்றது. இதனுல் பாபபுருஷ தாஹாதி பாவனுக்கிரியைகளை யுடைய பூத சுத்தி, ஆத்மப்பிராணப் பிரதிஷ்டைகளைச் செய்து விமலமாக்கிக் கொண்ட சரீரத்தில் நியாஸாதிகள் செய்தல் வேண்டுமென்பது விதிக்கின்றது.

நியாஸங்களின் விரிவானக்கிரமம் பூஜா பத்ததி நூல்களில் கண்டு தெளியவும். (51)

(அ-கை) இந்த ஶ்லோகத்தில் ஸ்ரீ துர்வாஸ முநீந்திரர் ஸ்ரீ வித்யோபாஸனையால் உபாஸகர்களுக்கு ஐஹிகத்தில் ஏற்படக் கூடிய பலன்களை வர்ணிக்கின்றனர்.

सुरपतिपुरलक्ष्मीजृम्भणातीतलक्ष्मीः
प्रभवति निजगेहे यस्य दैवं त्वमार्ये ।
तव विविधकलानां पात्रभूतस्य तस्य
त्रिभुवनविदिता सा जृम्भते कीर्तिरच्छा ॥ ५२ ॥

(தா-ம்) யாவராலும் பூஜிக்கப்படத்தக்க ஆர்யே! எந்த உபாஸகனுக்கு உபாஸ்யதைவமாய் நீ இருக்கின்றனேயோ அவனுடைய கிருஹத்தில் ஸ்வர்க்க லோகத்தின் ஐஸ்வரி

யத்தை யவமதிக்கத்தக்க அசஞ்சல மஹாதைஸ்வரியத்தை யருளக்கூடிய மஹாலக்ஷ்மியானவள் வாஸம் செய்வாள்; அன்றியும், உனது ஸ்வரூபமாகிய பற்பல கலைகளுக்கும் வாஸயோக்கியஸ்தானமாகிய அந்த உபாஸகனுக்கு லோகத்திரயங்களிலும் உன்னுடைய உபாஸனை பலத்தால் பிரஸித்தமும் நிர்மலமுமான கீர்த்தியானது நன்கு விளங்குகின்றது.

(வி-ரை) பரதேவதையின் உபாஸ்தியால் புக்தியும் முக்தியும் ஏற்படுகின்றனவென்பது சாஸ்திரப் பிரஸித்தமாதலின், இங்கே புக்தி வடிவ ஐஹிகபலன் கூறப்பட்டது. தேவராஜனாகிய இந்திரனது ஐஸ்வரியம் எல்லா ஐஸ்வரியங்களிலும் மேன்மையானதென்பது சாஸ்த்திரப் பிரஸித்தமாம். அவனது செல்வங்கூட ஒரு காலத்தில் தேய்ந்தொழிவதாகப் புராணாதிகளில் கேட்கப்படுகின்றது. ஆதலின், இந்திரலோகத்திய ஐஸ்வரியம் நிலையானதன்று என்று ஏற்படுகின்றது. ஸ்ரீ வித்யோபாஸகனது ஐஸ்வரியமோ இந்திர லோகத்தின் செல்வத்தினும் சிறந்ததாகும்; நாசமின்றி அசஞ்சலமாயிருத்தலின். ஐஹிக சுகத்திற்குச் செல்வமொன்றே போதாது; செல்வத்தோடு கல்வியும் வேண்டும். பரதேவதையின் ஸாரஸ்வத ஸ்வரூபமே ஸகலகலைகளாகும். ஆதலின் ஸகலவித்தைகளும், அதிமதுரகவித்துவ வல்லமையும் தானாகவே அவனிடத்தில் உண்டாகின்றன. அதனால் அந்த உபாஸகனது நிர்த்தோஷமான கீர்த்தியானது மூன்று லோகங்களிலும் பரவி விளங்குகின்றது. (52)

(அ-கை) இந்த ஸ்லோகத்தில் மானஸிக பூஜை வர்ணிக்கப்படுகின்றது.

मातस्त्वं भूर्भुवःस्वर्महरसि नृतपःसत्यलोकैश्च सूर्ये-
न्द्वारज्ञाचार्यशुक्रार्किभिरपि निगमब्रह्मभिः प्रोतशक्तिः ।
प्राणायामादियत्नैः कलयसि सकलं मानसं ध्यानयोगं
येषां तेषां सपर्या भवति सुरकृता ब्रह्मते ज्ञानते च ॥५३॥

(தா-ம்) ஹே ஜனனீ! நீ भूः, भुवः, सुवः என்னும் வியாஹ்ருதிகளாகவும், பூலோக புவர்லோகாதி ஸப்த லோகங்களாகவும் விளங்குகின்றனை; அன்றியும் ஸூர்யன் முதலிய ஸப்த கிரஹங்களாகவும் விளங்கி அவற்றிற்கும், பிரஹ்மாதி தேவர்களுக்கும், ருகாதி சதுர் வேதங்களுக்கும் அந்தர்யாமியாகவும் இருக்கின்றனை. பிராணயாமம் முதலிய யோகாங்க ஸாதனங்களால் எந்த உபாஸகர்களுடைய மனதைச் சம்பூர்ண நிதித்தியாஸத்தில் நிலைக்கும்படி நீ அநுக்கிரஹிக்கின்றனையோ அந்த உபாஸகர்கள், நிதித்தியாஸத்தின் முதிர்ச்சியினால் ஸமாதிஸித்தியை யடைந்து பிரஹ்மவித்தியாஸ்வரூபமாகவும் அதனால் பிரஹ்மமாகவும் விளங்குகின்றனர்.

(வி-ரை) இதில் பரதேவதையின் ஸர்வ வியாபகத்துவம் விமர்சிக்கப்பட்டுள்ளது. ஸப்த வியாஹ்ருதிகள், ஸப்த லோகங்கள், சூரியனாதி கிரஹங்கள், பிரஹ்மாதி தேவதைகள், ஶ்ருதி, ஸ்ம்ருதி, புராணாதிகள் யாவும் சித்சக்தியின் வடிவமேயாமென்னும் விஷயம் இதில் பிரதிபாதிக்கப்பட்டுள்ள விஷயமாகும். இந்த சித்சக்தி ஆத்மாபின்ன பிரஹ்மஸ்வரூபமாகும். இதையறிந்து அதுவாய் விளங்குதற்குச் சாதனங்கள் பிராணயாமாதி யோகாங்கங்கள், மானஸிக பூஜை, அகண்டாகாரவிருத்தி வடிவ பராபூஜை முதலியனவாகும். இத்தகைய அந்தர்யாகத்தைப்

பற்றி அதிகம் அறிய விரும்புவோர்கள் சென்னை ஸ்ரீகுஹா நந்த பிரஹ்மவித்யா விமர்சினீ மண்டலியில் பிரசுரிக்கப்பட்டுள்ள "ஸ்ரீ வித்யா ஸபர்யா வாஸனை" யென்னும் நூலைப்பார்க்கவும். (53)

(அ-கை) இதில் துர்வாஸமுனிவர் பரதேவதையின் மஹிமையை ஸ்தோத்திரம் செய்தல் தன்னால் இயலாத காரியமென்று தனது தாழ்மையையும் விநயத்தையும் தெரிவிக்கின்றனர்.

क्व मे बुद्धिर्वाचा परमविदुषो मन्दसरणिः
क्व ते मातर्ब्रह्मप्रमुखविदुषामाप्तवचसाम् ।
अभून्मे विस्फूर्तिः परतरमहिम्नस्तव नुतिः
प्रसिद्धं क्षन्तव्यं बहुलतरचापल्यमिह मे ॥ ५४ ॥

(தா-ம்) ஓ மாதாவே! பரத்தையறியாத என்னுடைய ஜடபுத்தி யெங்கே? அதிமந்தமான வாக்குகள் எங்கே? பிரஹ்மா முதலிய தேவர்களின் அறிவோடு கூடிய வாக்குகளுக்கும் எட்டாத உன்னுடைய மஹிமை பொருந்திய ஸ்துதி யெங்கே? அப்படியிருந்தும், எதனாலேயோ என் மனதில் ஸ்தோத்திரம் செய்யவேண்டு மென்று ஸ்புரித்தது; மிகவும் சிரேஷ்டமும் பிரஸித்தமுமான உனது மஹிம்நஸ்தோத்திரத்தை யான் செய்வதாகத் துணிந்தது எனது சாபல்யத்தைத் தெரிவிக்கின்றது. செய்யமுடியாத காரியத்தைச் சபல சித்தத்தோடு தொடங்கின என்னைக் குழந்தையாக நினைத்து மன்னிக்க வேண்டுகின்றேன்.

(வி-ரை) ஆத்மஸ்வரூபமே பரதேவதா ரூபமாதலின் பரதேவதையின் மஹிமை மனோ வாக்குகளுக்கு எட்டாத

தாகும். **परं अविदुषः** என்று தன்னைக் கூறியதனால்நைச்சியாநுஸந்தானம் தொனிக்கின்றது.

மஹிமை=பெருமை; நிரபேக்ஷிகமான மஹிமை ஆத்மாபின்ன சித்சக்திக்கே யுள்ளது. **अणोरणीयान् महतो महीयान्** என்பது ஆத்மலக்ஷணமாகும்.

சாபல்யம்: தன்னால் ஆகாத காரியம் என்று நன்றாய் அறிந்திருந்தும் அக்காரியத்தில் பிரவ்ருத்தித்தலுக்கு சாபல்யமென்று பெயர், (54)

(அ-கை) ஸாதகர்கள் பரதேவதையைப் பிரார்த்திக்கும் முறை (பிரகாரம்) கூறப்படுகின்றது.

प्रसीद परदेवते मम हृदि प्रभूतं भयं
विदारय दरिद्रतां दलय देहि सर्वज्ञताम् ।
निधेहि करुणानिधे चरणपद्मयुग्मं स्वकं
निवारय जरामृती त्रिपुरसुन्दरि श्रीशिवे ॥ ५५ ॥

(தா-ம்) ஹே பரப்பிரஹ்மமஹிஷியான ஸ்ரீ திரிபுரஸுந்தரி தேவியே! என்னை அநுக்கிரஹிக்க வேண்டும். என் மனதில் மஹத்தாகிய பயம் தோன்றுகின்றது. அதை நிவர்த்தி செய்வாயாக; தாரித்திரியத்தை ஒழிப்பாயாக; ஸர்வக்ஞத்துவத்தை யருள்வாயாக. ஹே கருணா ஸமுத்திரமே!! உனது இரண்டு சரணகமலங்களையும் எனது தியானத்துக்கு விஷயமாகச் செய்வாயாக; இவற்றோடு எனது ஜராமரணங்களையும் ஒழிப்பாயாக.

(வி-ரை) ஆத்மஞானத்தையடைய முயலும் ஒவ்வொரு முமுக்ஷுவும் 'அநர்த்த நிவர்த்தியிலும் ஆநந்தப்

பிராப்தியிலும் பிரவர்த்தித்தல் வேண்டும். ஜராமரணங்கள் கூறப்பட்டமையின், உபலக்ஷணமாய் ஜனனமும் கொள்ளத்தக்கதா யிருக்கின்றது. ஜனனமரணங்களே மஹத்தாகிய பயமாகும். ஒருவனுக்குப் பயமிருக்குமேயாயின் அவனிடத்தில் உண்மை அறிவு விளங்காது. பொய்யுணர்வுக்குக் கிஞ்சிக்ஞத்துவமென்று பெயர். இந்த கிஞ்சிக்ஞத்துவத்திற்குத்தான் தாரித்திரிய மென்று பெயர். இந்த எழ்மைத்தனத்தை நிவர்த்தித்துக்கொள்ள ஸர்வக்ஞத்துவம் வேண்டும். இது தான் மெய்யுணர்வு அல்லது தத்துவ ஞானமாகும். இது எற்பட்டால், பரதேவதையின் சரணகமலத் தியானம் சித்திக்கும். இது தான் நிதித்தியாஸனமும் ஸமாதியாகுமென்பது மிகவும் ரஹஸ்யமாம். ஆதலின் ஒவ்வொரு உபாஸகனும் பரதேவதையை அவசியமாய்ப் பிரார்த்தித்துக்கொள்ள வேண்டிய அம்சங்கள் இதன் மூலமாய் அறிந்து, அங்ஙனம் ஒழுக வேண்டுமென்பது மஹர்ஷியினது கருத்தாகுமென்பது அறியத் தக்கது. (55)

(அ-கை) இந்த ஸ்தோத்திரத்தின் பாராயணத்தினுல் எற்படும் பயன் இதில் பிரதிபாதிக்கப்படுகின்றது.

इति त्रिपुरसुन्दरीस्तुतिमिमां पठेद्यः सुधीः
स सर्वदुरिताटवीपटलचण्डदावानलः ।
भवेन्मनसि वाञ्छितप्रथितसिद्धिवृद्धिर्भवे-
दनेकविधसंपदां पदमनन्यतुल्यो भवेत् ॥ ५६ ॥

(தா-ம்) எந்த வித்தியோபாஸகன் பரதேவதா தியானத்தோடும், சிரத்தையோடும், இதுவரையில் கூறப்பட்

டுள்ள ஸ்ரீ திரிபுரஸுந்தரீ மஹிம்நஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்கின்றனனோ, அவன், ஸகலமான பாபங்களாகிற அடர்ந்த காட்டிற்கு அதியுக்கிரமான காட்டுத் தீப்போல் ஆகின்றனன். அவன் மனத்தில் நினைத்த வாஞ்சைகளெல்லாம் யாதொரு தடையுமின்றி நிறைவேறுகின்றன; அவன் அநேக விதமான ஐஶ்வர்யங்களுக்கு இருப்பிடமாகின்றனன்; அவனுக்கு ஒப்பும் உயர்வும் இவ்வுலகத்திலும் எவ்வுலகத்திலுமில்லை.

(வி-ரை) இந்த சக்திமஹிம்நஸ்தோத்திர பாராயணத்தின் பயன் ஜீவன்முக்தியே யாகும். ஸகல துரிதங்களாகும் அநர்த்தங்களின் நிவர்த்தியும், ஸர்வ காமங்களின் ஆப்தியும் ஜீவன்முக்தனுக்கே உரியனவாமென்பது ஸகல வேதாந்தங்களின் ஸித்தாந்தமாகும். அபயஸ்வரூபமே ஸம்பத்தாகும். (56)

(அ-கை) இந்த மஹிம்நஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்பவர்களுக்கு ஏற்படும் ஐஹிக பலன்கள் இதில் கூறப்படுகின்றன.

पृथ्वीपालप्रकटमुकुटस्त्रग्रजोराजिताङ्घ्रि-
विंद्वत्पुञ्जानतिनुतिसमाराधितो बाधितारिः ।
विद्याः सर्वाः कलयति हृदा व्याकरोति प्रवाचा
लोकाश्चर्यैर्नवनवपदैरिन्दुबिम्बप्रकाशैः ॥ ५७ ॥

(தா-ம்) இந்த ஸ்தோத்திரத்தைச் சிரத்தையோடு பாராயணம் செய்யும் உபாஸகன் அரசர்களின் மகுடங்களில் அலங்கரிக்கப்பட்ட புஷ்பமாலைகளின் மகரந்தங்கள் படிந்த பாதங்களுடையவனாகவும், வித்வான்களின் ஸமூஹத்தின் ஸ்தோத்திர நமஸ்காரங்களால் ஆராதிக்கப்பட்

டவனாகவும், சத்துருக்களின் பயம் நீங்கப் பெற்றவனாகவும் விளங்குவான்; அன்றியும், ஸகலவித வித்தைகளும் அவன் மனதில் ஸ்புரித்து உலகத்தார் ஆச்சரியப்படும்படியான புதிய புதிய சிறந்த பதங்களால் ஆய கவிதாப்பிரவாஹம் அவன் முகத்திலிருந்து பிரவஹிக்கும். அக்கவிதைகள் சந்திரிகையைப் போல் யாவருக்கும் ஸந்தோஷந்தரத்தக் கனவாயும் இருக்கும். (57)

(அ-கை) இந்த ஸ்லோகத்திலும் மஹிம்நஸ்தோத்திர பாராயணத்தின் பலனே கூறப்படுகின்றது.

संगीतं गिरिजे कवित्वसरणिं चाम्नायवाक्यस्मृतेः
व्याख्यानं हृदि तावकीनचरणद्वन्द्वं च सर्वज्ञताम् ।
श्रद्धां कर्मणि कालिकेऽतिविपुलश्रीजृम्भणं मन्दिरे
सौन्दर्यं वपुषि प्रकाशमतुलं प्राप्नोति विद्वान्कविः ॥५८॥

(தா-ம்) ஹே கிரிஜே! இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் செய்யும் உபாஸகனுக்கு உனது அநுக்கிரஹத்தால் ஸங்கீத சாஸ்திரத்தில் பாண்டித்தியமும், கவித்துவ சக்தியும், வேதங்கள் தர்ம சாஸ்திரங்கள் முதலியவற்றிற்கு வியாக்கியானம் செய்யும் மேதையும், உனது சரணங்களில் பிறழாத பக்தியும், ஸர்வக்ஞத்துவமும், காலாகாலங்களில் செய்யவேண்டிய நித்திய நைமித்திக கர்மாக்களில் சிரத்தையும், தனது கிருஹத்தில் ஸ்ரீ லக்ஷ்மியின் விலாஸமும், தனது சரீரத்தில் ஸௌந்தர்யமும் தேஜஸ்ஸும் ஏற்பட்டு மஹாசிரேஷ்டமான ஆத்ம ஞானியாகவும் அவன் ஆய் விடுகின்றனன். (58)

(அ-கை) இதில் ஸ்ரீவித்தியோபாஸகனது மஹிமை கூறப்படுகின்றது.

भूष्यं वैदुष्यमुद्यद्दिनकरकिरणाकारमाकारतेजः
सुव्यक्तं भक्तिमार्गं निगमनिगदितं दुर्गमं योगमार्गम् ।
आयुष्यं ब्रह्मपोष्यं हरगिरिविशदां कीर्तिमभ्येत्य भूमौ
देहान्ते ब्रह्मपारं परशिवचरणाकारमभ्येति विद्वान् ॥५९॥

(தா-ம்) வித்துவானெனத்தகும் ஸ்ரீவித்தியோபாஸகன் யாவராலும் போற்றத்தகுந்த பாண்டித்தியத்தையும், ஸூர்யனைப்போல் பிரகாசிக்கும் தேஹகாந்தியையும், வேதங்களிற் பிரதிபாதிக்கப்பட்டுள்ள வியக்தமான பக்திமார்க்கத்தையும், கூடமும் ரஹஸ்யமுமான யோக மார்க்கத்தையும், சதுர்முகப் பிரஹ்மாவுக்குத் துல்யமான ஆயுளையும், கைலாஸ பர்வதத்தைப்போற் பிரகாசிக்கும் கீர்த்தியையும் இவ்வுலகில் அடைந்து அநுபவித்து சரீரத்தியாகத்தின் முடிவில் பரதேவதையின் சரணகமல ஸ்வரூபமான பரப்பிரஹ்ம ஸ்வரூப நிர்வாணத்தையடைகின்றனன். (59)

(அ-கை) இந்த மஹிம்நஸ்தோத்திரத்திற்குக் கர்த்தா தாமேயென்று ஸ்ரீ துர்வாஸ மஹர்ஷி இந்த ஶ்லோகத்தில் கூறிக் கொள்ளுகின்றனர்.

दुर्वाससा महितदिव्यमुनीश्वरेण
विद्याकलायुवतिमन्मथमूर्तिनैतत् ।
स्तोत्रं व्यधायि रुचिरं त्रिपुराम्बिकाया
वेदागमैकपटलीविदितैकमूर्तेः ॥ ६० ॥

(தா-ம்) வேத வேதாந்த நிகமாகமஸார லக்ஷ்யார்த்த மாய் விளங்கும் ஸ்ரீமஹாத் திரிபுர ஸுந்தரீ பரா பட்டாரி கையின் மஹிமையை விளக்குவதும், அம்பாளுக்கு மிகவும் பிரீதிகரமானதுமான இந்த ஸ்தோத்திரமானது, ஆத்ம ஞானிகளாய் விளங்கும் பரமயோகிகளுக்குத் தலைமையான வரும், வித்தியாரூபமாயும் கலாஸ்வரூபமாயுமுள்ள யுவதி களுக்கு மன்மதஸ்வரூபராய்த் தோற்றுபவரும் ஆன ஸ்ரீ துர்வாஸ மஹர்ஷியால் நன்கு இயற்றப்பட்டது.

(வி-ரை) கிரந்த கர்த்தா தன்னைத்தானே பிரசம்ஸித் துக் கொள்ளுதல் சாஸ்திரீயமானதேயாகும்; தற்புகழ்ச் சியில் சேராது. ஸகலமான வித்தைகளையும், அத்தியாத்ம ஞான சாஸ்திரங்களையும் ஸ்திரீகளுக்கு ஒப்பிடப்பட்டு அந்த ஸ்திரீகளுக்குத் தன்னை மன்மதனுகக் கூறிக்கொண் டிருப்பதனுல், ஸகல சாஸ்திரங்களும் தாமே தன்னை வந்து அடைந்தனவென்று கூறுவது தொனிக்கின்றது.

वेदागमैकपटलीविदिता एका मूर्तिः त्रिपुराम्बिका வேதாகமமா கும் சாப்தப்பிரமாணமொன்றினுல் மாத்திரம் அறியக் கூடி யது ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகதபேத ரஹித அத்விதீய ஸ்வரூபமாகும் திரிபுர ஸுந்தரி. சப்தப் பிரமாணமும் வாச்சியார்த்தத்தினுல் அல்லாமல் லக்ஷ்யார்த்தத்தினுல் மாத்திரமே பிரஹ்மாபின்ன சித்சக்தியாகும் திரிபுர ஸுந்தரீ ஸ்வரூபத்தை யுணர்த்துகின்றது. இத்தகைய பரதேவதையின் ஸ்வரூபத்தை இந்த ஸ்தோத்திரம் நன்கு பிரதிபாதிப்பதால் இது வேதாகம துல்யமேயாகும். ஸதா ஜீவப்பிரஹ்மைக்கியாநுஸந்தானம் செய்யும் ராஜ யோகி களுக்கெல்லாம் முதன்மையாய் விளங்குவதால் மஹர்ஷி துர்வாஸரது வாக்குகள் ஸத்தியமானதே யாகும். (60)

(அ-கை) இதில் இந்த ஸ்தோத்திர கர்த்தாவாகும் ஸ்ரீ துர்வாஸ முனிவர் பரமேஶ்வர ஸ்வரூபராக ஸ்துதிக்கப்படுகின்றனர்.

सदसदनुग्रहनिग्रहगृहीतमुनिविग्रहो भगवान् ।
सर्वासामुपनिषदां दुर्वासा जयति देशिकः प्रथमः ॥६१॥

इति श्रीदुर्वाससा मुनीन्द्रेण विरचितं

शक्तिमहिम्नःस्तोत्रं संपूर्णम् ॥

(தா-ம்) ஸர்வோபநிஷத்துக்களின் ஸாரபூதமான அத்வைத தாத்பரியத்தை மஹா வாக்கியங்களின் மூலமாய் உபதேசித்த ஆதி குருவாய் விளங்கும் பகவான் பரமேஶ்வரன் ஸத் ஜனங்களை யநுக்கிரஹிக்கவும், அஸத்துக்களை சிக்ஷிக்கவும் ஸ்ரீ குரோதபட்டாரகரென்னும் துர்வாஸ முனியின் ரூபத்தை ஸ்வீகரித்துக்கொண்டு அவதரித்தனர். அத்தகைய பகவான் கைலாஸபதி ஸர்வோத்கிருஷ்டமாய் விளங்குகின்றனர்.

இது கிரந்தாந்த மங்களம். ஸ்ரீ துர்வாஸர் பரசிவாவதாரம்; ஆதலின் அபரசிவம். இது புராணப் பிரஸித்தமான விஷயம். குருபரம்பரையில் பரமேஶ்வரனே ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியாகவும் ஸ்ரீ மஹா காமேஶ்வரராகவும் விளங்கி ஆதி தேசிகத்தன்மையை வஹித்துள்ளனனென்பது நிர்விவாதமாம். (61)

छत्रं चामरयोर्युगं व्यजनमादर्शस्तथा मर्दलो
भेरीशङ्खमृदङ्गकाहलकलागीतं च नृत्यं तथा ।
साष्टाङ्गं प्रणतिः स्तुतिर्बहुविधा चैतत्समस्तं मया
संकल्पेन समर्पितं तव शिवे संतुष्टये कल्पताम् ॥

उच्चेषु नीचेष्वपि दर्शनेषु प्रकाशते देवि तव स्वरूपम् ।
समुज्ज्वलत्येव हि यज्ञवाटे मातङ्गवेश्मन्यपि जातवेदाः ॥

इति त्रैपुरं श्रीमहिम्नं मनोज्ञं
मया व्याकृतं प्रीतये सिद्धये च ।
सतां साधकानां सुविद्यैः सुधीरै-
श्चिरं लोकनीयं हृदा निश्चलेन ॥

यत्रैव यत्रैव मनो मदीयं तत्रैव तत्रैव तव स्वरूपम् ।
यत्रैव यत्रैव शिरो मदीयं तत्रैव तत्रैव पदद्वयं ते ॥

इति श्रीदुर्वाससा मुनीन्द्रेण विरचितस्य श्रीमत्त्रिपुरसुन्दरीमहिम्नस्तोत्रस्य
रहस्यार्थविमर्शिन्याख्यद्राविडव्याख्या समाप्ता ॥